24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 28 மார்கழி 08ஆம் நாள் திங்கட்கிழமை 24 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

# வெள்ள இடரால் 56,000 பேர் பாதிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.24

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 17 ஆயிரத்து 559 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 867 பேர் பாதிப்படைந்துள்ளனர். அவர்களில் 4 ஆயிரத்து 398 குடும்பங்கள் 58 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் கன மழை பெய்தது. அதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் வெள்ளத்தில் மூழ்கின. அந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களிலும் மக்கள் இடர்களை எதிர்கொண் >> 06

## பொதுத் தேர்தல் நடத்த ஆராய்கின்றது ஐ.தே.க.

### மைத்திரி முரண்படுவதையடுத்து பல தரப்புகளுடன் பேச்சு

**கொழும்பு, டிசெம்பர் 24**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து அரசைக் கொண்டு நகர்த்துவதில் நெருக்கடிகள் தோன்றுவதால் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருகின்றது என்று அந்தக் கட்சி வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கு முன்னேற்பாடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையின் கீழ் உருவாக்கப்படவுள்ள தேசிய ஜனநாயக முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும் நடவடிக்கைளை ஐக்கிய தேசியக் கட்சித் தலைமை விரைவுபடுத் தியுள்ளது என்றும் அறிய முடிகின்றது. >> 06

## ஐ.மு.சு.மு. நிறைவேற்று குழுக் கூட்டம் இன்று

கொழும்பு, டிசெ.24

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில், அரச தலைவர் செயலகத்தில் காலை 8.30 மணியளவில் கூட்டம் நடைபெறும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். >> 06

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப் பணிப்பு

### அரச தலைவர் பிறப்பித்தார்

கொழும்பு, டிசெ.24

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்குங்கள் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். >> 06

## இடர் நிலமையை ஆராய நேரில் வரவுள்ளார் மத்தும

யாழ்ப்பாணம், டிசெ.24

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் கடும் மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார நேரில் வரவுள்ளார் என்று தெரிவிக் கப்படுகின்றது. >> 06

## ஸ்கொட்லாண்ட் யார்ட்டிடம் கொலை முயற்சி விசாரணை!

### *மைத்திரி ஆலோசிக்கிறார் எனத் தகவல்*

கொழும்பு, டிசெ.24

தன் மீதான கொலை முயற்சி தொடர்பான விசாரணைகளை குற்றவியல் விசாரணைகளில் நிபுணத்துவம் மிக்க ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸாரிடம் ஒப்படைப்பது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறி >> 22

அரசியல் குழப்பத்தால் நிறுத்தப்பட்ட

## வெளிநாட்டு உதவிகளை மீளப் பெறப் பேச்சுக்கள்

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.24

நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களை அடுத்து இடைநிறுத்தப்பட்ட வெளிநாட்டு நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக >> 06

## அமைச்சர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க மைத்திரியுடன் பேச்சு

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.24

அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையை 32ஆக அதிகரிப்பது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபாலவுடன் பேச்சு நடைபெறுகின்றது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரி >> 06

## கூட்டமைப்பின் செயற்பாடு ஐக்கியத்துக்கு வழிவகுக்கும்

### லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.24

அரசமைப்பைப் பாதுகாப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்ட விதம் ஐக்கியத்துக்கு வழிவகுத்துள்ளது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித் >> 06

## மரம் வீழ்ந்து சிறுமி காயம்

யாழ்ப்பாணம், டிசெ.24

முல்லைத்தீவு, மாமூலையில் வீட்டு முற்றத்தில் நின்ற பட்ட மரம் பாறி வீழ்ந்ததில் 3 வயதுச் சிறுமி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அண்மைய நாள்களில் மழை பெய்திருந்த நிலையில் வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி மீது அருகில் இருந்த மரம் திடீரென பாறி வீழ்ந்துள்ளது. அதன் >> 06

## ஐ.தே.முவின் புதிய கூட்டணி தொடர்பில் 27 அன்றே முடிவு

கொழும்பு, டிசெ.24

ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான புதிய கூட்டணி தொடர்பாக எதிர்வரும் 27ஆம் திகதி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 27ஆம் திகதி செயற்குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்ன >> 06

## கடலில் மூழ்கி மீனவர் சாவு

யாழ்ப்பாணம், டிசெ.24

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் >> 23



# மணல், மரம் கடத்திய டிராக்டர்கள் சிக்கின

யாழ்ப்பாணம், டிசெ.24
சாவகச்சேரி, பொலிஸ் பிரிவில் கடந்த 4 நாள்களுக்குள் மணல் மற்றும் மரக்கடத்தல்களில் ஈடுபட்ட 5 உழவியந்திரங்கள் மற்றும் பாரவூர்தி என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
தனங்கிளப்பில் இருந்து நுணாவிலுக்கு 4 உழவியந்திரங்களில் மணல் கடத்தல் இடம்பெறுகின்றது என்று கிடைத்த தகவலுக்கு அமைய பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர். மணல் கடத்தியவர்கள் பொலிஸாரைக் கண்டதும் உழவியந்திரங்களை கைவிட்டுத் தப்பித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேம்.எம்.கே. கோணார தெரிவித்தார்.
அனுமதிப்பத்திரம் இன்றி பாரவூர்தி மற்றும் உழவியந்திரங்களில் கடத்தப்பட்ட மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-8)

# தேர்தலும் சட்டவிரோதமே

## லக்ஸ்மன் கிரியெல்ல கூறுகிறார்

கொழும்பு, டிசெ.24
நாடாளுமன்றக் கலைப்பு சட்டவிரோதமானது என்றால் அதன் பின்னர் வரும் தேர்தலும் சட்டவிரோதமானதே என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.



கண்டியில் நேற்று மாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
பெரும்போராட்டம் ஒன்றை முன்னெடுத்தோம். அதன் களைப்பு இன்றும் உள்ளது. நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை ஆரம்பிக்கப்பட்டு 40 வருடம் ஆகின்றது.
முதற்தடவையாக நிறைவேற்று அதிகாரமுடைய அரச தலைவர் எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அது எம் அனைவருக்கும் பெரும் பலம். அந்தத் தீர்ப்பில் ஒரு சரத்து உள்ளது.
அதாவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என்றால் அதன் பின்வரும் தேர்தலும் சட்டவிரோதமானது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. 19 ஆவது அரச அமைப்புக்கு அமைய நீதிமன்றத்துக்கு சுயதீனமாக செயற்பட அனுமதி வழங்கியமையே இதன் வெற்றி.
தற்போது நாடாளுமன்றமும், நிறைவேற்று அதிகாரமும், நீதிமன்றமும் சமநிலையில் உள்ளன. அந்தந்த பிரிவுகளில் அவரவருக்கு ஏற்ற கடமைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இது நாட்டுக்கு சிறந்தது - என்றார். (ற)

# பிரகாஸின் இடத்துக்கு தவப்பிரகாசம் பரிந்துரை

யாழ்ப்பாணம், டிசெ.24
வலி.தெற்குப் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் வெற்றிடத்துக்கு அன்னதானம் தவப்பிரகாசம் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முன்னாள் தவிசாளர் தி.பிரகாஸ் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில் உறுப்பினர் பதவியை இழந்தார். அதையடுத்து வலி. தெற்குப் பிரதேச சபையில் கூட்டமைப்பின் சார்பில் ஓர் உறுப்பினர் வெற்றிடம் ஏற்பட்டது. அந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையிலேயே புதிய உறுப்பினர் தேர்வு செய்து அரச இதழ் வெளியீடு செய்யும் வகையில் புதிதாக தவப்பிரகாசத்தின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ற-105)

# தனிநபர் விருப்புக்காக பொலிஸ் செயற்படாது

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.24
தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்காக பொலிஸார் ஒருபோதும் செயற்பட மாட்டார்கள் என்று பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.
கம்பகா, வேயங்கொடவில் நேற்று நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகயில் ஈடுபட்டுள்ள பொலிஸார் தனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்காக ஒருபோதும் செயற்படுவதில்லை.
பொலிஸ் திணைக்களம் சுயாதீனமாகவே செயற்பட்டு வருகின்றது. எவருக்கும் கட்டுப்பட்டுச் செயற்படவில்லை.



நாட்டில் ஏற்பட்ட அசாதாரண அரசியல் நிலைமைகளிலும் பொலிஸார் நடுநிலையாகவே தமது பணிகளை முன்னெடுத்தனர். கூட்டு அரசின் காலப்பகுதியிலும் பொலிஸ் திணைக்களம் சுயாதீனமாகவே செயற்பட்டு வந்தது - என்றார். (ற)



மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் கோவில் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது. (ற–9)

# தடைப்பட்ட அபிவிருத்திகள் விரைவாக ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.24
கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் நாம் செய்த அபிவிருத்திகள் யாவும் தடைப்பட்டுள்ளன. அவற்றை மிக வேகமாக அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கவுள்ளோம் என்று மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.
ஹற்றன் நகரில் நேற்று அமைச்சர் பழனி திகாம்பரத்துக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நியாயம் எந்தப் பக்கம் இருக்கின்றதோ அங்கு திகா, மனோ, திலகர் ஆகியோர் உறுதியாக நின்றோம். அதனால் விட்டுச் சென்ற அமைச்சும் மீண்டும் கிடைத்துள்ளது.
கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் நாம் செய்த அபிவிருத்திகள் யாவும் தடைபட்டுள்ளன. அவற்றை மிக வேகமாக அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.
இதுவரை வீடுகள் அமைத்து வந்தோம் இப்போது மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்வதற்குத் தயாராக உள்ளோம். அதேவேளையில் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஹற்றன் நகர சபைக்குப் போட்டியிட்ட எமக்கு மக்கள் ஆதரவு பலமாக அமைந்தது. அதற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.
ஹற்றன் நகர அபிவிருத்தியில் இங்கு பிரதான வீதிகள் காா்ப்பெட் முறையில் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் - என்றார். (ற)

# வாசிப்பு மாத நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.24
இன்று திங்கட்கிழமை இடம்பெறவிருந்த வலி. மேற்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி மாத தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் பரிசளிப்பு விழா மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது.
வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன் இவ்வாறு அறிவித்துள்ளார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்களின் பேரிடர் நிலைமைகளை கருத்தில் கொண்டு நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்று தவிசாளர் அறிவித்துள்ளார்.
மேற்படி நிகழ்வு தொடர்பான விடயம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ற-50)

# கிறிஸ்மஸ் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.24
யாழ்ப்பாணம் சிறி சத்திய சாயி பன்னாட்டு நிறுவனத்தின் கிறிஸ்மஸ் தின நிகழ்வு நாளை (செவ்வாய்க்கிழமை) மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம், சேர். பொன் இராமநாதன் வீதியிலுள்ள நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ் ஆயர் இல்ல பங்குத்தந்தை ஆர்.ஓ. டெரன்ஸ் நத்தார் சிறப்புரை வழங்கவுள்ளார். சர்வமதப் பாடல்கள் இடம்பெற்று கலைநிகழ்வுகளும் இடம்பெறும் என அறிவித்துள்ளனர். (ற)

# தமிழ் கூட்டமைப்பின் ஆதரவுடன் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்

## ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிப்பு

வவுனியா, டிசெ.24
கூட்டமைப்பின் ஆதரவுடன் வந்த தற்போதைய அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவசியம் தீர்க்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.
வவுனியா, பழைய கற்பகபுரத்தில் நேற்றுக் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினது பூரண ஒத்துழைப்புடன் ஆட்சிக்கு வந்திருப்பதால் அவர்கள் அவசியம் தமிழ் மக்களது பிரச்சினைகளில் அவதானம் செலுத்தவேண்டும்.
மீதமுள்ள ஆட்சிக்காலத்துக்குள் நிச்சயமாக எமது பிரச்சினைகள் குறித்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் நடவடிக்கைகளை உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு முன்னெ



டுக்கவேண்டும்.
தற்போது எமக்கு இருக்கின்ற மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், காணி விடுவிப்பு போன்ற விடயங்களில் காணப்படும் பிரச்சினைகளை எமது கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்னின்று தீர்வுகளைப் பெற வழியேற்படுத்த வேண்டும்.
எம்மால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய அரசுக்கு நாம் கூட்டாக இணைந்து அதிக அழுத்தங்களைக் கொடுப்பதன் ஊடாகவே எமக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார். (ற)

# பண்டிகைக்கால சுற்றிவளைப்பில் 1,400 பேர் கைது

கொழும்பு, டிசெ. 24
மதுபோதையுடன் வாகனத்தைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் 3 நாள்களில் ஆயிரத்து 400க்கும் அதிகமான சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வாகனப் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார். பண்டிகைக் காலத்தை முன்னிட்டு கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதிவரை சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், மதுபோதையில் வாகனம் ஓடினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**2,505 மில்லியன் ரூபாவை சாரதிகள் இழந்துள்ளனர்**

இந்தவருடத்தின் முதல் 10 மாதங்களில் வாகனப் போக்குவரத்து விதி மீறல் தொடர்பில் சாரதிகளிடமிருந்து 2 ஆயிரத்து 505 மில்லியன் ரூபா பணம் தண்டமாக அறவிடப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட மேலும் தெரிவித்தார். (4)

# மகசின் சிறையில் ஹெரோய்னுடன் ஒருவர் கைது

கொழும்பு, டிசெ. 24
மகசின் சிறைச்சாலையில் ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவரிடமிருந்து 4 கிராம் 690 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
அங்கு நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் போதைப் பொருள் மீட்கப்பட்டது.
கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 32 வயதான அவர் ஏற்கனவே 4 கிராம் ஹெரோய்ன் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டிலேயே கைது செய்யப்பட்டிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, பொரளைப் பகுதியில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 700 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதே பகுதியைச் சேர்ந்த 26 வயதானவரே அங்கு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

# உந்துருளி விபத்தில் இருவர் இறந்தனர்

கொழும்பு, டிசெ. 24
உந்துருளி விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
காலி - மாத்தறை வீதியில் கபுருகமுவ கங்கைஅருகாமையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.35அளவில் இது இடம்பெற்றது.
மாத்தறைநோக்கிஉந்துருளியில்பயணித்தவர்களேவேகத்தைக்கட்டுப்படுத்தமுடியாமல் வீதியில் உள்ள கம்பம் ஒன்றுடன் மோதுண்டனர்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.
இருவரும்படுகாயமடைந்தநிலையில்மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சைபயனளிக்காதுஉயிரிழந்துள்ளனர். கொடபொல பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் மேலும்தெரிவித்தனர். (4,222)

# பேருந்துக் கட்டணத்தை குறைக்க இன்று பேச்சு!

*5 வீதத்தால் குறைக்கலாம் என்று சங்கங்களின் சம்மேளனம் தெரிவிப்பு*

**கொழும்பு, டிசெ. 24**
**எரிபொருள் விலை, பல தடவைகள் குறைக்கப்பட்ட நிலையில், பேருந்துக் கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில், நிதி அமைச்சில் இன்று திங்கட்கிழமை பேச்சு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

இதுபற்றிய பேச்சுக்கு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் சம்மேளனத்தினர் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
ஒருலீற்றர்டீசலின்விலையை5ரூபாவாலும் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 10 ரூபாவாலும்கடந்தவியாழக்கிழமைநள்ளிரவுதொடக்கம் குறைக்கப்பட்டுள்ளது.
இதற்கு முன்னர் மூன்று சந்தர்ப்பங்களில் டீசல் விலை குறைக்கப்பட்டிருக்கிறது. கடந்த மாதம் முதலாம் திகதி டீசல் 7 ரூபாவாலும், கடந்த15ஆம்திகதிடீசல்விலை5ரூபாவாலும் குறைக்கப்பட்டது. கடந்தமாதம்30ஆம்திகதி பெற்றோல் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டது. அவ்வாறே டீசல் விலையும் குறைக்கப்பட்டது.
இந்த நிலையிலேயே பேருந்துக் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் இன்று திங்கட்கிழமை பேச்சு நடத்தப்படவுள்ளது. பேருந்துக் கட்டணக் குறைப்புக்கான வீதம் தொடர்பில் இணக்கம் எட்டப்படலாம் என்று தனியார் பேருந்து சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
இதுவரை டீசலின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதிபலனை, பயணிகளுக்குப் பெற்றுக்கொடுக்கத் தயாராகவுள்ளோம் என்று சங்கத்தின் தலைவர் கெமுனுவிஜேரத்னதெரிவித்துள்ளார். அதன்படிதனியார்பேருந்துக்கட்டணத்தை5வீதத்தால்குறைக்கமுடியும்என்பதைஉறுதியாகக் கூறமுடியும்என்றுதனியார்பேருந்துசங்கங்களின் சம்மேளனச்செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார். (4)

# பதுளையில் 16 விடுதிகளில் போதைப் பொருள்கள் மீட்பு



கொழும்பு, டிசெ. 24
பதுளையில் தனியாருக்குரிய 16 உல்லாச விடுதிகளின்உரிமையாளர்களுக்குஎதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கலால்திணைக்களம் தெரிவித்தது.
வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு மதுபான வகைகள்உள்ளிட்டபோதைப்பொருள்களை வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டிலேயே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
சுமார் 18 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியான மதுபானவகைகள், போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன. விடுதி உரிமையாளர்களுக்கு எதிராக பண்டாரவளை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பதுளை மாவட்ட கலால்திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார். (4)

# முஸ்லிம் சமய, கலாசார அமைச்சர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

முஸ்லிம்சமயகலாசாரம்மற்றும்தபால்துறைஅமைச்சர் எம். எச். ஏ. ஹலீம் தனது அமைச்சில் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.
நிகழ்வில் முன்னாள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி, அமைச்சின் செயலாளர் ஆர். எம். டி. மீகஸ்முல்ல, தபால் அதிபர் ரஞ்ஜியத் ஆரியரட்ன மற்றும் பௌத்த, முஸ்லிம் சமய பெரியார்கள், அக்குறணைப் பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்உள்ளிட்டபலர்கலந்துகொண்டனர்என்று தெரிவிக்கப்பட்டது. (4)





# சிவனடியார்கள் செல்லும்வழியில் மாடு வெட்டி எச்சங்கள் பரவல்

## திருகோணமலையில் இந்த அராஜகம்

கொழும்பு, டிசெ. 24
திருகோணமலை விநாயகர் ஆலயத்துக்கு அருகில் மாடு வெட்டப்பட்டு,அதன் எச்சங்கள் வீதியில் வீசப்பட்டுள்ளன என்று கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.
திருகோணமலை புற நகர்ப்பகுதியில் உள்ள நடேசர் ஆலயத்தில் ஆருத்ரா தரிசனம் காணச்சிவனடியார்கள்செல்லும் பாதையில் இவை காணப்பட்டன. நேற்று இவற்றைக் கண்டு பக்தர்கள் கடும் விசனம் தெரிவித்தனர், கவலை தெரிவித்தனர்.
பசுவின் தலை மற்றும் அவயங்களே வீதியில்வீசப்பட்டிருந்தன. இந்தவிசமத்தனமானசெயற்பாடுசிவனடியார்களின் மனதை - இந்துக்களின்மனதைப்புண்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று அவர்கள் சுட்டிக்காட்டினர். இத்தகைய அராஜகங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள்கோரினர். (4,222)

# போதனாசிரியருக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு, யாழ்ப்பாணப் பிராந்தியபயிற்சிநிலையத்தில்வெற்றிடமாகவுள்ளபொதுச்சுகாதாரப்பரிசோதகர் போதனாசிரியர் பதவிக்குத் தகைமையுள்ள தரம் II பொதுச்சுகாதாரப் பரிசோதகர் அல்லது உயர்தர அலுவலரிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளார்.
விண்ணப்பங்களை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஊடாக அனுப்பவேண்டும்.
களுத்துறைதேசியசுகாதாரவிஞ்ஞான நிறுவனத்தினரால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்போதனாசிரியர்பதவிக்கான ஆறு மாதங்கள் கொண்ட பயிற்சியைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன் அறிவித்துள்ளார். (4,9)

# சுகாதாரத்துறை சம்பந்தப்பட்டவர்கள் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தல்

## கிளிநொச்சி மாவட்டச் செயலர் விடுத்துள்ளார்

**யாழ்ப்பாணம், டிசெ. 24**

**கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர் காரணமாகச் சுகாதார நெருக்கடி ஏற்பட்டால் அதனை எதிர்கொள்ளச் சுகாதாரத் திணைக்களத்தினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் பிராந்திய சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் சகல குளங்களும் வான்பாய்கின்றன. இரணைமடுக் குளத்து நீரும் அதிகளவில் வெளியேறுகின்றது. மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. குடிதண்ணீர்க் கிணறுகள் பலவற்றுக்குள் வெள்ளம் சென்றுள்ளதால் அத்தகைய கிணறுகளிலிருந்து தண்ணீரைப் பெற முடியாத இக்கட்டானநிலைஏற்பட்டுள்ளது.

**கடும் குளிர்**

வெள்ளம் தேங்கியுள்ள பகுதிகளில் குளிர் அதிகமாகக் காணப்படுகிறது. இதனாலும் மக்களுக்குக் குறிப்பாகச் சிறார்களுக்கு ஆரோக்கியக் குறைபாடு ஏற்படலாம்.

**விசக் கிருமிகள்**

பற்றைகள், நிலங்கள் , காடுகள் அனைத்துப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்கியுள்ளதால் விச ஜந்துக்களான பாம்பு, தேள் உள்ளிட்டவை வெள்ளத்துடன் வரவாய்ப்புள்ளன. நுளம்பு பெருகவும் வாய்ப்புள்ளது. அவற்றால் சகலருக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

பாதைகள் பல தடைப்பட்டுள்ளன. அவசரப் பொருள் கொள்வனவு, மருத்துவமனைகளுக்குச் செல்லும் பாதைகளிலும் தடைகள் ஏற்பட்டுள்ளன.

பாதிப்பு ஏற்படுமானால் சிக்கல் வரலாம் என்று கருதப்படுவதால் மேற்கண்ட அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. எனவே பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருத்துவர்கள், இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் மாவட்டச் செயலர் கூறியுள்ளார்.

"மாவட்டச் செயலரின் அறிவுறுத்தல் கிடைத்தது. மருத்துவ சேவைகள் தடையின்றி இடம்பெறுவதற்கான சகல கண்காணிப்புக்களும் இடம்பெறுகின்றன. இதுவரை எங்கும் அதிகமான நோயாளர் என்ற நிலமை உருவாகவில்லை" என்று கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சி. குமாரவேல் தெரிவித்தார்.

இதுதவிர, தர்மபுரம் பிரதேச மருத்துவமனைக்குள் நேற்றுமுன்தினம் வெள்ளம் புகுந்ததால் மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டன. நோயாளர்கள் சகலரும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவம, னைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இன்றும் (நேற்று) வெள்ளம் வழிந்தோடவில்லை.

அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு முறிகண்டி ஊடாகச் செல்லும் பாதை முற்றாகத் தடைப்பட்டுள்ளது. எனினும் கோணாவில் ஊடான போக்குவரத்துப் பாதிக்கவில்லை. சுகாதாரப் பணிகள் வழமைபோன்று இடம்பெறுகின்றன - என்றும் மருத்துவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு மேலதிக சிகிச்சை தேவைப்படின் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படுவர் - என்றார். (4,105)

## தொடர்பு துண்டிக்கப்பட்டோருக்கு உதவ எரிபொருள் வழங்குங்கள்





கிளிநொச்சி, டிசெ. 24

கிளிநொச்சியில் மழை மற்றும் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி, புளியம்பொக்கணை நாகேந்திரா வித்தியாசாலையில் 500 பேர் வரையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவிப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு படகுகள், உழவியந்திரங்களுக்கான எரிபொருள் தேவை ஏற்பட்டுள்ளது. அவற்றை வழங்க முன்வருமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

புளியம்பொக்கணையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கிளிநொச்சி, புளியம் பொக்கணை நாகேந்திரா வித்தியாசா லையில் 500 வரையான பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு உணவு மற்றும் குடிதண்ணீர் என்பன வெளியிடங்களில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு வழங்கப்படுகின்றன. இந்தக் கிராமத்துக்கும் வெளியிடங்களுக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. வள்ளங்கள் மற்றும் உழவியந்திரங்கள் மூலமாகவே போக்குவரத்துக்கள் இடம் பெற்று வருகின்றன. இத்தகைய பகுதிகளிலுள்ள 3 உழவியந்திரங்கள் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும் அவற்றுக்கான எரிபெர்ருளுக்காகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. எவராவது எரிபொருள் விநியோகித்தால் பெரும் உதவியாக இருக்கும் என்று உழவியந்திரச் சாரதிகள் தெரிவித்தனர். (4,21)

## உதவிப் பொருள்களை வழங்க விரும்புவோர் இன்று தரவும்!

### *யாழ்.வணிகர் கழகம் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 24

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் உடுபுடவைகளை வழங்க விரும்பும் யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்கள் வணிகர் கழக பணிமனையில் இன்று அவற்றை வழங்க முடியும் என்று யாழ்ப்பாண வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெள்ளப்பெருக்கால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தமது இருப்பிடங்களைவிட்டு முகாம்கள் பாடசாலைகள், ஆலயங்களில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு யாழ்ப்பாண வர்த்தகர்கள் சார்பில் யாழ்ப்பாண வணிகர் கழகம் இன்று பொருள்களைச் சேகரித்து வழங்கவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ விரும்பும் வர்த்தகர்கள் உலருணவுப் பொருள்கள், உடுபுடவைகள் போன்றவற்றை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிதியுதவி செய்ய விரும்புபவர்களும் எமது அலுவலகத்தில் கொண்டு வந்து தரமுடியும். பொருள்களைத் துரிதமாகச் சேகரிக்கும் முகமாக யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பிரதிநிதிகள் இன்று யாழ்ப்பாண நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கும் செல்லவுள்ளனர் - என்றார். (8)

## பாதிக்கப்பட்டோருக்கு உதவுவோர் செயலகத்துடன் தகவல் பரிமாறவும்

கிளிநொச்சி, டிசெ. 24

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களில், நகரை அண்மித்துள்ளவர்களுக்கே உதவிப் பொருள்கள் சென்றடைகின்றன.

ஏனையவர்களுக்கும் உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதால் அரசியல் கட்சிகள், தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் இடர் முகாமைத்துப் பிரிவுடன் தொடர்புகொண்டு தகவல்களைப்பரிமாறி பொருள்களை வழங்குங்கள் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உதவிகள் வழங்குபவர்கள் அனைவரும் ஒரே வகையான உதவிகள் வழங்குவதனைத் தவிர்க்கும் வகையிலும் மக்களின் தேவைகளைக் கருத்தில் எடுத்து எல்லா மக்களுக்கும் உதவிகள் சென்றடைவதனை நோக்காகக் கொண்டும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையங்களுடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பரிமாறி உதவிப் பொருள்களை வழங்குங்கள் என்று செயலர் மேலும் கோரியுள்ளார். (4,214)

## மன்னார் - புத்தளம் வீதி மூடப்பட்டுள்ளது

மன்னார் - புத்தளம் முதன்மை வீதி மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே கல்பிட்டி, புத்தளம் பகுதிகளிலிருந்து மன்னார் செல்லும் பயணிகள் உட்பட அங்கு தேவைகருதிச் செல்லும் பயணிகளும் இதைக் கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எளுவங்குளம் பகுதியில் கலா ஓயா பெருக்கடுத்துள்ளதால் இந்தப் பாதை மூடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழை காரணமாகவே கலா ஓயா பெருக்கடுத்து வீதியை மேவி வெள்ளம் பாய்ந்துகொண்டிருக்கிறது என்று மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4,222)

## போக்குவரத்தை சீர்செய்த சபையினர்



கிளிநொச்சி, டிசெ. 24

சீரற்ற காலநிலையால் நேற்றுக்காலை ஏ9 வீதியின் குறுக்காக வீழ்ந்த பெரு மரத்தை அகற்றும் நடவடிக்கையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையினர் ஈடுபட்டனர்.

அந்த மரம் வீழ்ந்ததால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. பிரதேச சபையினர் மற்றும் அந்தப் பகுதி இளைஞர்கள் இணைந்து மரக்கிளைகளை வெட்டி அகற்றிப் போக்குவரத்தைச் சீர் செய்தனர்.

தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் கஜன் உறுப்பினர்கள் ரமேஷ், கோகுல்ராஜ் ஆகியோர் உட்படப் பலர் அந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (4)

## கழிவகற்றல், சுத்திகரிப்புக்கு அலைபேசியில் அழைக்கலாம்

கிளிநொச்சி, டிசெ. 24

கரைச்சி, கண்டாவளைப் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களுக்குக் கரைச்சிப் பிரதேச சபை கழிவகற்றல் மற்றும் சுத்திகரிப்புப் பணிகளை வழங்குகிறது.

இத்தகைய உதவிகள் தேவையானோர் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளரின் அலைபேசி - 0773480408, செயலரின் அலைபேசி 0702919200 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

19 நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்ற குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கான கழிவகற்றல் மற்றும் சுத்திகரிப்பு பணிகளிலும், மீட்கப்பட வேண்டியவர்களை மீட்கும் பணிகளிலும் பிரதேச சபையினுடைய உத்தியோகத்தர்களும் சபையின் உறுப்பினர்களும், பணியாளர்களும் ஈடுபட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,6)

### *பாதிக்கப்பட்டோருக்காக*

## மன்னார் மைதானத்தில் பொருள்கள் சேகரிப்பு

மன்னார், டிசெ. 24

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன்னார் மாவட்ட மக்களிடம் அத்தியாவசியப் பொருள்களைச் சேகரிக்கும் பணியில் மன்னாரிலுள்ள சமூக ஆர்வலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மன்னார் நகரசபைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தில் பொருள்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். நேற்றுத் தொடக்கம் உதவிப் பொருள்கள் சேகரிக்கப்படுகின்றன. மக்கள் உதவ முன்வாருங்ள் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4,213)



## 91 குடும்பங்களுக்கு சிவன் அறக்கட்டளை பொருள்கள் வழங்கியது

யாழ்ப்பாணம், டிசெ. 24
வெள்ளப் பாதிப்பால் இடம்பெயர்ந்து கிளிநொச்சி பாரதிபுரம் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள 91 குடும்பங்களுக்கு ஒரு தொகை உலர் உணவுப் பொருள்களைச் சிவன் அறக்கட்டளை வழங்கியது. வள்ளுவர்புரம் கிராம அலுவலரிடம் பொருள்கள் கையளிக்கப்பட்டன.
சிவன் அறக்கட்டளையின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதத்தின் அனுசரணையுடன் மாற்றத்துக்கான இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4)



கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை உரும்பிராய் இளைஞர்களும் அந்தப் பகுதி மக்களும் இணைந்து நேற்று வழங்கினர். (8)

# வாக்குறுதிகளைநிறைவேற்றியிருந்தால் மகிந்தவுக்கு ஆதரவு வழங்கியிருப்போம்

## சூழ்ச்சி செய்து தானாகக் குட்டிச்சுவராகிவிட்டார் என்று கூறுகிறார் கூட்டமைப்பின் சிறிநேசன் எம்.பி.

மட்டக்களப்பு, டிசெ. 24

**மகிந்த ராஜபக்சதனது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் அவருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருக்கும். சூழ்ச்சிசெய்து ஆட்சியைக் கைப்பற்றாமல் ஜனநாயக ரீதியில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தாலும் ஆதரவு வழங்கியிருப்போம்.**

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு ஐயங்கேணிப் பாடசாலை வீதிக்கு20லட்சம்ரூபாஒதுக்கீட்டில்கொங்கிறீட் இடும்பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் அதைச் சீரமைக்க முன்மொழிந்திருந்தார். அதில் கலந்து கொண்டுஉரையாற்றுகையில்அவர்மேலும் தெரிவித்ததாவது:
கடந்தகாலத்தில்எமதுஉறவுகள்கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். சிறைகளில் வாடிக்கொண்டிருக்கின்றனர். பல பெண்கள் விதவையாக்கப்பட்டுள்ளனர். இந்த நிலமைகளைஉருவாக்கியமகிந்தராஜபக்சவைநாங்கள்எப்படிஆதரிப்பது?
அவர் அரசதலைவராகப் பதவியேற்றதும் 13 பிளஸ் தருவதாகக் கூறினார். 13 பிளசும் இல்லை 13 மைனசும் இல்லாத நிலமை அவரது ஆட்சிக்காலத்தில் காணப்பட்டது.
எமக்குப் பல வாக்குறுதிகளை வழங்கிவிட்டு போரில் வெற்றிபெற்றதும் எல்லாவற்றையும் வென்றுவிட்டோம் என்ற இறுமாப்போடு நடந்துகொண்டார். அதனால் மகிந்த ராஜபக்சவை நம்பமுடியாத சூழல் காணப்பட்டது.
தனதுஆட்சியைக்காப்பாற்றுவதற்காகவிலை கொடுத்து. பதவிகளைக் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொள்வனவு செய்யும்நடவடிக்கைளிலும்ஈடுபட்டிருந்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரைபணத்துக்காகவோபதவிகளுக்காகவோ



அடிபணியமாட்டார்கள் என்ற அடிப்படையில் நாங்கள் ஒன்றாக ஜனநாயகத்தின் பக்கம் நின்றோம். ஆனால் ஒருவர் மாத்திரம் தவறிவிட்டார். அது அவரது பக்கமாகச் சிந்திக்க வேண்டிய விடயம்.
மகிந்தராஜபக்சதனதுஆட்சிக்காலத்தில்தமிழ் மக்களுக்கு வழங்கிய உத்தரவாதங்களை நிறைவேற்றியிருந்தால் அவருக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருக்கும். அதுமாத்திரமின்றி சூழ்ச்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றாமல் ஜனநாயக ரீதியில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தாலும் ஆதரவு வழங்கியிருப்போம்.
இவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் பலமுறை கொண்டுவரப்பட்டு நிறைவேற்றியபோதும் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தச் சூழ்ச்சிக்காரர்களுக்குநீதிமன்றம்சரியானதீர்ப்புவழங்கியிருக்கிறது. அந்தவகையில்இவர்களைநாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.
இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, மக்கள்விடுதலைமுன்னணிபோன்ற கட்சிகள் ஒரே அணியில் நின்று நீதியைப் பெற்றுக்கொள்ள உழைத்திருந்தன.
வடக்குகிழக்கு மாகாணங்களில்அபிவிருத்தியைச்சிறிதளவும்அனுபவிக்காதபலபகுதிகள் காணப்படுகின்றன. எமது பகுதியின் அபிவிருத்திக்கு அரசு கூடுதலான முக்கியத்துவம் வழங்க வேண்டும். இது தொடர்பாக அரசுடன் கலந்துரையாடியுள்ளோம்.
நீண்டகாலமாக நிலைபெற்றுள்ள அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விதமாக அரசியல் தீர்வுத் திட்டத்தை நாங்கள் வலியுத்தியுள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பொருத்தமான நீதி வழங்குதல், அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீளக்கையளித்தல், வேலை வாய்ப்புக்களைப்பெற்றுக்கொடுத்தல்போன்ற பல்வேறுநடவடிக்கைகளைத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்புமுன்னெடுத்துள்ளது. அதில்நாங்கள்வெற்றிகாண்போம்-என்றுநாடாளுமன்ற உறுப்பினர்சிறிநேசன்தெரிவித்தார். (4)

# சாவகச்சேரி நகரப் பகுதிகளில் பற்றை, பார்த்தீனியம் அதிகம்

## அழிக்குமாறு சபையிடம் கோரிக்கை

கொடிகாமம், டிசெ. 24
சாவகச்சேரிநகர ஆளுகைக்குஉட்பட்ட பல காணிகளில் பற்றைகள் வளர்ந்து கவனிப்பாரற்றுள்ளன. நச்சுத் தாவரமான பார்த்தீனியம் வளர்ந்து காணப்படுகின்றது. சமூக சீரழிவுகள் இடம்பெறுகின்றன. இவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதிமக்கள்கோரிக்கைவிடுக்கின்றனர்.
இதுபற்றியகோரிக்கைக்கடிதம்ஒன்றை நகரசபை உறுப்பினர் ம. நடனதேவன் சபையின்செயலாளருக்குஅனுப்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
வெற்றுக் காணிகளில் இரவில் மதுபானங்கள்அருந்துவோர்வீசிவிட்டுச்செல்லும் வெற்று ரின்கள், போத்தல்களில் மழைநீர்தேங்கி நுளம்புப்பெருக்கமும் அதிகரிக்கிறது. குடியிருப்பாளர்களுடன் மதுபோதையில்தர்க்கத்தில்ஈடுபடுகின்றனர். பற்றைக் காணிகளில் மறைந்திருந்துவீதியில்தனிமையில்செல்வோரிடம் வழிப்பறியில் ஈடுபடுகின்றனர்.
சாவகச்சேரி நகர சபை 12 வட்டாரங்களைக்கொண்டுள்ளது. சாவகச்சேரிநகர சபைக்கு உட்பட்ட பகுதியில்
ஒரேயொரு பொதுச் சுகாதாரப் பரிசோதகரே பணியில் உள்ளார். இந்த விடயத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.
இதுதொடர்பாகசுகாதாரபகுதியினரிடம் தொடர்புகொண்டபோது "கடந்த காலங்களில் நகரசபை 1, 2, 3 என்று மூன்று பிரிவுகளுக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். தற்போது சகலதும் ஒன்றாக்கப்பட்டு ஒருவெற்றிடம் மட்டும் இருப்பதால் ஒருவர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார்.
மேலும்ஒருபொதுச்சுகாதாரப்பரிசோதகரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்தும் பயனளித்திருக்கவில்லை.
சாவகச்சேரிநகரப்பகுதி12கிராமஅலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ள போதும்ஒரேயொருசுகாதாரப்பரிசோதகரே அனைத்துக் கடமைகளையும் மேற்கொண்டு வருகிறார். காணி உரிமையாளர்களின் விவரங்களைப் பெற்றுத்தந்தால்நடவடிக்கைஎடுக்கமுடியும்.
இரவு நேரங்களில் மதுபானங்களை அருந்திவிட்டுவெற்று ரின்கள், போத்தல்களை கண்ட இடங்களில் வீசிவிட்டுச் செல்பவர்களை மக்கள் இனங்கண்டு அவர்களைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டும். பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும். மக்கள் அலுவலர்களுக்குஒத்துழைப்புவழங்கினால்சிரமமின்றிநடவடிக்கையெடுக்க முடியும் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (4,159)

# கிடங்குகள் வெட்டுவதற்கு அச்சப்படவேண்டியுள்ளது!

## முகமாலை மக்கள் இப்படிக் கூறுகின்றனர்

கிளிநொச்சி, டிசெ. 24
முகமாலைப் பகுதிகளில் வெடிபொருள்கள் மீட்கப்படுகின்றமை ஆங்காங்கே இடம்பெறுவதால் நிலத்தில் கிடங்கு வெட்டப் பயப்படவேண்டியுள்ளது என்று அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கிராமம் முகமாலை. போர்க்காலத்தில் விடுதலைப்புலிகளும் படையினரும் முகாலையை தத்தமது வரையறை எல்லையாகக் கொண்டு ஏராளம் கண்ணிவெடிகளை விதைத்திருந்தனர்.
போரின் பின்னர் அந்த இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்கள் குடியமர்த்தப் பட்டு வருகின்றனர்.
முகமாலை தெற்கில் பாவனைக்குவிடுவிக்கப்பட்டகாணிகளில் விவசாய நடவடிக்கை, பூந்தோட்டம் வைக்க என்று பல்வேறுதேவைகளுக்கும்கிடங்குகள் வெட்டப்படுகின்றன. அதன் போதே வெடிக்காத நிலையில் குண்டுகள் வெளிக்கிளம்புகின்றன. மண்வெட்டி உள்ளிட்ட ஆயுதங்கள் அவற்றில் படும்போது குண்டுகள் வெடித்துவிடுமா என்று மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.
"வெடிபொருள்கள்அகற்றப்பட்டபின்னரேஅந்த இடங்கள் விடுவிக்கப்பட்டாலும் ஆழமான பகுதிகளிலோ மேற்புறமாகவோ குண்டுகள் காணப்படின் அதுபற்றிஅறிவிக்குமாறுஅந்தப் பகுதி மக்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள், ஆலோசனைகள் வழங்கியுள்ளோம். விழிப்புணர்வுகளைமக்கள்கவனத்தில்கொள்ளுங்கள்" என்று அந்தப்பகுதியில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்ட ஹலோறெஸ்ற் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். (4,6)



## பொதுத்தேர்தல்...

ஐக்கிய தேசியக் கட்சியினர், சுதந்திரக் கட்சியில் இருந்து அரசுடன் இணைந்து கொண்டவர்கள் எனப் பரந்துபட்ட அளவில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்று வருகின்றது.

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானங்களை எடுக்கின்றார். இந்த நிலைமையில் அரசைக் கொண்டு நகர்த்தினால் நெருக்கடிகள் அதிகரிக்கக் கூடும். பொதுத் தேர்தல் ஒன்றைத் தற்போது நடத்தினால் ஐக்கிய தேசியக் கட்சியால் வெற்றியடைய முடியும் என்று அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளனர் என்றும் அறிய முடிகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி தற்போது அரசமைத்துள்ள நிலையில் அரச தலைவருக்கும், அரசுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டவண்ணம் உள்ளன. அண்மையில் அமைச்சரவை நியமிக்கப்பட்டபோதும் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்மொழியப்பட்ட சிலரை அமைச்சர்களாக நியமிப்பதற்கு அரச தலைவர் மறுப்புத் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.

சில முக்கிய அமைச்சுக்களைத் தன்வசம் வைத்துக்கொள்வது என்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பிடிவாதமாக உள்ளமை ஐக்கிய தேசிய முன்னணியைச் சினம் கொள்ள வைத்துள்ளது என்றும் தெரியவருகின்றது.

புதிய அரசு பதவியேற்றாலும், புதிய அரசின் மீது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அழுத்தம் தொடரும் என்றும், புதிய அரசுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டார் என்றும் மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணக்கார அண்மையில் தெரிவித்திருந்தார். (ற-10)

## ஐ.மு.சு.மு.....

கட்சியில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும், தேர்தல் விடயங்கள் தொடர்பாகவும் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களுக்கான கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது என்றும், அதில் புதிய அமைப்பாளர்களை நியமிப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## கூட்டமைப்பின்...

துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து அரசில் இணைய இன்னுமொரு தொகுதியினர் வரவுள்ளனர். தற்போது எமது அரசில் இணைந்து கொண்டவர்கள் அமைச்சுப் பதவியை எதிர்பார்த்து இணையவில்லை. எம்முடன் அரசியல் பயணித்தைத் தொடரவே அவர்கள் வந்துள்ளார்கள். அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்குவது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை.

தற்போது நாட்டு மக்களுக்கு அரசமைப்புத் தொடர்பில் சிறந்த விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களால் ஒருமுறையேனும் நாட்டு மக்கள் அரசமைப்பை வாசித்திருப்பார்கள். அமைச்சுக்களுக்கான பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பது தலைமை அமைச்சருக்குரிய கடப்பாடு என்பதையும், அதை இறுதி செய்யும் கடமை அரச தலைவருக்கு உரியது என்றும் மக்கள் அறிந்திருப்பார்கள்.

தற்போது சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரிக்குக் கூட இவற்றில் தலையிடும் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சட்டவாக்கம், நீதி மற்றும் நிறைவேற்றுத் துறைக்குச் சமமான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன. எமது அரசு உறுதியான பயணத்தை எதிர்காலத்திலும் மேற்கொள்ளும்.

வரவு - செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரை மக்கள் எதிர்பாராத சலுகைகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம். நாட்டில் தற்போது ஒரு எதிர்க்கட்சித் தலைவரே உள்ளார். மகிந்த தரப்பினர் வேறு ஒரு கட்சிக்குச் சென்றுள்ளதால் அவர்களுக்கான சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமை தானாகவே இரத்தாகும். அது தொடர்பான நீதிமன்றைக் கூட நாட வேண்டிய தேவை கிடையாது. சபாநாயகரே இந்த விடயத்தில் இறுதி முடிவை எடுக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெற்குக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதை முக்கியமான விடயமாகக் கருத வேண்டும். அவர்கள் கடந்த காலங்களில் இப்படியான கொள்கைகளில் இருக்கவில்லை. நாடாளுமன்றில் அவர்கள் நாட்டின் அரசமைப்பைப் பாதுகாத்தார்கள். நாட்டின் ஐக்கியத்துக்கு இது முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டை நாம் முழுமையாக வரவேற்கின்றோம் - என்றார். (ற)

## மரம்...

கீழ் சிறுமி அகப்பட்டுப் படுகாயமடைந்தார். சிறுமி 8 மணியளவில் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு 12 மணிவரை சிகிச்சைகள் வழங்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ற-105)

## ஐ.தே.முவின்...

ணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேச்சு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்னர் தேர்தல்கள் திணைக்களத்தில் கட்சியின் பெயரைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (ற)

## வெள்ள...

டனர். வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரத்து 889 குடும்பங்களைச் சேர்ந்த 35 ஆயிரத்து 808 பேர் பாதிப்படைந்துள்ளனர். அவர்களில் 2 ஆயிரத்து 765 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 201 பேர் 22 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 254 குடும்பங்களைச் சேர்ந்த 19 ஆயிரத்து 841பேர் பாதிப்படைந்துள்ளனர். அவர்களில் ஆயிரத்து 631 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 765 பேர் 22 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் 38 குடும்பங்களைச் சேர்ந்த 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் குடாநாட்டில் 278 குடும்பங்களைச் சேர்ந்த 708 பேர் பாதிப்புக்குள்ளாகி இடம்பெயர்ந்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான உடனடி உதவிகள் இடர் முகாமைத்துவ நிலையத்தாலும், பொது அமைப்புக்களாலும், தன்னார்வத் தொண்டர்களாலும் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கான உடனடி உதவிகளை வழங்குங்கள் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (ற-105.21)

## பாதிக்கப்பட்ட...

நிலைமை வழமைக்குத் திரும்பும்வரை பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குங்கள் என்றும், அதற்கான நிதியை மாவட்டச் செயலாளர்களுக்கு வழங்குங்கள் என்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட துறைசார் பிரிவுகளுக்கு அரச தலைவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர், மாவட்டச் செயலாளர்கள், இராணுவத் தளபதி, இடர் முகாமைத்துவ நிலையம் ஆகிய தரப்புகளுடன் இணைந்து உதவிகள் வழங்கும் நடவடிக்கையைத் துரிதமாக மேற்கொள்ளுங்கள் என்றும் அரச தலைவர் பணித்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் வெள்ளத்தால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அங்குள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைத் துரித கதியில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அரச தலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை, அரச தலைவரின் பணிப்புக்கு அமைய வடக்கு ஆளுநரின் வழிகாட்டலின்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கும் நடவடிக்கைள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் பணிக் குழுவினர் வெள்ள நிலைமை நீங்கும் வரை தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## இடர்...

வடக்கு மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் பெய்த கடும் மழையாலும், அதனால் ஏற்பட்ட வெள்ளத்தாலும் 44 ஆயிரம் பேர் வரையில் பாதிப்படைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களே அதிகளவு பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

இடர் நிலைமைகளை ஆராயும் பொருட்டு அமைச்சர் நேரில் வரவுள்ளார் என்றும், உடனடித் தேவைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மாவட்டச் செயலகங்களில் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போதும் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் வாழ்வாதாரச் சொத்து அழிவுகள், பயிர்ச்செய்கை அழிவுகள் தொடர்பில் கணக்கெடுக்க முடியாது என்றும், வெள்ளம் முழுமையாக வற்றிய பின்னரே அது தொடர்பில் கணக்கெடுக்க முடியும் என்றும் மாவட்டச் செயலர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது நெல் அழிவுகள் தொடர்பில் எந்தக் கணக்கெடுப்பும் நடைபெறவில்லை. அவை தொடர்பில் இரண்டாம் கட்டமாகவே கணக்கிடப்பட வேண்டியுள்ளது. கால்நடைகளின் உயிரிழப்புக்கள் தொடர்பாகத் தற்போது கணக்கெடுக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

## வெளிநாட்டு...

அடுத்த மாதம் பேச்சுகள் நடத்தப்படவுள்ளன. இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

பன்னாட்டு நாணய நிதியம், அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுனம், ஜப்பானின் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவரகம் ஆகியவற்றுடன் பேச்சுக்கள் நடத்தப்படவுள்ளன. பன்னாட்டு நாணய நிதியத்தின் 1.5 பில்லியன் ரூபா கடனின் ஆறாவது தவணைக் கொடுப்பனவான 250 மில்லியன் டொலர் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிறுவனம் 480 மில்லியன் டொலர் உதவியை நிறுத்தி வைத்துள்ளது. ஜப்பானின் அனைத்துலக ஒத்துழைப்பு முகவரகம் இலகுத் தொடருக்குத் திட்டத்துக்கான 1.7 பில்லியன் டொலரை இடைநிறுத்தியுள்ளது. இந்த உதவிகளை விரைவாக மீளப் பெற்றுக் கொள்வது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் அடுத்த மாதம் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் - என்றார். (ற)

## அமைச்சர்கள்...

வித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது

19ஆவது திருத்தச் சட்டத்தின்படி அமைச்சரவை அந்தஸ்துள்ள 30 அமைச்சர்களையே நியமிக்க முடியும். கூட்டு அரசுகள் அமையும் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றின் அனுமதியுடன் அமைச்சர்களின் எண்ணிக்கையை 45வரை அதிகரிக்க முடியும். ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்திருந்த கூட்டு அரசில் அமைச்சர்களின் எண்ணிக்கை 45 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. கூட்டு அரசு இல்லாத நிலையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 தை விட அதிகரிக்கக் கூடாது என்பதில் அரச தலைவர் உறுதியாக உள்ளார். இது தொடர்பில் பேச்சு நடைபெறுகின்றது. 2015ஆம் ஆண்டு மக்கள் வழங்கிய ஆணையின்படி கூட்டு அரசைக் கொண்டு செல்வது தொடர்பாக அரச தலைவருடன் தொடர்ச்சியாகப் பேச்சு நடத்தப்படுகின்றது. என்று கூறியுள்ளார். (ற-10)

## மரண அறிவித்தல்

### நயினைக் கவிஞர்
### கணபதிப்பிள்ளை சண்முகநாதபிள்ளை (SLEAS)

*(ஓய்வுநிலை அதிபர் - யா/ நயினாதீவு ம. வி., யா/ மத்திய கல்லூரி, கொத்தணி அதிபர் - தீவகக் கோட்டம்)*



நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, யாழ். நல்லூர், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நா. க. சண்முகநாதபிள்ளை நேற்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - கண்மணி தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - வள்ளியம்மை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பத்மாசனி தேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பத்மசோதி மற்றும் கலாநிதி, அமுதபதி, உமாசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குலமோகன், நீலானந்தசிவம், சுதாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும் நா.க.சிவராமலிங்கம், நா.க.குமாரசூரியர், சி.மணிமேகலைராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, காந்திமலர், சிவபாலன், மங்களேஸ்வரி, தவமணிதேவி, நிர்மலாதேவி, சபாநாதன், லலிதாம்பாள், சிறீதரன், சிறீபதி, அருள்மொழி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஓங்காரநாதன் மற்றும் தில்லைநாதன், ராசலிங்கம், தவமலர், சிவானந்தன், கௌசல்யா, கௌரி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் சுந்தரலிங்கம் பாக்கியலட்சுமி, காராளபிள்ளை வடிவாம்பிகை, பரராச சிங்கம் லெட்சுமி ஆகியோரின் சம்பந்தியும் அருவி, அபிமன்யு, சரணியா, சரணியன், ஆரணி, வான்கோ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரதும் 18.12.2018 அன்று காலஞ்சென்ற அன்னாரின் மனைவி திருமதி பத்மாசனிதேவி சண்முகநாதபிள்ளையினதும் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2018) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நயினாதீவு, 3ஆம் வட்டாரம்**
**S.Umasuthan, 11, Spragg Circle,**
**Markkam ontario L3P5V9, Canada. 16475884326**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 310 7598**

# கல்வியறிவை ஊட்டுவதற்கு நிதி ஒதுக்கியது சாவகச்சேரி

சாவகச்சேரி, டிசெ. 24

**சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பாதீட்டில், கல்வியறிவை ஊட்டுவதற்கென சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டது.**

சாவகச்சேரி நகர சபையின் உத்தேச பாதிப்புத் தொடர்பாக ஆராய்வதற்கான சிறப்பு அமர்வு தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனின் தலைமையில் கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த அமர்விலேயே கல்வி அறிவை ஊட்டுவதற்கு என்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

க.சிவராசா குறித்த தீர்மானவரைவைக் கொண்டு வந்தார். அவர் தனது உரையில், பொது நூலகங்கள், படிப்பறிவு உள்ளவர்கள் மற்றும் மாணவர்களுக்காக மட்டுமன்றி எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்காகவும் செயற்பட வேண்டும். நூல்களை வாசிப்பதால் ஏற்படக்கூடிய பயன்களை தெளிவாக எடுத்தியம்பும் வகையில் நூலகங்கள் செயற்பட வேண்டும். எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் பொது நூலகங்களுக்கு வரமாட்டார்கள். இதனால் அவர்களுக்கு எழுத்தறிவூட்டும் பழக்கத்தினையும் வாசிப்பை வழங்கக்கூடிய கூடிய செயற்றிட்டங்களையும் நாம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அதற்கு சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களை நாம் பயன்படுத்த முடியும். சனசமூக நிலையங்களை எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு ஊட்டமளிக்கக்கூடிய படிப்பகமாக மாற்ற வேண்டும். அதனை மேற்கொள்ள நாம் சபையின் ஒவ்வொரு பாதீட்டிலும் நிதி ஒதுக்கீடு செய்து உரிய செயற்றிட்டங்களை மேற்கொள்வோமாயின் விரைவில் பொது நூலகங்கள் அனைத்து மக்களுக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் மாறும் - என்று தெரிவித்தார்.

இந்தத் தீர்மான வரைவு அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

(ம-9)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்.டிசெ.24


வடக்கு மாகாண மும்மொழிக்கற்கை நிலையத்தில், அலுவலர்களுக்கான 50 மணித்தியால சிங்கள மொழிப் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த புரட்டாதி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த மாதம் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த கற்கை நெறியைப் பூர்த்தி செய்த அனைவரும் எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தங்கள் வரவை உறுதி செய்து கொள்வதுடன் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பங்குபற்றி தங்களுக்கான சான்றிதழைப் பெற்றுச் செல்லுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கற்கை நெறியானது வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## யாழ். மாநகரப் பகுதியில் டெங்கு திடீர் அதிகரிப்பு

*எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்கிறார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்*



யாழ்ப்பாணம்.டிசெ.24

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்தவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் அண்மைக் காலமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது என்று தெரிவித்தார் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஏ.தேவநேசன்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் அண்மைக் காலமாக டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது. எனவே இந்த நோய்பரவுவதைத் தடுக்கும் வகையில் பொதுமக்கள் அனைவரும் செயற்பட வேண்டும். இதன்படி பொது மக்கள் தமது வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான பொருள்களை அழித்து உதவவேண்டும். தாம் சார்ந்த சூழலை துப்புரவாக வைத்திருக்க வேண்டும் - என்றார்.

(ம)



தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீள்குடியமர்வுக்கு விடுவிக்கப்பட்ட மயிலிட்டி வடக்கு (ஜே- 251) கிராம அலுவலர் பிரிவில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை பொது மக்களின் பாவனைக்கென திறந்து வைக்கப்பட்டது. பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் கலந்து கொண்டார். (ம- 9)

## சீருடைகளுக்கான இலவச வவுச்சர்கள்

நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு இலவச சீருடைகளுக்கான வவுச்சர்கள் வழ்ங்கும் நிகழ்வு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வி கற்றும் மாணவர்களுக்கு இலவச சீருடைகளுக்கான வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வும் இன்று காலை 10 மணி தொடக்கம் 11 மணி வரை இடம்பெறவுள்ளன. (ம-159,63)



யாழ்ப்பாணத்தில் உள்ள வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உதவி வழங்கும் திட்டம் இராணுவத்தினரால் கடந்த 22ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் செல்வா பலஸ் மண்டபத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. (ம)

## வடமாகாண ஆசிரியர்கள் பலருக்கு கொடுப்பனவு வழங்குவதில் இழுபறி

யாழ்ப்பாணம், டிசெ. 24

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பலருக்கு நீண்ட காலமாக நிலுவைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. கல்வித்திணைக்களம் உரிய கவனம் இன்றிச் செயற்படுகிறது என்று ஆசிரியர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

"வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்கான நிலுவைக்கொடுப்பனவுகள் 5 ஆண்டுகள் கடந்தும் வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுகின்றது. பலமுறை நேரில் சென்று கோரியபோதிலும் ஒருசிலருக்கு மட்டுமே நிலுவைக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இருப்பினும் பலருக்கு வழங்கப்படவே இல்லை. இவ்வாறு வழங்கப்பட்ட சிலருக்கான கொடுப்பனவு இறுதியாக 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் அளவில் வழங்கப்பட்டது. இதற்குப்பின்னர் எவருக்கும் வழங்கப்படவில்லை.

வலய மற்றும் மாகாண திணைக்களங்களில் பணியாற்றும் அலுவலர்களின் அசிரத்தையே இந்தத் தாமதங்களுக்குக் காரணமாக இருப்பது கண்கூடாகத் தெரிகின்றது. எத்தனை தடவைகள் அலுவலகங்களுக்கு அலைந்தாலும் அது தொடர்பில் நடவடிக்கைகள் இடம்பெறவில்லை" என்று ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு ஆசிரியர்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது

"வலய ரீதியில் நிலுவைகளைக் கணக்கிட்டு மாகாணத்தின் ஊடாக திறைசேரியிடம் விண்ணப்பித்தே நிலுவையைப் பெற்று விநியோகம் செய்வது வழமை. இந்த அடிப்படையில் வடக்கு மாகாண ஆசிரியர்களின் நிலுவைக்கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மட்டும் 539 மில்லியன் ரூபா வேண்டும். அதில் இந்த ஆண்டு கணக்கிட்ட 153 மில்லியன் ரூபாவை வழங்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்தோம். இருப்பினும் அவை கிடைக்கவில்லை. தொடர்ந்து முயற்சிகள் இடம்பெறுகின்றன" என்றார். (ம-105)

# விவசாயம் பாதிக்கப்பட்டால் இழப்பீடு கடற்தொழில் பாதித்தால் ஏதுமில்லை!

## கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்கள் வேதனை

**யாழ்ப்பாணம், டிசெ. 24**

**கடந்த பல வாரங்களாக ஏற்பட்ட மோசமான கடற்கொந்தளிப்பு மற்றும் மோசமான காலநிலை மாற்றத்தால் இரண்டு மாதங்களுக்கு மேலாக தாம் கடற்றொழிலில் ஈடுபடவில்லை என்று வடமராட்சி மீனவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.**

விவசாயிகள் பாதிக்கப்படும்போது இழப்பீடுகள் வழங்கும் திட்டம் கடற்தொழில் பாதிக்கப்படும் போது இல்லை என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் நேற்றுமுன்தினம் உதயனுக்குத் தெரிவித்ததாவது:

கடந்த பல வாரங்களாக மோசமான காலநிலையும் சமாளிக்க முடியாத அளவுக்கு கடற்கொந்தளிப்பும் நிலவுகின்றது. இதனால் கடற்தொழில் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளன. பகுதி நேரத் தொழில்கள் செய்தே வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். விவசாயிகள் வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட போது பல ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஆனால் கடற்தொழில் பாதிக்கப்படுகின்ற போது அரசோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ கவனமெடுப்பதில்லை - என்றனர்.

இந்த விடயம் தொடர்பில் வடமாராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரனிடம் கேட்டபோது, விவசாயிகளுக்கு வறட்சி மற்றும் வெள்ள அழிவுகள் ஏற்படும்போது நிவாரணம் வழங்கப்பட்டது உண்மை. மீனவர்களின் விடயத்திலும் உரிய கவனம் எடுக்கப்படும் - என்றார்.

(ம-160)



இரண்டு தினங்களாக பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கொடுக்குளாய் அபாய வெளியேற்றப் பாதையிலும் மருதங்கேணிப் பாலத்திலும் மக்கள் மீன் பிடிப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். சிலாப்பி, ஜப்பான், கெழுறு போன்ற இன்னும் பல மீன்கள் அவ்வாறு பிடிக்கப்படுகின்றன. (ம-70)

# ஒன்றுகூடல் நிகழ்வு

தென்மராட்சி, டிசெ. 24

எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் வித்தியாலய மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமைபி.ப 2மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் எதிர்கால வளர்ச்சி தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்துப் பழைய மாணவர்களும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறு சங்கத் தலைவரும் அதிபருமான பொ.நடேசலிங்கம் அறிவித்துள்ளார். (ம-9)

# திருவாசகம் முற்றோதல்

இலங்கையில் நிரந்தர அமைதி, சாந்தி, சமாதானம் நிலவவும் இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளரவும் இறைவனிடம் இறையருள் வேண்டி யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து காலி சிவன் ஆலயம் வரை புனித திருத்தல யாத்திரையும் திருவாசகம் முற்றோதலும் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. கலந்து கொள்ளும் அடியார்கள் நாளைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொண்டு வரவை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

** **

வவுனியா கிடாச்சூரி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. வவுனியா கோவிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரார் ஆலய அறங்காவலர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் உள்ள திருத்தலங்களில் திருவாசக முற்றோதல்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

** **

வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

** **

வவுனியா குட்செட் வீதி ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் திருவாகக முற்றோதல் நிகழ்வு நாளைமறுதினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம)



# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு மதிப்பளிப்பு கொடிகாமத்தில்

கொடிகாமம், டிசெ. 24

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளித்தல் நிகழ்வொன்று கொடிகாமத்தில் கடந்த 14ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியின் கொடிகாமம் கிளையால் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் நடராஜா பகீரதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், மதிப்புறு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி.சுதாகர் மற்றும் காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் தி.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ம-159)



ஆழிப் பேரலையால் வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதியில் உயிர்நீத்த சுமார் ஆயிரத்து 100 மக்களை அடக்கம் செய்த நினைவுச் சதுக்கம் தற்போது புதுப்பொலிவுடன் சீர்செய்யப்பட்டு வருகிறது. எதிர்வரும் 26ஆம் திகதி ஆழிப்பேரலை நினைவுநாள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-70)

# அச்சுவேலி நெசவு நிலையத்தை விடுவித்து தரவேண்டும்

## ஆளுநரிடம் பரஞ்சோதி கோரிக்கை

அச்சுவேலி, டிசெ. 24

அச்சுவேலி நெசவு நிலையத்தை தனிப்பட்ட கிறிஸ்தவ மத போதகரின் பயன்பாட்டில் இருந்து விடுவித்து அச்சுவேலி ஆடைத் தொழிற்சாலை செயற்படுவதற்கு ஆவண செய்ய வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அ.பரஞ்சோதி ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கு தான் அனுப்பி வைத்துள்ள கோரிக்கைக் கடிதத்திலேயே பரஞ்சோதி இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். 'அச்சுவேலி நெசவு நிலையக் கட்டடம் மீட்பது சம்பந்தமான கோரிக்கை' என்ற தலைப்புடன் கூடிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஒரு நெசவு நிலையம் நீண்ட காலம் இயங்கி வந்தது. அதில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இளம்பெண்கள் வேலைசெய்து தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு சென்றனர். 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக எல்லோரும் இடம்பெயர்ந்தபோது இந்த நெசவு நிலையமும் இயங்கமுடியாது பாதிக்கப்பட்டது. மீளக்குடியேறிய போது கட்டடத்தில் இருந்த பொருள்கள் களவாடப்பட்டதனாலும் அதை இயக்குவதற்கான முதலீடு இல்லாமையினாலும் நெசவு நிலையத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால் நெசவு நிலையக் கட்டடம் எதுவிதமான சேதமுமின்றிக் காணப்பட்டது. அத்துடன் அதனைச்சூழ இராணுவ முகாமும் காணப்பட்டமையால் கட்டடத்தை அணுக முடியாத நிலை ஏற்பட்டது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி கிறிஸ்தவ மத போதகர் ஒருவர் இராணுவத்தினரின் அனுசரணையோடு நெசவு நிலையக் கட்டடத்தை ஆக்கிரமித்து அங்கீகாரம் எதுவுமின்றி கிறிஸ்தவ செபக்கூட்டங்களை செய்து வருகிறார். இதனால் ஏற்படும் மிதமான சத்தங்களினால் அசௌகரியங்களுக்கு உள்ளான அயல் குடியிருப்பாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்ற கட்டளை ஒன்றை பெற்றுள்ளனர். இருந்த போதிலும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அச்சுவேலிப் பொலிஸாரும், வலி கிழக்குப் பிரதேச சபையும் அக்கறை எதுவும் காட்டவில்லை.

இந்த நிலையில் எனது முயற்சியினால் மாகாணசபையினூடாக அச்சுவேலி மேற்கு மாதர் கிராம அபிவருத்தி சங்கத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை பயன்படுத்தி ஓர் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலை இயங்கி வருகின்றது. எனினும் பொருத்தமான கட்டடம் எதுவும் இல்லாமையால் மிகவும் வசதி குறைவான நிலையில் பத்தமேனியில் செய்றபட்டு வருகின்றது.

அச்சுவேலி நெசவு நிலையப் பிரச்சினை தொடர்பாக என்னாலும் அந்தப் பகுதி மக்கள் மற்றும் சமுக ஆர்வலர்களாலும் வலி கிழக்குப் பிரதேச சபை மற்றும் வலிகிழக்கு பிரதேச செயலகம் மாகாண சிறுகைத் தொழில் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு வந்த போதிலும் இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது மனவருத்தத்துக்கு உரிய விடயமாகும். எனவே தாங்கள் தலையிட்டு ஒரு தனிப்பட்டவரின் ஆக்கிரமிப்பில் இருக்கும் நெசவு நிலையக் கட்டடத்தை விடுவித்து இளைஞர்கள், இளம் பெண்களின் தொழில் முயற்சிக் கூடமாக பயன்படுத்த ஆவண செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

(ம-11)

# போதியளவு குடிதண்ணீரை வழங்குவதற்கு முன்வருக!

## வலி. தென்மேற்கு சபையில் வன்னியசேகரம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 24
வயல்நிலங்களிலுள்ள நன்னீர்க் கிணறுகள் அனைத்தும் மழை வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால்இந்தக் கிணறுகளைநம்பிவாழ்ந்து வந்த நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தற்போது குடிதண்ணீருக் காக அயல் கிராமங்களை நாடிச் செல்கின்றமையைச்சுட்டிக்காட்டியுள்ள பிரதேச சபை உறுப்பினர் இ.வன்னிய சேகரம் மக்களின்நலன்கருதி அவர்களுக்குத் தேவை யான குடிதண்ணீரைவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறுசபையில்கோரினார்.
வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம்தொடர்பான சிறப்புக்கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை சபை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்து கொண்ட ஆளும் கட்சியைச் சேர்ந்த 11ஆம் வட்டாரஉறுப்பினர்இ.வன்னியசேகரம் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர்மேலும்தெரிவித்ததாவது:
எனது வட்டாரத்தில் 400க்கும் மேற்பட்ட குடும்பத்தவர்கள்வசிக்கின்றனர். இங்குள்ளபெரும்பாலானகிணறுகள் உவர் தண்ணீராக இருப்பதனால் மக்கள் வயல்நிலங்களிலுள்ளநன்னீர்க் கிணறுகளைபயன்படுத்தி வருகிறார்கள். அண்மையில் பெய்த மழை காரணமாக வயல் கிணறுகள் அனைத்தும் மழை வெள்ளத்தில்மூழ்கியுள்ளன. இதனால்மக்கள்மேலும்பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே தற்பொழுது 2 கொள்கலன்களில் வைத்து வழங்கப்படும் குடிதண்ணீர் விநியோகத்தை மேலும் அதிகரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார்.
குறித்த அமர்வில் உறுப்பினர் ஜோன்சனும் சில முறைப்பாடுகளை வெளியிட்டார். அவர்மேலும்தெரிவித்தாவது:
எமது பிதேசத்திலுள்ள அனைத்துஇந்துமயானங்களும் சபை நிதியிலிருந்து பல லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஒருசில மயானங்களைத்தவிர ஏனைய மயானங்களில் இருந்து சடலங்கள் தகனம் செய்வதற்குரியவரிஅறவிடப்படுவதில்லை. இதனால்சபைக்கு நட்டம் ஏற்படுகிறது.
தொடர்ந்து இந்த நிலை ஏற்படாதவாறு சபையின் வருமானத்தை கருத்தில் கொண்டுஎதிர்வரும்காலங்களில்அனைத்துமயானங்களிலிருந்தும் சடலங்கள் எரிப்பதற்கானவரியைஅறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.
சில மயானங்களில் சடலத்தைஎரிப்பதற்குநியமிக்கப்பட்டவர்கள் மக்களிடம் இருந்து கூடுதலான பணத்தை அறிவிட்டு வருகின்றனர். இதனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். மயானத்தில் கடமையாற்றுபவர்களுக்கு சபையால் சம்பளம் வழங்கப்படுகின்றது. இதனால்இவர்கள் மக்களிடம் இருந்து பணத்தை அறவிடுவதை நிறுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்.
எமது பிரதேசத்திலுள்ள சந்தைகளுக்குஅண்மையில் கோழிஇறைச்சிக்கடைகள் இயங்குகின்றமையால்சந்தையிலுள்ளகோழிஇறைச்சிக்கடைகளைகுத்தகைக்கு வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சந்தைகளை பல லட்சம் ரூபாக்கு குத்தகைக்கு எடுப்பவர் கோழி இறைச்சியை கணிசமான விலைக்கு விற்பனை செய்யும்போது தனியார் வீடுகளில் குறைந்த விலையில்விற்பனைசெய்வதால் மக்கள் சந்தையை நாடுவதில்லை. இதனால் நட்டத்துக்குள்ளாகும் குத்தகைக்காரர் சந்தையைகுத்தகைக்கு எடுப்பதற்கு முன்வருவதில்லை. இந்தநிலை தொடர்வதால் சபையின் வருமானத்தில்பாதிப்புஏற்படுகின்றது. இதற்குப்பொருத்தமான நடவடிக்கையை தவிசாளர் எடுக்க வேண்டும் - என்றார். (ம-115)

### சிறுவர்களுக்குப் பூங்கா, போசாக்குணவு, கல்வி அபிவிருத்தி

# வலி. தென்மேற்கு சபைப் பாதீடு 242 மில். ரூபாவில் தயாரானது!

யாழ்ப்பாணம், டிசெ. 24
**வலிகாமம்தென்மேற்குப்பிரதேசசபையின் 2019 ஆம் ஆண்டுக்கானவரவு- செலவுத் திட்டத்தில் முன்பள்ளி மாணவர்கள், முதியோர் ஆகியோருக்கு போசாக்கு உணவு வழங்கல் மற்றும் பல அபிவிருத்தித் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உறுப்பினர்களின் ஏக ஆதரவுடன் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டது.**

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்ட சிறப்பு அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த அமர்வில் வலிகாமம்தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின்அபிவிருத்திக்குஎனசபைநிதியில் இருந்து 31மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டள்ளது. மேலதிகமாக ஏனைய நிதியில் 211.5 மில்லியன் ரூபா அபிவிருத்தி வேலைகளுக்காக திட்டமிடப்பட்டுள்ளது. சபையின்பொது நிர்வாகச்சேவைகளுக்காக 25.5மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதார சேவைகளுக்காக 44 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வீதிகள், காணிகள், கட்டடங்களின் அபிவிருத்தி வேலைகளுக்காக 70 மில்லியன்ரூபாஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. சபையின்28 உறுப்பினர்களினதும் ஒத்துளைப்புடன் சபைக்குட்பட்ட 28 வீதிகள் சீரமைக்கப்பட வுள்ளன. அந்த வீதிகளுக்கான வீதி விளக்குகளும் முழுமையாகப் பொருத்தப்படவுள்ளன.
சபையால் மேற்கொள்ளப்படும் குடிதண்ணீர் விநியோக சேவைகளுக்காக 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நலன்புரி சேவைகளான சந்தைகள் மற்றும் நூலகங்களுக்காகவும் விளையாட்டு மைதானசீரமைப்புக்காகவும்மானிப்பாய் மற்றும் பண்டத்தரிப்புப் பகுதிகளில் சிறுவர் பூங்காக்களை அமைப்பதற்காகவும் 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இந்தநிதி ஒதுக்கீட்டில்பிரதேசசபைக்கெனமுன்பள்ளிக்கட்டடமும், கேட்போர்கூடமும், கலாசாரமண்டபமும், கடைத்தொகுதிகளும் அமைக்கப்படவுள்ளன. இடர்களின்போதானமுகாமைத்துவச்செயற்பாடுகளுக்கு எனவும் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
மாணவர்களின் ஆரோக்கியத்தைக் கருத்தில்கொண்டுபிரதேசத்துக்குஉட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்குவதற்காக 2 மில்லியன் ரூபாவும் முதியோர் நலன் கருதி முதியோருக்கான போசாக்கு உணவு வழங்குவதற்காக ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன்சிறப்புத்தேவையுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள்போன்றமக்கள்நலன்சேவைகளுக்காகவும்நிதிஒதிக்கீடுகள்செய்யப்பட்டுள்ளது-என்றார். (ம-8,115)



கண்டியில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற தேசிய ரீதியிலான நாட்டார் குழு இசை போட்டியில் மூத்த வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் வட்டு இந்துக் கல்லூரி மாணவிகள் முதலிடம் பிடித்தனர். (ம)

### வலி. தென்மேற்குப் பிரதேசத்தில்

## ரூ. 1 கோடியே 66 லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன 14 வீதிகள்


யாழ்ப்பாணம், டிசெ. 24
மக்களினதும் உறுப்பினர்களினதும் கோரிக்கைகளைத் தொடர்ந்து வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தில் ஒரு கோடியே 66 லட்சம் ரூபா செலவில் 14 வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன.
நான்கு உப அலுவலகங்களைக் கொண்டது வலிகாமம் தென்மேற்குப் பிரதேசம். மாதகலில் இருந்து காக்கைதீவு வரையான பரந்த பிரதேசத்தில் சுமார் அறுநூறுக்கும் அதிகமான வீதிகள் அமைந்துள்ளன. இவற்றில் வருடாவருடம் படிப்படியாகபெரும்பாலானவீதிகள்சீரமைக்கப்பட்டுவருகின்றன.
இந்த நிலையில் மக்களினதும், உறுப்பினர்களினதும் கோரிக்கையைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டு இதுவரை 14 வீதிகள் சபைநிதியிலிருந்தும் மற்றும்வேறுநிதிகளிலிருந்தும்சீரமைக்கப்பட்டுள்ளன. ஒருகோடியே 66 இலட்சத்து 45 ஆயிரத்து 740 ரூபா செலவில் இந்த வீதிகள் சீரமைக் கப்பட்டுள்ளன.
வேலுச்சாமி வீதி, சாவல்கட்டு 100 வீட்டுத்திட்ட வீதி, நவாலி சி.பி.எம். வீதி, சங்கப்புலவு வீதி, சாந்தை சிற்றம்பலம் வீதி, பாலக்கட்டை வீதி, கட்டப்பாலை வீதி, இளவாலை கன்னியர் மட பாடசாலை வீதி, பொன்னாலை முதலாம் வீதி ஆகிய வீதிகள் சபை நிதியில் இருந்தும் நாவலடி வைரவர் வீதி, நாவலடி இரண்டாம் ஒழுங்கை, மாதகல் ஆசீர்வாதம் வீதி, புக்கைப் புலோவீதி, காறளிவீதி ஆகிய வீதிகள் ஏனையநிதிகளின் மூலமும் சீரமைக்கப்பட்டுள்ளன. (ம-115)

## அரியாலை ச.ச.நி. பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
அரியாலைசனசமூகநிலையத்தின்வருடாந்தப்பொதுக்கூட்டம்நாளைசெவ்வாய்க்கிழமைகாலை10மணிக்குநிலைய உள்ளரங்கில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ம-9,159)



தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் அண்மையில்நடத்தப்பட்டநாட்டார்இசைப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மாணவன் குணலிங்கம் டினூஜன் தனிநபர் பங்குபற்றலில் தேசிய ரீதியில் முதலிடம் பிடித்தார். (ம)




கண்டியில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற தேசிய ரீதியிலான நாட்டார் குழுப் இசை போட்டியில் இளநிலை வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி முதலிடம் பிடித்தது. (ம)

# மன்னார் மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 'காபன்' பரிசோதனைக்கு அனுப்ப நடவடிக்கை

## சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவிப்பு

**மன்னார், டிசெ.24**
**மன்னார் மனிதப் புதைகுழியில் இருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் இருந்து அதன் மாதிரிகள் காபன் பரிசோதனைக் காக கொழும்புக்குக் கொண்டு செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**



மன்னார் நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில், கடந்த புதன் கிழமை முதல். மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளன.
6 மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
அகழ்வுப் பணிகள் கடந்த வெள்ளிக் கிழமையுடன் 121ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.
தற்போது வரை 280 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
அவற்றில் 274 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
தற்போது மனித எலும்புக்கூடுகளின் மாதிரிகள் 'காபன்' பரிசோதனைக்கு அனுப்புவதற்கு சேகரிக்கப்பட்டுள்ளன.
ஜனவரி மாதம் காபன் பரிசோதனைக்காக அவை அனுப்பி வைக்கப்படவுள்ளன.
மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளில் 20 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடையது என நம்பப்படுகின்றது.
'காபன்' பரிசோதனையின் பின்னரே எலும்புக்கூடுகளின் வயது, புதைக்கப்பட்ட காலம், இறப்பு நிகழ்ந்த விதம் என்பன அறிந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (56)






## பன்னாட்டு சிறுவர், முதியோர் சிறப்புத்தேவையுடையோர் நிகழ்வு

மன்னார்,டிசெ.24
நானாட்டான் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு சிறுவர், முதியோர் மற்றும் சிறப்புத்தேவையுடையோர் தின நிகழ்வு நானாட்டான் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் நானாட்டான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் சி.ஏ. மோகன்றாஸ் கலந்துகொண்டார்.
சிறப்பு விருந்தினராக நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி. பரஞ்சோதி, உப தவிசாளர் புவனம் போன்றோர் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் பிரதேச செயலர் தெரிவித்ததாவது:
அவர்களின் ஆற்றல்களை வெளிக் கொண்டு வருவதற்கு நானாட்டான் பிரதேச செயலகத்தின் சிறுவர், முதியோர் சிறப்புத்தேவையுடையோர்க்கென உத்தியோகத்தர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்கள் - என்றார்.
நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்ததாவது:
"முன்பு சிறியவர்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்படும் நிலை காணப்பட்டது. இன்று அவ்வாறான நிலை இல்லை. இவ்வாறான சிறப்புத் தேவையுடையோரை இனங்கண்டு அரவணைத்துச் செல்ல வேண்டும்" - என்றார்.
முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட செயலர் மோகன்றாஸ் தெரிவித்தாவது :
"என்னை விருந்தினராக அழைக்கும் நிகழ்வுகளில் நான் மிக விரும்பிச் செல்வது இவ்வாறான நிகழ்வுகளுக்கு மட்டும் தான். நாம் வாழும் சமூகத்தில் முன்னுரிமை அளிக்கப்படவேண்டியவர்கள் சிறார்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகளாவர்" - என்றார். (213)

## கசிப்பு வைத்திருந்த சந்தேகநபர்கள் கைது



கிளிநொச்சி, டிசெ. 24
கசிப்பு உடமையில் வைத்திருந்த இரு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளதாக, கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் சாந்தபுரம் பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர். ஒரு வீட்டில் 4 போத்தல் கசிப்பையும், சந்தேக நபர் ஒருவரையும், மற்றுமொரு வீட்டில் 2 போத்தல் கசிப்பையும் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.
சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்காகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (6)

### வயல் காவலுக்குச் சென்ற

## 5 விவசாயிகள் 2 நாள்களின் பின்னர் படையினரால் மீட்பு

முல்லைத்தீவு,டிசெ.24
முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட நித்தகைக் குளத்தின் கீழ் நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகள் ஐந்துபேர் இரண்டு நாள்களின் பின் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.
இவர்கள் கடந்த 21ஆம் திகதி வயல் காவலுக்குச் சென்றுள்ளனர். 22ஆம் திகதி அதிகாலை வேளையில் பெய்த கடும் மழை காரணமாக நித்தகை குளவயல் பகுதியில் இருந்து வெளியேறி ஆண்டான்குளத்து ஐயனார் கோவில் பகுதிவரை வந்துள்ளனர்.
அவர்களால் குமுழமுனை நோக்கியும் வரமுடியாதவாறு காட்டாற்று நீர் வயல் நிலங்கள் ஆறுகளூடாகப் பெருக்கெடுத்துப் பாய்ந்துள்ளது.
இவர்கள்தொடர்பாக நேற்றுமுன் தினம் மாலை 5 மணியளவில் அவர்களின் உறவுகள் முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினருடன் தொடர்பு கொண்டு நிலமையை கூறியதை அடுத்து, முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மாவட்டச் செயலரின் அனுமதியுடன் ஐந்து விவசாயிகளையும் மீட்பதற்காக படையினரின் உதவியை எழுத்து மூலம் கோரியுள்ளனர். குறித்த இடத்துக்குச் சென்ற படையினர் ஐவரையும் படகுமூலம் மீட்டு கடல்வழியாக நாயாற்று பகுதிக்குக் கொண்டுவந்து, கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் இ.பிரதாபனிடம் கையளித்துள்ளனர்.
பிரதேச செயலர் முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்திடம் மாவட்ட செயலகத்தில் வைத்து ஒப்படைத்தார்.
இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரால் விவசாயிகளுக்கு இடர் தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், முன்னாயத்தச் செயற்பாடுகள் தொடர்பிலும் எடுத்துரைக்கப்பட்டு அவர்களின் வீடுகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.
ஐந்து விவசாயிகளில் மூவர் கடந்த நவம்பர் 8ஆம் திகதி நித்தகைகுளம் உடைப்பெடுத்தபோது, வெள்ளத்தில் அகப்பட்டு, இடர் முகாமைத்து குழுவால் வானூர்திப்படையிரின் உலங்குவானூர்தி உதவியுடன் மீட்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி 3)



## அரச சாராயத்தை வைத்திருந்த சந்தேக நபர் கைது

கிளிநொச்சி, டிசெ. 24
அரச சாரயம் 12 ¼ போத்தலை விற்பனைக்காக உடமையில் வைத்திருந்த முதியவர் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிகின்றன.
கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அரச சாராயம் 12 ¼ போத்தல்களை விற்பனை நோக்கத்துக்காக உடமையில் வைத்திருந்தார் எனச் சந்தேகிக்கும் நபரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாகவும், கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் மேற்க்கொண்டு அவரைக் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்த உள்ளதாகவும் பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)



## வெள்ள நிலமைகளை பார்வையிட்ட ரவிகரன்

முல்லைத்தீவு,டிசெ.24
முல்லைத்தீவில் ஏற்பட்ட வெள்ள நிலமைகளை முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டார்.
செல்வபுரம், கள்ளப்பாடு, தியோகுநகர், தீர்த்தக்கரை, முள்ளியவளை, வற்றாப்பளை, முறிப்பு போன்ற பகுதிகளில் ஏற்பட்ட வெள்ள நிலமைகளைப் பார்வையிட்டதோடு, பிரதேசசெயலகத்தினருடன் பேசி ஊருக்குள் புகுந்த வெள்ளத்தை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொண்டார்.
இவ்வாறு இடர் ஏற்பட்ட இடங்களில் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேசுவரன், தொம்மைப்பிள்ளை, க.அமலன், க.விஜிந்தன், ஜெகன், ரவீந்தின், மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேசச்பைத் தவிசாளர் ஆகியோரும் இணைந்து மக்களுடைய இடர்களை அவதானித்து தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (246)



## வவுனியாவில் கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு துப்புரவுப்பணிகள்

வவுனியா.டிசெ.24
வவுனியா - சின்னப்புதுக்குளம் இயேசு கிறிஸ்து அற்புத சபையால், கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள துப்பரவுப்பணி, நேற்றுமுன்தினம் காலை முதல் பிற்பகல் வரை இடம்பெற்றது.
வருடாவருடம் மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவுப் பணிகள் இந்த முறையும் வவுனியா, ஹொறவப்பொத்தான வீதிகள், சின்னப்புதுக்குளம் வீதிகள்ஆகிய இடங்களை இயேசு கிறிஸ்துவின் அற்புத சபை மக்கள் கலந்து கொண்டு துப்புரவு செய்தனர்.

வவுனியாவில்

# சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக விழிப்புணர்வு ஊர்வலம்





வவுனியா,டிசெ.24
ஜனநாயகத்துக்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் "வவுனியாவில் சர்வாதிகாரிகளை நிராகரிப்போம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு ஊர்வலமொன்று நேற்று இடம்பெற்றது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இருந்து வருகை தந்திருந்த சுமார் 250 ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்றுதிரண்டு இந்த ஊர்வலத்தை முன்னெடுத்திருந்தனர்.
வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம், கொறவபொத்தான வீதிவழியாகச் சென்றடைந்து, அங்கிருந்து மருத்துவமனை சுற்றுவட்டத்தின் ஊடாக மீண்டும் பாடசாலை முன்றலை வந்தடைந்திருந்தனர்.
"எமது நாட்டில் அரசியல் தலைமைகள் சர்வாதிகாரமான முறையிலேயே நடந்துகொள்கின்றார்கள். அதனை அவர்கள் கைவிடவேண்டும். எமக்கு ஜனநாயகமே வேண்டும். ஜனநாயக முறையில் பூரண உரிமையும், சுதந்திரமும் பெற்ற நாட்டில் எமது மக்கள் வாழவேண்டும் என்பதே எமது நோக்கு" என்று ஊர்வலத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.
ஊர்வலத்தில் ஈடுபட்டவர்கள் "இலங்கையில் சர்வாதிகாரத்தை நிராகரிப்போம்" என்று பொறிக்கப்பட்ட கொடிகளைத் தாங்கியவாறும், "ஜனநாயகம் வேண்டும்", "சர்வாதிகாரம் வேண்டாம்" என்ற கோசத்தையும் எழுப்பியிருந்தனர். (110)





## சட்டத்தரணி சிற்றம்பலத்தின் பவளவிழா

வவுனியா.டிசெ.24
வவுனியா மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தலைவரும், முன்னாள் வவுனியா மாவட்ட சபைத்தலைவருமான மு. சிற்றம்பலத்தின் 75ஆவது வருட பவளவிழா நிகழ்வுகள் 21 ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் ஓவியா விருந்தினர் விடுதியில் இடம்பெற்றன.
'தமிழ் விருட்சம்' அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா வர்த்தகர் சங்கம், கந்தசாமி ஆலயம், வர்த்தகர் நலன்புரிச்சங்கம் ஆகியவற்றின் அனுசரணையில் இடம்பெற்ற நிகழ்வில் பல்துறை சேவையாளர்கள் 18 பேருக்குச் சட்டத்தரணி சிற்றம்பலத்தினால் மதிப்பளிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான . ப. சத்தியலிங்கம், செ. மயூரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலச்சந்திரன், சிவநாதன் கிஷோர்,தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் 'எஸ். சந்திரகுமார், சட்டத்தரணிகள், பொது அமைப்பினர், ஓய்வு நிலை கிராம அலுவலகர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், வர்த்தகப்பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (110)

## வடக்குக்கு வரும் அமைச்சர்கள் இனிமேல் கூட்டமைப்பினரை விமர்சிக்கமாட்டார்கள்

வவுனியா.டிசெ.24
வடக்குக்கு வருகின்ற அமைச்சர்கள் இனிமேல் கூட்டமைப்பைவிமர்சிக்கமாட்டார்கள் என்று முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்தார்.
வவுனியா கணேசபுரத்தில் நேற்று முன்தினம் காலை வறுமைகோட்டுக்கு உட்பட்டவர்களுக்கான உதவித்திட்டங்களை வழங்கி வைத்து விட்டு கருத்துரைக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாம் தமிழ்த் தேசியகூட்டமைப்பைச் சார்ந்தவர்கள். மக்களுக்காகவே போராடுபவர்கள். கடந்தகாலத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களில் முழு வீச்சான செயற்பாடுகளில் கூட்டமைப்பு ஈடுபட்டது.
நாட்டின் அரச தலைவருக்கு எதிராக நீதியை நிலைநாட்டுவதற்காக, நீதிமன்றம் வரைக்கும் சென்று போராடிய ஒரு அமைப்பாக நாம் இருக்கின்றோம். இன்று எத்தனையோ கட்சிகள் கூட்டமைப்பை விமர்சிக்கின்றார்கள்.
வடக்கிலே இருக்கும் கட்சிகள் கூட்டமைப்பை விமர்சிப்பதால் தான் தமக்கு எதிர்காலம் இருக்கும் என்று நினைத்து விமர்சித்துக்கொண்டிருக்கின்றார்கள். எந்தவொரு விமர்சனத்துக்கும் அடிபணியாமல் எமது மக்களின் எதிர்பார்ப்புகளை, அவர்களது எதிர்காலத்தைநோக்கி நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.
கூட்டமைப்பை யாரும் பிழையாக எண்ணி விடக்கூடாது. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக என்றுமே இருப்பது கூட்டமைப்பு மட்டுமே.
அதில் மாற்றுக் கருத்துகள் இல்லை. நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) புதிய அமைச்சரைவை உருவாகியிருக்கின்றது. கடந்த காலங்களில் அமைச்சர்களாக இருந்தவர்கள் வடக்குக்கு வந்து கூட்டமைப்பை விமர்சிப்பவர்களாகவே காணப்பட்டனர். இனிமேல் அப்படி நடக்க வாய்பில்லை. அப்படி இனிமேலும் விமர்சித்தால் அந்த அமைச்சுப் பதவிக்குரிய காரணகர்தாக்கள் யார் என அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.
அத்துடன் எமக்கான உரிமைகளைப் பெறுவதற்கு அனைத்துத் தமிழ் மக்களும் கூட்டமைப்புடன் கைகோர்த்து நிற்கவேண்டும் என்று கூறியதுடன். நாடாளாவிய ரீதியிலே கல்வித் துறையில் 9 ஆம் இடத்தில் வடக்கு மாகாணம் இருக்கின்றது. இது மிகவும் வெட்கக்கேடானது. முன்னொரு காலத்தில் வடக்கை சேர்ந்தவர்களே கல்விமான்களாகத் திகழந்தார்கள்.
வடக்கிலிருந்தே சிங்களதேசத்துக்கு நிர்வாகத் துறைசார்ந்த புத்திஜீவிகளை அனுப்பியிருந்தோம். ஆனால் இன்று கல்வித் துறையில் பின்னடைவைச் சந்தித்துள்ளோம். எனவே அந்த நிலமை மாறவேண்டும்"- என்றார். (110)

## மன்னாரில் வாழ்வாதார உபகரணங்கள் வழங்கல்

மன்னாருக்குப் பயணம் செய்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள், மீள்குடியேற்றம் மறுவாழ்வு வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான் தாழ்வுபாடு பகுதி மக்களின்வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு வாயு அடுப்புக்களையும் வாயு சிலிண்டர்களையும் வழங்கி வைத்தார்.
தெரிவு செய்யப்பட்ட 47 குடும்பங்களுக்குத் தலா 10ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் மன்னார் நகரசபை உறுப்பினர் ரிசேர்ட் ஜனாப், அலியார் சார்பீர் மற்றும் பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
அதேவேளை, அபிவிருத்தியில் இனம், மதம், மொழி, கட்சி பேதம் எதுவுமே கிடையாது எனவும் அரச பணத்தை நாம் ஆற்றில் கொட்டிவிடவில்லை. மக்களின் நலன் அறிந்து அவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என ஊடகவியலாளர் ஒருவர் வன்னி அபிவிருத்தி தொடர்பில் கேள்வியெழுப்பிய போது காதர் மஸ்தான் இவ் வாறு பதிலளித்துள்ளார்.

## வவுனியா நகரசபையால் வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டது

வவுனியா, டிசெ.24
வவுனியா நகரசபையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வவுனியா வன இலாகா திணைக்களத்தினரின் பகுதி வேலி நீண்ட காலமாக அமைக்கப்படாமல் இருந்து தற்போது அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.
வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகிலுள்ள நகரசபைக்குச் சொந்தமான பொது மலசலகூடம் அமைந்துள்ள பகுதியின் அருகே வன இலகாவினரின் திணைக்களம் அமைந்துள்ளது. இதன் இடைவேலி அமைக்கப்படாமல் கட்டாக்காலி மாடுகள் அதனைக் கடந்து வன இலகா திணைக்களத்தின் அலுவலகத்துக்குள் சென்று அங்குள்ள பயிர்களையும் ,செடிகளையும் நாசம் செய்து வந்துள்ளது.
இந்த விடயம் தொடர்பாக உபநகரபிதா சு.குமாரசாமியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன்,உதயன் பத்திரிகையும் நிலமையை விளக்கி செய்தி பிரசுரித்திருந்தது. இதன் பின்னர் விரைந்து நடவடிக்கை எடுத்த நகர சபையினர் உபநகரபிதாவின் மேற்பார்வையில் வேலியை அமைத்து கொடுத்துள்ளனர். (110)



## ரெலோ மகளிர் அணியால் உதவி வழங்கல்



வவுனியா.டிசெ.24
தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் மகளிர் அமைப்பினால்3 இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. ரெலோவின் வவுனியா மாவட்ட மகளிர் அணித் தலைவி கனகம்மா இராசம் தலைமையில் கணேசபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில், வறுமைக்கோட்டுக்கு ட்பட்ட 150 ற்கும் மேற்பட்டமாண வர்களுக்குப்பாடசாலைஉபகரணங்கள்,பெண்தலைமைத்துவக் குடும்பத்துக்கு தையல் இயந்திரம், மாணவர்களுக்கான ஆடைகள் , மலசலகூடம் அமைப்பதற்கான நிதி உதவி என்பன வழங்கப்பட்டிருந்தன.
உதவித்திட்டங்களுக்கானநிதிஉதவிகளைமகளிர் அமைப்பின் ஜேர்மன் கிளை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் வழங்கியிருந்தனர். (110)


பிரதேச சபைகளில் உள்ள

## ஊழியர்களின் குறைகளை நிவர்த்தி செய்யக் கோரிக்கை

முல்லைத்தீவு. டிசெ.24
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, துணுக்காய்,மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச சபைகளில் உள்ள ஊழியர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இதுதொடர்பில்அவர்கள்வெளியிட்ட அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஊழியர்கள் சேவை மூப்பின் படி பதவி உயர்வு வழங்க வேண்டும்.
மேலதிக நேரக் கொடுப்பனவு 20 மணியத்தியாலங்களை 60 மணத்தியாலங்களாக மாற்றி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் (ஊழியர் பற்றாக்குறையினை நிரப்பும்வரை)
ஊழியர் பற்றாக்குறையை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.
ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை தடையின்றி வழங்கவேண்டும்.
ஊழியர்களின்பணிமுடிந்தவுடன்குளிப்பதற்குகுளியலறை அமைக்கப்படவேண்டும்.
புதியநியமனம்வழங்கப்படும்போது, தற்போதுசேவையில் உள்ளவர்களுக்கு பதவியுயர்வு, நியமனங்களை வழங்கி, புதிய (அட்டவணைப்படுத்தப்படாத சேவை) சுகாதார தொழிலாளர்களைப் பணியிலில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.
சேவையில் இருந்து நிறுத்தப்பட்டவர்களுக்கு விசாரணை குழுவினை அமைத்து விசாரணை நடத்தி அவர்களுக்கு வேலையினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
இடம்மாற்றம்வழங்கப்படும்போது, இடமாற்றசபைகளிலும், விசாரணைக் குழுவிலும் எமது சங்கத்தின் மாவட்ட கிளையின் நிர்வாக நடவடிக்கைக்குழு பொறுப்பான பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றுள்ளது.
போன்ற கோரிக்கைகளை வடக்குமாகாண ஆளுநருக்கும் வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும், மாவட்ட ச்செயலருக்கும், பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருக்கும், அகில இலங்கை அரசபொது ஊழியர் சங்கத்தலைவருக்கும், முல்லைத்தீவுமாவட்டத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ரி3)

# படையினரிடம் உள்ள காணிகள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன

### முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குற்றச்சாட்டு



**வவுனியா,டிசெ.24**
**வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள காணிகளின் அளவு அரசினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாக வடக்குமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப .சத்தியலிங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளார்.**

இதுதொடர்பில்அவர் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:
வடக்கு ,கிழக்கு அபிவிருத்தி தொடர்பான அரச தலைவர் தலைமையில் நடைபெறும் சிறப்பு செயலணிக்கூட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வைத்துள்ள கோரிக்கைக்கு அமைவாக, வடக்கு மாகாணத்தில் அரச படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளகாணிகள்படிப்படியாகவிடுவிக்கப்படுகின்றன. எனினும் வவுனியா மாவட்டத்தில் 1.83 ஏக்கர் காணி மட்டுமே இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ளதாகஅரசினால்அறிக்கையிடப்பட்டுள்ளது. அதாவது 56ஆவது பிரிகேட் இராணுவ படைமுகாம் அமைந்துள்ள பேயாடிக் கூழாங்குளம் பாடசாலைக் காணி மட்டுமே அரசினால்வெளியிடப்பட்டுள்ளஅறிக்கையில் குறிப்பி டப்பட் டுள்ளது. இதுமுற்றிலும்தவறானதகவலாகும்.
பிரதேச செயலர்களின் அறிக்கையின்படி வவுனியா மாவட்டத்தில் 184.6 ஏக்கர் காணி நீண்டகாலமாக அரசபடையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இதில் 133.6 ஏக்கர் தனியார் காணிகளாகவும், 45 ஏக்கர் அரச காணிகளாகவும்காணப்படுகின்றன. இதனைவிடசெட்டிகுளம்பிரதேசத்தில் மாணிக்கம்பண்ணைபகுதியில்நூற்றுக்கணக்கானஏக்கர்காணிஇராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் சரியான தகவல்கள் அறிக்கையில்வெளியிடப்படவில்லை.
கடந்த மாதம் வடக்கு மாகாண ஆளுனர்தலைமையில்வவுனியாமாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள சரியான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையென ஊடகங்கள் மூலம்அறிந்திருந்தேன். எனவே அரசு உரிய முறையில் சரியான தகவல்களை திரட்டி ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது. (110)

## வெடுக்குநாறி ஆலயத்துக்கு ஒலிபெருக்கி வழங்கல்

வவுனியா.டிசெ.24
முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதனின் 2018 ஆம் ஆண்டுக்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வெடுக்குநாறி ஆலயத்துக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
நேற்று முன்தினம் காலை இவை கையளிக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன், வவுனியா வடக்குப் பிரதேச சபை உறுப்பினர்களான பொ.தேவராசா, அ.சத்தியேந்திரன், ஆலய பூசகர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (110,222)





## முதலிடம் பெற்ற மாணவி மதிப்பளிக்கப்பட்டார்

மன்னார்,டிசெ.24
தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 2018 ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட மட்டத்தில் 183 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், மன்னார் கல்வி வலயத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற மாணவி மதிப்பளிக்கப்பட்டுள்ளார்.
மாவிலங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஜெயக்குமார் சவ்மியாவிற்கு, மன்னார்மாவட்டச் செயலர்சி.ஏ. மோகன்றாஸ், நானாட்டான் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் ஆகியோர் பரிசில்கள் வழங்கி பாராட்டையும் தெரிவித்தனர். (213)

## பெண் விவசாயிகளுக்கு வாழைக்குட்டிகள் வழங்கல்

புதுக்குடியிருப்பு. டிசெ.24
புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குட்பட்ட பெண்கள் தொழில் முயற்சி கூட்டுறவாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பெண் விவசாயிகள் 92 பேருக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பயன்தரு வாழை இனங்களைச் சேர்ந்த வாழைக் குட்டிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
பெண்கள்தொழில்முயற்சிகூட்டுறவாளர் சங்கத்தின் தலைவி சு.கலைச்செல்வி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், வாழை வளர்ப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டபெண்பயனாளிகளுக்குப்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. வாழை வளர்ப்பு தொடர்பிலான பயிற்சிகளைப் புதுக்குடியிருப்புப் பிரதேச விவசாய போதனாசிரியர் பு.நிறோஜன் வழங்கினார்.
உலக உணவுத்திட்டத்தின் நிதி உதவியில்வாழைக்குட்டிகளைமுல்லைத்தீவு மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பு.உகநாதன் பயனாளிகளுக்குவழங்கினார்.
இதன்போது ஒவ்வொரு பயனாளிக்கும் மொத்தன், கதலி, இளைய வளர்ப்பு (கப்பல்) வாழைக்குட்டிகள் தலா பத்து வீதம் முப்பது வாழைக்குட்டிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ரி3)

## வடமாகாண மகளிர் முன்னேற்றக் கழகம் ஆரம்பம்



வவுனியா,டிசெ.24
வடக்குமாகாணத்திலுள்ளபெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு குரல் கொடுப்பதற்கான வடக்குமாகாண மகளிர் முன்னேற்றக்கழகம் என்ற அமைப்பு, வவுனியாவை மையமாகக்கொண்டு, உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்திறப்பு நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் தாண்டிக்குளம் முதன்மை வீதியில் இடம்பெற்றது.
வடக்கிலிருந்தும் 36 கிராமங்களிலுள்ள பெண்களை இணைத்து, வசதியற்ற மாணவர்களுக்கு உதவிகள், போதைப்பாவனை, பெண்கள்சிறுவர் துர்நடத்தை, பாலியல் இறுவட்டு, போன்றவற்றிற்குஎதிராகவும் ஒவ்வொரு கிராமங்க ளிலிருந்தும் இரண்டு பெண்களை உள்ளடக்கிய செயற்பாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (110)

# அரசியல்வாதிகளால் கைவிடப்பட்டோம்

## தொழிலாளர்கள் ஆதங்கம்; இளைஞர் போராட்டம் முடிவு

**நேற்று முன்தினம் மலையகம் எங்கும் பரவலாகப் போராட்டங்கள் நடந்தன. சம்பள உயர்வைக்கோரிய தமது போராட்ட விடயத்தில் அரசியல் வாதிகளால் கைவிடப்பட்டதை உணர முடிவதாகபோராட்டக்காரர்விசனமடைந்தனர். அத்துடன் கோட்டை தொடருந்து நிலையத்துக்குமுன்பாகஇளைஞர்கள்முன்னெடுத்த போராட்டம் முடிவுக்கு வந்தது.**



கொழும்பு - கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக மலையகத்தின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் போராட்டங்கள் நடந்தன.

கொட்டகலைடிரேட்டன், யதன்சைட் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் கொட்டகலை பிரதேசசபைக்கு முன்னாள் ஹட்டன்-நுவரெலியா முதன்மை வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். லிந்துலை மெராயா ஊவாக்கலை தோட்டத் தொழிலாளர்கள், தங்ககலைத்தோட்டத்தொழிலாளர்கள், அப்புத்தளைப் பகுதியின் தங்கமலை, இதல்கஸ்ஹின்ன, போவை ஆகிய தோட்டங்களின் தொழிலாளர்கள் என மலையகம் முழுவதும் ஆங்காங்கே போராட்டங்கள் நடந்தன. ஐந்துவருடங்களுக்குமேலாக நாம் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரிப்போராட்டங்களைமுன்னெடுத்து வருகின்றோம். அரசியல்வாதிகளும், தொழிற்சங்கவாதிகளும் ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கிதருவதாக உறுதியளித்தார்கள். அதை நம்பி நாம் போராட்டங்களை கைவிட்டோம். போராட்டங்களில்ஈடுபட்டோம். எந்தப்பயனும்கிடைக்க வில்லை. அமைச்சுப் பதவிகளைப் பெற்று, தங்களுடைய வேலைகளைக் கவனித்துக் கொண்டு அவர்கள் மௌனம் காக்கிறார்கள். நாங்கள் தொடர்ந்து போராடுகிறோம். இவர்கள் எங்களை வீதியில் கொண்டு வந்து விட்டுள்ளார்கள் - என்று போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் ஆதங்கம்வெளியிட்டார்.



காலையில் ஆரம்பித்த போராட்டங்கள்மதியம்வரைநீடித்துநிறைவுக்கு வந்தன. அத்துடன் நேற்று மாலையளவில் கோட்டை தொடருந்து நிலையம் முன்பாக உணவுதவிர்ப்பில் ஈடுபட்ட இளைஞர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டமும் கைவிடப்பட்டது.

இளைஞர்களின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு குறித்த போராட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.



## நடமாடும் தங்கச் சாமியாரால் புசல்லாவவில் பொருள் உதவி

கண்டி, டிசெ.24

கண்டி - கால்தென்ன ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் நிர்வாகியும் குருக்களுமான காமினி ஆனந்த அந்தப் பகுதி மக்களால் 'தங்கச் சாமி' என்று அழைக்கப்படுகிறார்.

தன்னுடைய மார்பிலும், கைகளிலுமாகச் சுமார் 7 கிலோ கிராம்நிறையுடையதங்கத்தாலானநகைகளைஇவர்அணிந்திருக்கிறார். இந்த நகைகள் சகிதம் பொது நிகழ்வுகள் மற்றும் நற்காரியங்களில்ஈடுபடுவதுஇவர்இயல்பு. இதனால் இவரைத் தங்கச் சாமி என்று அந்தப் பகுதி மக்கள் அழைக்கின்றனர். சிங்களவரான இவர் காளி வழிபாட்டில் ஈடுபாடு காட்டுகின்ற சிங்கள, தமிழ்மக்களுக்கு மத்தியில் தன்னுடைய ஆலயத்தை நிறுவிவழிபாடாற்றிவருகிறார். தான் அணிந்திருக்கும்நகைகள் வெளித்தெரிவ தற்காகக் காமினி ஆனந்த மேற்சட்டை அணிவதில்லை என்கின்றனர் அந்தப் பகுதி மக்கள். தான் அணிந்துள்ளநகைகள்ஜொலிக்கும்வண்ணம்நற்காரியங்களில் ஈடுபடும் இவர் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வலம் வருகிறார்.



இவ்வாறேநேற்றுமுன்தினம்கண்டி - புசல்லாவ மெல்போட் தோட்ட மக்களுக்குத் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

## விழிப்பூட்டல் கண்காட்சி!

மட்டக்களப்பு.டிசெ.24

சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி உற்பத்திசெய்யப்பட்ட காய்கறிகளை உண்ணவேண்டியதன் அவசியம் குறித்துப் பொதுமக்களுக்கு அறிவூட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட உணவுப்பொருள் கண்காட்சி ஒன்று கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு - கிரான் பிரதேசத்தில் நடைபெற்றது. கிரான் பிரதேச செயலர் சுந்தரமூர்த்தி ராஜ்பாபு - தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியைப் பெரும் எண்ணிக்கையானவர்கள் பார்வையிட்டனர்.


காளான்கள், காய்கறிவகைகள், தானியவகைகள், இலைக்கறிவகைகள்எனப்பலவிதமானஉணவுப்பொருள்கள்இதில் காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன் நியாய விலையிலும் விற்பனை செய்யப்பட்டன.

கிருமிநாசினிகள், உரப்பயன்பாடுகள், இரசாயன மருந்துவகைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட உணவுகளால் மனிதர்களுக்கு அதிக பக்கவிளைவுகள் ஏற்படுவதாக இந்தக்கண்காட்சியில்எடுத்துக்கூறப்பட்டது. சேதனப்பசளைகளைப் பயன்படுத்தி விளைவிக்கப்பட்ட காய்கறிகள், தானியங்களில்தயாரிக்கப்பட்டஉணவுப்பண்டங்கள்கண்காட்சியில் பங்குபற்றியவர்களுக்குச் சுவைப்பதற்கு வழங்கப்பட்டன.











பெல்மதுல - கல்பொத்தாவெல ஸ்ரீபாத ரஜமஹா விகாரையில் இருந்து சிவனொளி பாத மலை நோக்கிய பௌத்தர்களின் யாத்திரை நேற்று ஆரம்பமானது. இரத்தினபுரி - அவிசாவளை - ஹட்டன்வீதி, பெல்மதுல - பலாங்கொட வீதி, இரத்தினபுரி - பலாபத்தலரஜமாவத்தைவீதி ஊடாக என எல்லாமாக மூன்று யாத்திரைகள் சிவனொளிபாத மலையை நோக்கி இடம்பெறுகின்றன. இதில் புத்த பெருமானின் புனிதப் பொருள்களையும், சமன் தெய்வத்தின் உருவச்சிலையையும் யாத்திரிகர்கள் சிவனொளிக்குக் கொண்டு செல்கிறார்கள்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்!

மட்டக்களப்பு.டிசெ.24

மட்டக்களப்பு-வவுணதீவுப்பிரதேசத்தில்வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு லயன்ஸ் கழகத்தால் நேற்றுமுன்தினம் நிவாரணப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்ட 306 சி2லயன்ஸ்கழகத்தின் உதவியில், சுமார்10 இலட்சத்து 80ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கையளிக்கப்பட்டன.

கரையோரப்பிரதேசமான விளாவட்டவான், மண்டபத்தடி உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே இவை வழங்கப்பட்டன. வவுணதீவு வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்படும் பிரதேசமாகும். இவ்வாறான உதவிகளைச் சமூக நலன்சார்ந்த அமைப்புக்கள் வழங்குவது வரவேற்கத்தக்கது, என்று இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாவட்டச் செயலர் உதயகுமார் தெரிவித்தார்.

## அமரர் பரராஜசிங்கத்தின் 13ஆம் ஆண்டு நினைவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 13ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்றத்தலைவர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரையாற்றவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியாவில் சுனாமி 168 பேர் சாவு; 745பேர் காயம்

ஜகார்த்தா.டிசெ.24

இந்தோனேசியாவின் சுந்தா நீரிணையில் நேற்று அதிகாலை சுனாமி அலைகள் எழுந்தன. இந்தச் சுனாமி அலையில் சிக்கி 168 பேர் சாவடைந்தும், 745பேர் காயமுற்றிருப்பதும் நேற்றுவரை கிடைத்த தகவல்களில் இருந்து தெரியவந்தது.

இந்தோனேசியாவின் ஜாவா மற்றும் சுமத்ரா தீவுகளுக்குஇடையில்அமைந்துள்ள சுந்தா நீரிணை ஜாவா கடலையும், இந்தியப் பெருங்கடலையும் இணைக்கிறது. இந்த நீரிணையில் அமைந்துள்ள க்ரகடோவா தீவில் இருக்கும்எரிமலைவெடித்ததால் (இந்த எரிமலையின் ஒரு பகுதி நீருக்கடியில் இருக்கிறது) நிலத்துக்கு அடியில் உண்டான சரிவுகள் சுனாமிப் பேரலைகளை உண்டாகியிருக்கின்றன என்று கருதப்படுகிறது. 1883ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இந்தக் கரகடோவா எரிமலைவெடித்துச்சிதறியது தான், வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய எரிமலைச் சீற்றமாகக் கருதப்படுகிறது. தற்போதுஇந்த எரிமைலை வெடித்ததால் ஏற்பட்ட சுனாமியில் இந்தோனேசியாவின் பன்தேக்லங், தெற்கு லாம்பங் மற்றும்சேராங்பகுதிகளில் சாவுகள்சம்பவித்துள்ளன.

கட்டடங்கள் பல சேதமாகியுள்ளன. பலரைக் காணவில்லை. பலர்காயமடைந்துள்ளனர் என்று இந்தோனேசியஅரசுதெரிவித்தது. சாவடைந்தவர்களின்எண்ணிக்கைஅதிகரிக்கவாய்ப்புண்டு என்று அஞ்சப்படுகிறது. பௌர்ணமிதினத்தையொட்டி அலைகளின் வேகமும் அதிகமாக இருந்தது.

இது இழப்பை இன்னும் அதிகரிக்கும் என்றும் அதிகாரிகள் கருதுகின்றனர். இந்தோனேசியாவின் சுலவேசித் தீவில் கடந்த செப்டம்பர் மாதம் உண்டான சுனாமியால் 2ஆயிரத்துக்கும் அதிகாமானவர்கள் சாவடைந்தனர் என்பதும், 2004ஆம் ஆண்டில் அங்கு கடலுக்கு அடியில் ஏற்பட்ட நில அதிர்வால் இலங்கை உட்பட ஆசிய நாடுகள் பலவற்றைச் சுனாமிதாக்கிஅதில்2இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் சாவடைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.





# மாபெரு
# ஆயத்



தெஹ்ரான்.டிசெ.24
'பயகம்பர்இஆசம்' என்ற
களைஉள்ளடக்கியபெரு
ஒத்திகையைஆரம்பித்துள்
ரிக்காவிதித்துள்ளபொருளா
இதன் பின்னணியாகக் கரு
யலவதானிகள். அமெரிக்
மனி, பிரான்ஸ், ரஷ்யா உ
2015ஆம்ஆண்டில்ஈரானு
தடை ஒப்பந்தம் செய்து இ
இருந்து ஈரான் மீறிவிட்ட
அமெரிக்கா கடந்த மே மாத
தில் இருந்து விலகியது. அ
பொருளாதாரத்தடைகளை
தது. அமெரிக்க முன்னாள்
மாவின் ஆட்சிக் காலத்தி

# செவ்வாயில் பனிப்பள்ளம்



பாரிஸ்.டிசெ.24
செவ்வாய்க் கிரகத்தின் கோரோலோவ் பள்ளத்தில் முழுவதுமாகப்பனிநிறைந்திருப்பதைச்சித்திரிக்கும் வகையிலான ஒளிப்படமொன்று வெளியாகியுள்ளது. ஐரோப்பிய விண்வெளி மையத்தின் 'மார்ஸ் எக்ஸ்பிரஸ் மிஷன் ' என்ற விண்வெளி ஓடம் இந்த ஒளிப்படங்களை எடுத்துள்ளது. ஐரோப்பிய விண்வெளி மையத்தின் 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' மிஷன் 2003ஆம் ஆண்டுஜூன்2ஆம்திகதிவிண்ணில்ஏவப்பட்டது. ஆறு மாதங்கள் கழித்து அது செவ்வாய்க் கிரகத்தை அடைந்தது. அது செவ்வாயைச் சென்றடைந்த 15ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும்விதமாகஇந்தஒளிப்படங்கள்வெளியிடப்பட்டுள்ளன.



# மருவினாலும் வீரியம் குறையாத மக்களின் மஞ்சள் அங்கிப் போர்

பரீஸ்.டிசெ.24
பிரான்ஸில் பெற்றோல் மற்றும் டீசல் விலை உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த வருட நவம்பர் மாதத்தின்நடுப்பகுதியில்பொதுமக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். மஞ்சள் அங்கியை அணிந்தவாறு வாரக்கணக்கில் நீடித்தஅவர்களின்போராட்டத்தால் குறித்த விலையேற்றங்களுக்குத் தடையளித்தது பிரான்ஸ் அரசு. ஆனாலும் இன்னும் பல கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டக் காரர்கள் வாரக் கணக்கில் போராடினர். போராட்டம் ஆரம்பித்த இரண்டாவது வாரத்தில் இந்தப்போராட்டக்காரர்களின்தொகை 33ஆயிரத்து 500 பேராக இருந்தது. தற்பொழுது இந்தத் தொகை 23ஆயிரத்து800பேராககுறைந்து இருக்கின்றது. போராட்டக்காரர்களின் தொகை குறைந்துள்ள போதிலும் போராட்டத்தின் தன்மை சற்றும்குறையவில்லை. இவர்களால் ஏற்படுத்தப்படும் வீதித்தடைகள் அதனால்ஏற்படும்வாகனநெரிச்சல்கள், விபத்துகள்என இந்தப்போராட்டத்தால்பிரான்ஸ்அரசுகடும்சிக்கல்களுக்கும், அழுத்தங்களுக்கும் முகம்கொடுத்து வருகிறது.

# உ
# தலை

இஸ்லாமா
பாகிஸ்தா
சிகளுக்குச்
ரத்தில் ஏற
தலைமை
னார். தான்
நாட்டின்
வேன், 6
களையும்
அந்த உச்சி
டார். பாகி
இவர் இ
கூறியுள்ள



# பரும் போர் ஒத்திகை
# பத்தமாகிறது ஈரான்






24
' என்ற பெயரில் முப்படை
யபெருமெடுப்பிலானபோர்
ம்பித்துள்ளதுஈரான். அமெ
பொருளாதாரத்தடைகளை
பாகக் கருதுகிறார்கள் அரசி
அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்
ரஷ்யா உள்ளிட்ட நாடுகள்
ல்ஈரானுடன்அணுஆயுதத்
செய்து இருந்தன. அதில்
றிவிட்ட தாக முறைப்பட்டு
மே மாதம் அந்த ஒப்பந்தத்
யது. அத்துடன் ஈரான் மீது
டைகளை அமெரிக்காவிதித்
ன்னாள் அதிபர் பராக் ஒபா
காலத்தில் விலக்கப்பட்ட

அனைத்து தடைகளையும் ஈரான் மீது தற்போதுட்ரம்ப்விதித்துள்ளார். ஈரான்மீது அமெரிக்கா விதித்த அத்தனை தடைகளையும் தகர்த்துப் பெருமையுடன் முன்னேறி வருவோம் என ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி சூளுரைத்திருந்தார்.

இந்நிலையில், ஈரானின் தெற்குப் பகுதியில் உள்ளகுவெஷேம்தீவில்'பயகம்பர்இஆசம்12' என்றபெயரில்முப்படைகளின்மாபெரும்போர் ஒத்திகை ஒன்றை ஈரான் ஆரம்பித்துள்ளது.

# ஈரானில் தொழிலதிபருக்குத் தூக்களித்து இசையுடன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு



தெஹ்ரான்.டிசெ.24

கடன் பெறுவதற்காகப் போலி ஆவணம் தயாரித்தது அது நிரூபிக்கப்பட்டதால் ஈரானில் தொழிலதிபர் ஒருவருக்குத்தூக்குத்தண்டனைவழங்கப்பட்டது. ஈரானில் மிகவும் இலாபகரமான தொழிலாகக் கருதப்படும் எண்ணெய்சார்ந்த ஒருபொருளான 'பிடுமென்' விற்பனையில் ஈடுபட்டு வந்த குறித்த தொழிலதிபர் அவற்றைக்கொள்முதல்செய்வதற்காகப் போலியாக நிறுவனங்களின்பெயரில்ஆவணம்தயாரித்து, முறைகேடு, மோசடி மற்றும் இலஞ்ச ஊழல் மூலமாகச் சுமார் 100 மில்லியன் டொலர் மதிப்பில் 'பிடுமென்' கொள்முதல் செய்திருக்கிறார்என்றகுற்றச்சாட்டில்2014ஆம்ஆண்டில் குறித்த தொழிலதிபரான டர்மானி (வயது49) என்பவர் கைது செய்யப்பட்டார். இப்போது தூக்குத் தண்டனையளிக்கப்பட்டு அவர் கொல்லப்பட்ட விதம் குறித்த செய்திகளை ஈரான் அரச தொலைக்காட்சி, படமாக்கிஇசைக்கோர்வையுடன்ஒளிபரப்பாகியது. ஈரானின் பொருளாதாரத்தை எப்படியெல்லாம் தொழிலதிபர்கள் சுரண்டுகிறார்கள், அவர்களை அரசு தண்டிப்பதில் எவ்வளவு தீவிரம் காட்டுகிறது என்பதை மக்களுக்கு இதன் மூலம் எடுத்துச்சொல்லியிருப்பதாக ஈரான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த ஆண்டின் ஈரானில் ஊழல் தடுப்பு அமைப்புஉருவாக்கப்பட்டதிலிருந்துதூக்கிலடப்பட்ட மூன்றாவதுதொழிலதிபர் இவர். இந்த ஊழல்தடுப்பு அமைப்பின் செயற்பாட்டால், ஈரானில் பல தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சோமாலியாவில் குண்டுவெடிப்பு 8 பேர் சாவு பலர் படுகாயம்



மெஹாடிசு.டிசெ.24

சோமாலியாவின் அதிபர் மாளிகைக்கு அருகே அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்தன. இவற்றில் சிக்கி 8பேர்சாவடைந்ததாகப்பன்னாட்டுஊடகங்கள் செய்திவெளியிட்டுள்ளன. சோமாலியாவில்உள்நாட்டுப்போர்நடந்துவருகிறது. அல்கொய்தா அமைப்பினரின் ஆதரவுடன் அல்ஷபாப் ஆயுதாரிகள் அங்கு அரசுக்குஎதிராகத்தாக்குதல்களைநடத்திவருகின்றனர். அவர்கள் மத அடிப்படையிலான அரசை நிறுவுவ தற்குப் போராடி வருகின்றனர். இந்த நிலையில், சோமாலியாவின் தலைநகர் மெஹாடிசுவிலுள்ள அதிபர் மாளிகைக்கு அருகே நேற்று முன்தினம் 2 மகிழுந்துகளில் நிரப்பப்பட்ட வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன. இந்தக்குண்டுவெடிப்புகளில்சிக்கி 8 பேர் உடல்சிதறிச்சாவடைந்தனர். பலர்படுகாயம்அடைந்தனர். காயமடைந்தவர்களில் சிலரது நிலை, கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

# உணர்கொம்பின் உச்சியில் நின்று தலைமைஅமைச்சராக்குமாறுகோரியவர் கீழே இறக்கப்பட்ட சுவாரசியம்

இஸ்லாமாபாத்.டிசெ.24
ாகிஸ்தானின் இஸ்லாம்பாத்தில் கைபே
ிகளுக்குச் சமிக்ஞையளிக்கின்ற கோபு
த்தில் ஏறிய நபர் ஒருவர் தன்னைத்
லைமை அமைச்சராக்குமாறு கோரி
ார். தான்தலைமை அமைச்சரானால்,
ாட்டின்பொருளாதாரத்தைமேம்படுத்து
வேன், 6மாதங்களில்அனைத்துக்கடன்
ளையும் அடைத்து விடுவேன் என்று
அந்த உச்சியில் நின்றபடி கூப்பாடு போட்
ார். பாகிஸ்தான் கொடியை ஏந்தியபடி
இவர் இவ்வாறு உரத்த குரலில்
கூறியுள்ளார். கீழே இறங்குமாறு இவ

ரைக் கேட்ட போது, தான் தலைமை அமைச்சர் இம்ரான் கானிடம்தான் பேசுவேன்என்றுகோரிக்கையைமுன்வைத்தார். உள்ளூர்ப் பொலிசார் சாதுரியமாக ஒரு காரியம் செய்தனர். மாற்றுக் குரல்களில் பேசி அசத்துகின்ற கலைஞர் ஒருவரைத் தொடர்பு கொண்டு தலைமை அமைச்சர் இம்ரான் கான் போல் பேசுமாறு கேட்டுக் கொண்டனர். அவரும் அவ்வாறேபேசியுள்ளார், அவர்பேசியதில் திருப்தியடைந்த அந்த நபர் கீழே இறங்கினார். கீழே இறங்கியவுடன் பொலிஸார் அவரைக்கைது செய்தனர்.



# 'ஜிகா' வைரஸ் எதிரொலி இந்தியாவுக்குக் கர்ப்பிணிகள் செல்லத் தடை




வோஷிங்டன்.டிசெ.24

இந்தியாவுக்குச் சுற்றுலா செல்லும்அமெரிக்கர்களில், கர்ப்பிணிகள் எவரும் ராஜஸ்தான் மற்றும் அதன் அயல் மாநிலங்களுக்குச் செல்ல வேண்டாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள் ளது. அமெரிக்காவின் தேசிய அளவிலான நோய் கட்டுப்பாட்டு அமைப்பே இந்த எச்சரிக்கையை விடுத்தது. மேற்கண்ட மாநிலங்களில்'ஜிகா' வைரஸ் பாதிப்பு அதிகமாக உள்ளது. கர்ப்ப காலத்தில் இந்த வைரஸ் தாக்கினால், கடுமையான குறைபாடுடன் கூடிய குழந்தைபிறக்கும். எனவேகர்ப்பிணிகள் அங்கு செல்லவேண்டாம்என்றுஅந்தஅமைப்புமேலும் கேட்டுக் கொண்டுள்ளது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழர்களும் புலிகளும்

தமிழ் மக்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்கிற சிங்களமக்களின்கண்ணோட்டம்மாறவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் கொழும்பு அமைச்சர் ஒருவர்.

"தெற்கில் கிளர்ச்சி செய்தவர்கள் மீதான பார்வை மாற்றமடைந்ததைப்போல, வடக்கில்போரில்ஈடுபட்டவர்கள் மீதான பார்வையிலும் மாற்றம் அவசியம். வடக்கு மக்களை இனியும் புலிகளாகப் பார்க்கும் கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார் அமைச்சர் வஜிர அபேவர்த்தன.

அமைச்சராகப் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக சிங்களவர்கள்மத்தியில்சித்தரித்துவைத்திருக்கிறது கொழும்பு அரச இயந்திரம். அதனால் தமிழர்கள் அனைவரையுமே பயங்கரவாதிகள் என்று எண்ணும் சிங்கள மக்கள் அனேகம் பேர் உள்ளனர்.

இதனைத்தான் தமிழர்களைப் புலிகள் என்று எண்ணக்கூடாது என்கிற வார்த்தைகளின் ஊடாக அமைச்சர் சொல்ல முயற்சிக்கின்றார். அதற்குக் காரணமும் இருக்கிறது.

இன்றுதமிழர்களின்தயவில், தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தயவில் அமைச்சர் வஜிரவின் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான முன்னணி ஆட்சியைப் பிடித்திருக்கும் நிலையில், தமிழர்கள் எல்லோரையும் புலிகளாகப் பார்த்தால் கொழும்பில்ஆட்சியிலிருப்பதுபுலிகளின், பயங்கரவாதிகளின் ஆதரவுடன் பதவிக்கு வந்த அரசு என்றாகிவிடும்.

அப்படிப்பட்ட ஒரு பெயரை சகித்துக்கொள்ள முடியாது என்பதால், தமிழர்களையும் புலிகளையும் பிரித்து உணரும் சக்தியை சிங்கள மக்கள் பெற வேண்டும் என்று அமைச்சர் விரும்புகின்றார்.

ஆனால், உண்மையில் சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டியதுபுலிகள்வேறுதமிழ்மக்கள்வேறு என்பதையல்ல. தமிழ் மக்களின் கோரிக்கைகளின் அபிலாசைகளின் வேணவாக்களின் அகிம்சை வடிவத்துக்குச் சிங்களவர்கள், சிங்களத்தலைவர்கள்மதிப்பளிக்காமல்விட்டதன்விளைவாக முகிழ்த்ததுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.

தமிழ் மக்களின்றி புலிகள் இல்லை. புலிகள் இன்றி இன்றைய தமிழ் மக்களின் அடையாளமும் இல்லை. அந்த வன்முறை வடிவம் மிகப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியிருப்பதை யாரும் மறுப்பதற்குமில்லை. ஆனால், தவிர்க்க முடியாமல் அதனை நீக்கிவிட்டு தமிழர்களை அடையாளப்படுத்தவும் முடியாது.

அதுபோன்ற வரலாறு மீண்டும் திரும்பும் நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதும் அனைவரது விருப்பமாக இருந்தாலும்கடந்தகாலத்தைஇல்லாதொழித்துவிட முடியாது. அதனால் புலிகள் வேறு தமிழர்கள் வேறு என்று பிரித்துவிட முடியாது.

சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டிய யதார்த்தமும் உண்மையும்அதுதான். புலிகளையும்தமிழ்மக்களையும்தனித் தனியே பிரித்தறிவது அல்ல சிங்கள மக்களின் தேவை. தமிழ் மக்களின்நிறைவேற்றப்படாததேவைகளின்எதிர்ப்புவடிவம் விடுதலைப்புலிகள்என்பதையேசிங்களவர்கள்புரிந்துகொள்ள வேண்டும்.

அந்தப் புரிதல் ஏற்படும்போதுதான் நாட்டின் இனப் பிரச்சினைக்கு நீதியான, ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை எட்ட முடியும்.

தமிழர்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்தாள்வதன் மூலம் அரசியல் செய்ய முற்படுவதைக் கடந்த 30 ஆண்டுகளுக்கும்மேலாகத்தெற்குதொடர்ந்துசெய்துகொண்டே வந்திருக்கிறது. அமைச்சர் வஜிர சிங்கள மக்களுக்குக் கூறும் அறிவுரையும் அதன் ஒரு வடிவம்தான்.

தெற்கில் கிளர்ச்சி செய்த ஜே.வி.பியையும் புலிகளையும் ஒப்பிட முடியாது. அவை இரண்டுமே வெவ்வேறு பரிமாணங்களையும் வடிவங்களையும் கொண்ட போராட்டங்கள்.

சிங்களமக்களின்மனங்களின்மாற்றம்ஒன்றுஏற்படவேண்டியது அவசியம். அந்த மாற்றம் புலிகள் வேறு தமிழர்கள் வேறு என்கிற புரிதல் மாற்றமாக அல்லாமல் தமிழர்களையும் சக மனிதர்களாக சம உரிமை உள்ளவர்களாக மதிக்க வேண்டும் என்கிற மாற்றமாக அமையவேண்டும். அதுவே பயன் தர வல்லதாக அமையும்.


# வெறும் பானை பொங்குமா?

செ.தமிழ்நம்பி

"வடக்கு கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் அனுமதிக்காது. பிளவுபடாத, பிரிக்க முடியாத நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களது உரிமைகளைச் சமாந்தரமாக உறுதிப்படுத்தும் அரசமைப்புக்கு ஆதரவளிப்போம்." என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். குறிப்பாக, அந்தக் கட்சியின் பிறிதொரு நாடாளுமன்ற உறுப்பினரான நளின் ஜயதிஸ்ஸ கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைத்த நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை இல்லாதொழிக்கும் தீர்மானம் மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

### ஒரே அடிக்கருத்தில் இயங்குகின்ற பெரும்பான்மைக் கட்சிகள்!

மேலும், "13 ஆவது திருத்தச் சட்டத்தால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டன. அவை பலவந்தமாக இணைக்கப்பட்டமை குறித்து நாம் போராடினோம். வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரித்தோம். மீண்டும் அவை இணைவதற்கு இடமளியோம். எமது போராட்டத்தில் இணைந்து கொண்டு நாட்டை ஒன்றிணைப்பதற்காக 60 ஆயிரம் பேர் வரையில் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். தேசிய சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக போராடுபவர்கள் நாங்கள் தான்." எனவும் அவர் கூறியுள்ளார்.





உண்மையில் அவர் குறிப்பிட்டுள்ள இந்தவிடயங்கள் குறித்து ஆழமாகச் சிந்தித்தால் பல உண்மைகள் புலனாகும். மிக முக்கியமாக இலங்கையில் கட்டமைக்கப்பட்டுள்ள பெரும்பான்மையினக்கட்சிகள் அனைத்தும் தமிழர்கள் தொடர்பான விடயங்களில் ஒரே அடிக்கருத்தில் இயங்குகின்றன என்பதை கண்டுகொள்ள முடியும். அதாவது கட்சிகள் கொள்கை அடிப்படையில் வேறுபட்டு நின்றாலும், தமிழர்களுக்கான தீர்வு என்ற விடயத்தில் அனைத்துக் கட்சிகளும் 'இனவாதம்' என்ற ஒரே அடிக்கருத்தையே விதம் விதமாக காலத்துக்குக் காலம் வெளிப்படுத்தி வருகின்றன என்ற உண்மை வெளிப்பட்டு நிற்பதை உணரலாம்.

இங்கு, "ஆறுகள் பலவானாலும் சென்று சேரும் இடம் கடல்தான். ஆறுகள் பிறக்கும் இடத்திலும் நீரின் ஊற்றுத்தான் உள்ளது. அந்த ஊற்று ஒன்றே." என்று தமிழ் கிழவி ஔவையார் குறிப்பிடுவது போன்று, சிங்களம் என்கிற இனவாதப் பெருங்கடலில் ஒன்று சேர்கின்ற கிளை ஆறுகளாகவே பெரும்பான்மையினச் சிங்களக் கட்சிகள் இருப்பதும் புலனாகிறது.

### ஒத்துப்போகாத அதிகாரத்தின் முகம்!

இதில் கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்சி மாற்றச் சூழ்ச்சியின் பின்பு, தற்போது மீண்டும் தலைமை அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு குறித்து தமிழ்தேசியக் கூட்டமைப்பினருடனும், மக்கள் விடுதலை முன்னியினருடனும் பேச்சுகள் நடத்தப்படும் என்று குறிப்பிட்ட விடயங்களில் எத்துணை பொருத்தப்பாடு உண்டு என்பது கேள்விக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. ஏனெனில், அடிப்படையில் மக்கள் விடுதலை முன்னணியும் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் என்ன முடிவுகளை எடுக்கும் என்பதற்கான எடுத்துக்காட்டாகவே அந்தக் கட்சிசார்ந்த நாடாளுமன்ற உறுப்பினரின் மேற்போந்த கருத்தூட்டம் அமைந்துள்ளதை நோக்க முடியும்.

### அரிசி இன்றிப் பொங்கலாமா?

இங்கு ஔவையார் குறித்த கதையாடல் ஒன்றும் மேற்குறிப்பிட்டதான இலங்கை அரசியல் கள நிலவரங்களின் போக்கை சிறப்பாக வெளிப்படுத்தி நிற்பதை இவ்விடம் நோக்கலாம்.

பொங்கல் நாளன்று வீதிவழியாக நடந்து செல்கிறார் ஔவையார். அங்கு ஓர் வீட்டில் பெண்மணியொருத்தி பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்து விட்டுச் சோகமாகவே உட்கார்ந்திருந்தாள். இதை அவதானித்த ஔவையார் அவ்விடம் சென்றார். அந்தப் பெண்மணியிடம் பேச்சுக்கொடுத்தார். "ஏனம்மா பொங்கவில்லை? சோகமாக இருக்கிறாய் என்ன காரணம்?" என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண்மணி, "பானை வாங்கினேன். தண்ணீர் ஊற்றினேன். கொஞ்சம் பால் ஊற்றினேன். நெய் வைத்திருக்கிறேன். வெல்லத்தைப் பொடியாக்கி வைத்துள்ளேன். அடுப்பு மூட்டினேன். பானையை அடுப்பில் வைத்தேன். அதற்கு முன்பே அடுப்பைப் பற்ற வைத்தேன்" என்றாள். இதைக்கேட்ட ஔவையார், "அப்புறம் ,என்ன செய்ய வேண்டும்?" "அரிசி வேண்டாமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

அப்போது அந்தப் பெண்மணி, "ஆமாம் எங்கள் வீட்டில் அரிசிப்பானையில் சில அரிசி மணிகளே உள்ளன. அரிசியை மறந்துவிட்டேன்" என்றாள். "அரிசியை மறந்தால் எப்படி அம்மா பொங்கி வரும்?" என்றார் ஔவையார். அதன்பிறகு அரிசி கொண்டு வந்து வைத்துப் பொங்கல் செய்தார்கள் என்று கதையை முடித்துக் கொள்ளலாம்.

### வெற்றுப் பானைகளாக பெரும்பான்மையினக் கட்சிகள்!

ஆனால் இந்த நிகழ்ச்சி ஔவையாரின் மனதிற்குள் கிடந்தது என்று சொல்வதை விட, தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் மனாங்கிடங்கில்தேங்கியிருந்து உறுத்திக்கொண்டே இருக்கிறது என்று சுட்டுவது சாலப் பொருத்தமாக இருக்கும். தவிர, வெறும் பானை பொங்குமோ மேல்! என்று அவர் பாடிய பாடல் ஒன்றின் கடைசி அடிகூட தமிழர்களின் சிந்தனைகளிலும் உணர்வுகளிலும் முதல் அடியாய் எழுந்து நிற்கிறது.

அதாவது வெறும் பானை பொங்கவே பொங்காது. பானைக்குள் அரிசியை இட்டால்தானே பொங்கிவரும் என்பதைப் போல, தமிழர்களுக்கான அரசியல் தீர்வைத் காலதிகாலமாகத் தர மறுகின்ற இலங்கை அரசின் அதிகார மேலாண்மைகள் மனப்பூர்வமாக முன்வந்து தமிழர்களின் விருப்பையும், அவர்கள் எதிர்கொண்டுவருகின்ற பிரச்சினைகளையும் உணர்ந்துகொள்ளாத வரை தமிழர்களுக்கு விமோசனம் இல்லை என்பது இடித்துரைக்கப்படுகிறது. இந்த மனிதர்கள் (சிங்களவர்கள்) வெற்றுப் பானைகளாகவே இருக்கிறார்கள் என்பதும் மாறுதலற்ற உண்மையாக வெளிப்பட்டு நிற்கிறது. இதை யாரும் மறுத்துரைத்துவிட முடியாது.

ஆகவே, ஓர் அரச இயந்திரம் சீராக இயங்கினால், குறிப்பாக அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு அதிகாரத்தை தீமையின் பக்கம் திருப்புகின்ற இழிநிலையில் இருந்து மீண்டு வந்தால் மட்டுமே நாடும் சிங்கள மக்களும் மட்டுமல்ல, தமிழ் மக்களும் நன்மைகள் பெற்று நலமாக வாழ முடியும் என்பது தெளிவாகிறது.

# தமிழர்களின் பிரச்சினைகளை 'பொதுக்களப்படுத்த' சிங்கள மொழிமூலமான தமிழ்த்தேசியப் பத்திரிகை அவசியம்



விவேகானந்தனூர் சதீஸ்

ஒரு குடும்பத்தில் இருக்கக்கூடிய தாய், தந்தை, பிள்ளைகளுக்கிடையில் புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் நிலவும் பட்சத்திலேயே அது நல்லதொரு குடும்பமாகப் பயணிக்க முடியும். அதேபோன்று பல்லினச் சமூகங்கள் வாழ்கின்ற நாட்டில் இன ரீதியாகவும், மத ரீதியாகவும் புரிந்துணர்வு என்பது அவசியமாகின்றது. ஒரு சமூகத்தின் உண்மையான பிரச்சினைகளை, தேவைப்படுகளை ஏனைய சமூகங்கள் அறிந்து கொள்ளத் தலைப்பட வேண்டும். இவ்வாறான இணக்கப்பாடு காணப்படுகின்ற நாடொன்றிலேயே பூரணமான சமத்துவதுவமும், சமநீதியும் நிலவ முடியும்.

### 'பயனுறுதிமிக்க பொறிமுறை' இனமுரண்பாட்டுக்கான தீர்வாக அமையும்!

அந்தவகையில், எமது நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஏழு தசாப்தகால இனமுரண்பாட்டுக்கு இன்றுவரை ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்று எட்டப்பட வில்லை. இதற்குப் பரஸ்பர புரிந்துணர்வின்மையே முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது.

தவிர மொழி முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. கடந்த மூன்றரை தசாப்கால அறவழிப் போராட்டத்தின் போதும் சரி, மூன்றரை தசாப்த கால ஆயுதவழிப் போராட்டத்தின் போதும் சரி தமிழ் சமூகத்தினுடைய உண்மையான நியாயமான பிரச்சினைகளை பெரும்பான்மையான சிங்கள மக்களிடையே கொண்டு செல்ல முடிய வில்லை. மாறாக எந்த ஒரு பயனுறுதிமிக்க பொறிமுறையும் கைக்கொள்ளப்படவில்லை என்றே கூறலாம். இந்த இடைவெளி விடுதலைப்புலிகளுக்குப் பின்னரான தற்காலச் சூழமைவிலும் தொடர்வதைக் காணமுடிகின்றது. இதற்குரிய காரணமாக கடந்தகால கருத்துச் சுதந்திர மின்மையை எடுத்துக்காட்டி யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது.

### கடந்த காலங்கள் கருத்துச் சுதந்திரத்துக்கு இடம்தரவில்லை!

இங்கு கருத்துச் சுதந்திரமென்பது, "ஒரு தனிநபர் எந்தவொரு கருத்தையும் எந்த விதத்திலும் தணிக்கையோ அல்லது தடையோ இன்றி அறிந்துகொள்ள, தெரியப்படுத்த, வெளியிடக்கூடியதாக இருப்பதேயாகும். அவ்வாறே சிந்தனைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், சமய சுதந்திரம், ஊடக சுதந்திரம் போன்றவையும் சமமானதாகவே கருதப்படுகிறது.

கடந்த காலங்களில் இவற்றை எமது நாட்டில் முழுமையாகக் கண்டுகொள்ள முடியாவிட்டாலும் ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர் அதில் ஒரு மாற்றத்தை அவதானிக்க முடிகிறது. இது நீடிக்குமா? இல்லை, நின்று போகுமா? என்பதெல்லாம் கனம் வாக்காளப் பெருமக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது.

### தீர்வைப்பெற மொழி ரீதியான புரிந்துணர்வு அவசியம்!

ஒரு ஜனசமூகத்தின் கருத்துக்களையும் பிரச்சினைகளையும் பிறிதொரு ஜன சமூகம் புரிந்துகொள்ளவேண்டுமாயின், அச்சமூகம் 'அறிந்த, தெளிந்த, தெரிந்த' மொழி வடிவில் அவர்கள் முன்கொண்டு செல்ல வேண்டும். அப்போது தான் அந்தச் சமூகத்தால் இலகுவில் விளங்கிக் கொள்ள முடியும். அதனடிப்படையில் எமது நாட்டில் மூன்றுக்கும் மேற்பட்ட இனச் சமூகங்கள் வாழ்ந்து வந்தபோதிலும் பிரதானமாக சிங்களம், தமிழ் என்ற இரண்டு தாய்மொழி பேசுகின்ற சமூகங்களாகவே அவர்கள் காணப்படுகிறார்கள்.

இருவேறு சமூகங்களும் ஒருவர் பிரச்சினையை மற்றவர் தெரிந்துகொள்ளக்கூடிய புரிந்துணர்வு நிலை ஏற்பட்டாலே புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

### ஊடகங்களின் கருத்தூட்டம் பலம் பெற வேண்டும்!

சமூகங்களுக்கிடையேயான கருத்துக்களைக் காவிச்சென்று தொடர்படல்களைத் தோற்றுவிக்கும் கருவியாக ஊடகங்கள் விளங்குகின்றன. ஒரு இனச் சமூகத்தின் உரிமைகள் அதிகாரத் தரப்புக்களால் மீறப்படுகின்ற அல்லது பறிக்கப்படுகின்ற போது பாதிக்கப்படுகின்ற சமூகம் தனது பக்க நியாயப்பாடுகளை ஊடகங்கள் வாயிலாகவே வெளிப்படுத்துவது இயல்பு.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டுதமிழினம் பெரும்பான்மையின அதிகார வர்க்கத்தால் அடக்கப்பட்டு ஆளப்படுகின்ற வரலாறுகளே இடம் பெற்று வருகிறது. மூன்றரை தசாப்தகால ஆயுதப் போராட்டமும்கூட ஏனைய சமூகங்களை விட தமிழர்களையே தயவு தாட்சன்யமின்றி தேடியழித்துள்ளது. இதுபோன்ற இழப்புக்களையும், இடர்பாடுகளையும், அதற்கான அடிப்படைக் காரணங்களையும் பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் சரியாக அறிந்திருக்க வில்லை. சிங்களமொழி ஊடகங்கள் அவற்றை இருட்டடிப்பு அல்லது புறக்கணிப்புச் செய்து வருகின்றது. அது அவர்களின் வணிக உத்தியாகக்கூட இருக்கலாம். இந்த விடயத்தில் தமிழ்த்தேசியம் பேசுகிறவர்கள் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

இதனால் சிங்களச் சமூகத்தின் மத்தியில் இருக்கக்கூடிய முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களும்கூட தமிழரின் பிரச்சினைகளை சரியாகப் புரிந்துகொள்ளாது, மாறாக இனவாதிகளின் வெற்றுக் கோசங்களை வேதமென ஏற்றுக்கொள்ளும் துர்ப்பாக்கியம் தொடர்கிறது. எமது நியாயபூர்வமான எதிர்பார்ப்புகள், அபிலாசைகள், சங்கடங்கள், சச்சரவுகள் குறித்து தமிழ்மொழிமூல ஊடகங்களில் மட்டும் நாமே எழுதி நாமே வாசிப்பதால் அரசிடமிருந்து எதிர்பார்க்கின்ற தீர்வுகளுக்கான முட்டுக்கட்டைகளை ஒருபோதுமே அகற்றிவிட முடியாது. எமது பிரச்சினைகள் நாம் அறிந்ததே. இவ்விடம் மேற்போந்த விடயங்கள் ஒரு பெரிய குறைபாடாகவே காணப்படுவதை யாரும் மறுத்துரைத்துவிட முடியாது.

### சிங்களமொழிமூல தமிழ்தேசிய ஊடகமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளது

மாற்றுமொழி ஊடகங்கள் வாயிலாக அதிலும் குறிப்பாக சிங்களமொழி ஊடகங்களில் தமிழர்களின் பிரச்சினைகள் முழுமையாகவும் நம்பகமாகவும் வெளிக்கொணரப்படுவதில்லை. நாட்டில் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய செய்திகளையும், சம்பவங்களையும் சிங்களமொழிமூல அச்சு ஊடகங்கள் வாயிலாக பொதுக்களப்படுத்துவது அவசியமாகின்றது. அதன்மூலம் கிராமப்புற பாமர சிங்கள மக்கள் முதல் அனைவரும் தமிழர் பிரச்சினைகளை அவர்தம் மொழியில் அறிந்துணர முடியும்.

அந்த வகையில், சிங்களமொழிமூல தமிழ்தேசிய ஊடகமொன்றின் வருகைக்கு தமிழ் சமூகம் இதுநாள் வரை வித்திடாமை கவலைக்குரிய விடயம். எனவே, காலத்தின் தேவையறிந்து இன முறுகலை தோற்றுவிக்காத வகையில் சிங்களமொழிமூல தமிழ்தேசியப் பத்திரிகையொன்றை காலதாமதமின்றி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவை உணரப்படுகிறது. தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கீடுகளை கட்சி அரசியல் சார்பற்று நடுநிலை நின்று வெளிக்கொணரும் பத்திரிகையாக அது அமையப்பெறும் பட்சத்திலேயே உரிய இலக்கை இலகுவில் அடைய முடியும். இந்த விடயத்தில் தமிழ் சிவில் சமூகங்கள் அதிக கரிசனை கொள்ள வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவோர் குறித்து அவதானமாக இருங்கள்!

வடக்கின் பாதுகாப்பு நிலமை மோசமாகியுள்ளது. மக்கள் வீடுகளில் பாதுகாப்புத் தேவைப்பாடுகளோடு முடங்கியிருக்க வேண்டிய சூழல் உருவாகிவருகிறது. பொது நிகழ்வுகளுக்குப் பயணிக்கும் போது தங்களுடைய உடமைகள் குறித்தும், வீட்டின் பாதுகாப்பு நிலை குறித்தும் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதை யாரும் மறுத்துரைத்துவிட முடியாது. ஏனெனில் அண்மைக் காலமாக அதிகரித்துவருகின்ற திருட்டுச் சம்பவங்கள் இதையே கடமைக்கூறாக இடித்துரைத்து நிற்கின்றன.

நேற்று வியாழக்கிழமை நண்பகலுக்குச் சற்றுப்பிந்திய வேளையில் வீடொன்றினுள் திடீரென நுழைந்த காவியுடை தரித்த இனம்தெரியாத நபர்கள் இருவர், அந்த வீட்டின் உரிமையாளரான பெண்மணியின் கைப்பையை எடுத்துக்கொண்டு தயாராக நின்ற உந்துருளியில் (மோட்டார் சைக்கிள்) தப்பியோடி விட்டனர். களவாடப்பட்ட கைப்பையில் ஒரு தொகைப்பணமும் அடையாளஅட்டை உள்ளிட்ட ஆவணங்கள் சிலவும் இருந்துள்ளன. தெல்லிப்பழை ஞானவைரவர் வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதுடன், அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தையும் ஏற்படுத்தி விட்டது.

இங்கு, "பழைய பொருள்கள் கொள்வனவு செய்வோர், ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி திரட்டுவோர் மற்றும் மருத்துவத் தேவைகளுக்கு பண உதவிகளை நாடி வருவோர்" என பல்வேறு தரப்பினர் அன்றாடம் வீடுகளுக்கு வந்து செல்கின்றனர். இவர்களுள் யார் நல்லவர்கள்? யார் கெட்டவர்கள்? என்பதை உய்த்துணர்ந்து அறிந்துகொள்ள முடியவில்லை.

தெல்லிப்பழையில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டோர் 'காவியுடை' தரித்தவர்களாக இனங்காணப்பட்டுள்ளதால், தற்போது காவியுடை தரித்து வருகின்ற ஏனையவர்கள் மீதும் மக்கள் சந்தேகம் கொள்ளவேண்டிய அவலநிலை தோன்றியுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வீடுகளில் உள்ளவர்கள் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிசெய்துகொள்ள வேண்டும். பகல் பொழுதில் வீடுகளின் கதவுகளைத் தேவையற்ற வகையில் திறந்து வைத்திருப்பதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுவோர் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும். அயலவர்களோடு நல்லுறவைப் பேணிக் கொள்ள வேண்டும். ஆபத்து என்று உணர்ந்துகொண்டால் விரைந்து அவர்களுடைய உதவியை நாட வேண்டும். திருட்டு நிகழ்ந்த பின்பு நடந்தவைகள் குறித்து அழுவதால் பயனில்லை! பிரதேச ரீதியில் பாதுகாப்புக் கடமையில் பொறுப்பாக இருக்கின்ற பொலிஸ் பிரிவுகள் இவ்வாறான திருட்டு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவது குறித்து முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

*பா.மலர்விழி, மாவிட்டபுரம்.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி நீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# உன்னைப்போல் ஒருவன்

சோக்கிரடீசிடம்ஒருமாணவன்வந்தான். "ஐயா நல்ல மாணவன் எப்படி இருக்கவேண் டும்" என்றுகேட்டான். அதற்குஅவர்ஒருமாணவன் கொக்கைப் போலவும் கோழியைப் போலவும் உப்பைப் போலவும் உன்னைப் போலவும் இருக்க வேண்டும்" என்றார்.


"ஐயா சற்று விளக்கமாகச் சொல்வீர்களா? அது எப்படி கொக்கைப் போல?" என்றான். "கொக்கு தான் நினைத்தைச் சாதிக்க எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் ஒற்றைக்காலில் நிற்கும். அதாவது தனது இலக்கான மீனைப் பெறுவ தற்கு. அதேபோல ஒரு மாணவன் பொறுமை யாக இருந்து தனது இலக்கை அடைய வேண் டும்" என்றார். மீண்டும் மாணவன் "ஐயா கோழியைப்போல இருக்க வேண்டும் என்றீர் களே? அது எப்படி?" என்று கேட்டான். "கோழி குப்பையைக் கிளறுகிறது.

அந்தக் குப்பைக்குள் தனக்குத் தேவையான இரையைத் தேடுகிறது. அது கிடைத்ததும் அந் தப் குப்பைகளை அப்படியே விட்டுவிட்டு இரையைமட்டும்பக்குவமாககொத்திஎடுக்கும். அதேபோலமாணவர்களும்கற்கும்போதுபல நன்மைகளோ தீயவற்றைத் தவிர்த்து நல்ல வற்றை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார். சரிஉப்பைப்போலஇருக்கவேண்டும் என்றீர்கள் எப்படி?" என்று கேட்டான் மாண வன்.


"ஆமாம் எந்த உணவோடு கலந்தாலும் உப்பு அந்தஉணவில்இருக்கிறதென்றுகூறமுடியும். ஆனால்உணவில்உள்ளஉப்புகண்ணுக்குத் தெரியாது. ஆனால் அதன் சுவையை மட்டும் உணரமுடியுமல்லவா? அதேபோலமாணவர் கள்எந்தத்துறையில்கற்கமுடிந்தாலும்அந்தத் துறையில் சிறப்பான தனித்தன்மையை வெளிப்படுத்தி தனது மறைவுக்குப் பின்னும் அந்தத்திறமையானசெயலைஇவர்தான்செய் தார் என்று கூறும்படி விளங்க வேண்டும்" என் றார் சோக்கிரட்டீஸ்.

இப்போதும் அந்த மாணவன் அவரை விட வில்லை. "குருவே எல்லாம் சரி புரிந்து கொண் டேன். ஆனால் கடைசியில் கூறினீர்களே என் னைப் போல் என்று..." "ஆம் ஒரு மாணவன் என்பவன் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை எந்தவித தயக்கமும் இன்றி ஆசிரியரிடம் கேட் டுத் தெளிவு பெற வேண்டும். அதற்காகத்தான் உன்னைப் போல இருக்க வேண்டும்" என் றேன். மாணவனும் மகிழ்ச்சியுடன் அவரை வணங்கினான்.

## வழிகாட்டுவோம்



எண்களை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



## அறிந்து கொள்வோம்

1. ஒரு தேனீயால் எத்தனை முறை கொட்ட முடியும்?
   ஒரே ஒரு முறை
2. மின்தடையை கண்டுபிடித்தவர் யார்?
   ஓம்
3. முகப்பூச்சைக் கண்டுபிடித்த நாடு எது?
   இத்தாலி
4. கிரிக்கெட் விளையாட்டு எங்கு தோன் றியது?
   இங்கிலாந்து
5. கனநீரை கண்டுபிடித்தவர் யார்?
   யூரி
6. வெப்பநிலை மானியைக் கண்டுபிடித் தவர் யார்?
   சிக்ஸ்
7. சட்டையை கண்டுபிடித்தவர்கள் யார்?
   எகிப்து நாட்டவர்கள்
8. தீப்பெட்டியை கண்டுபிடித்தவர் யார்?
   லேண்ட் டார்ம்
9. தாய்லாந்தின் பழைய பெயர் என்ன?
   சயாம்
10. கலிலியோ எந்த ஆண்டு தெர்மா மீட் டரை கண்டுபிடித்தார்?
    1593
11. மாரத்தான் ஓட்டப்பந்தையம் எத்தனை மைல் தூரத்தை கடப்பதாகும்?
    26 மைல்
12. காற்று நகரம் என்று எதை அழைக் கிறோம்?
    சிக்காகோ
13. ஒலிம்பிக் கொடி எந்த ஆண்டில் அறி முகமானது?
    1920




**அலெக்சாண்டர்:**
வாழ்வில் நான் என் தந்தைக்கு கடமைப்பட்டிருக்கி றேன். ஆனால் முறையாக வாழ்வதில் நான் என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**போல்**
ஒருவன்தான்தவறுசெய்ததைஒப்புக்கொள்ள வெட் கப்படக்கூடாது. ஒப்புக் கொள்வதன் பொருள் என்ன நேற்றையதை விட இன்று அவனது அறிவில் முதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று பொருள்.

**கன்ஃபூஷியஸ்**
மற்றவர்கள் உங்களுக்கு என்னவெல்லாம் செய்ய வேண்டாமென்று நீங்கள் விரும்புகின்றீர்களோ அவற்றை மற்றவர்களுக்குச் செய்யாமல் இருந்து விடுங்கள்.

**கிரேசியன்**
எமக்குத் தேவையில்லாத காரியங்களில் ஈடுபடு வதை விட சும்மா இருப்பது எவ்வளவோ மேல்.

**ராபர்ட்லின்ட்**
வாழ்க்கையில்எமக்குவரும்துன்பங்களில்பாதிக்கு மேல் நாமே கற்பனை செய்து கொள்பவளைதான்.

**டிக்கன்ஸ்:**
உங்கள் வாழ்க்கையில் கடந்துபோன கணங்க ளைத்திருப்பிக்கொண்டுவர முயற்சிசெய்யாதீர்கள்.

# மக்களை ஈர்க்கும் பேச்சுக்கலை

பேச்சு என்னும்போது மேடைப் பேச்சு மட்டுமன்றி சாதாரண மக்களின் உரையாடல்களிலும் கலை நயம் இருப்பதைக் காணலாம். எந்த ஒரு கருத்தை யும் அதை வாசிக்கும்போது அதிக ஆர்வம் காட்டாத வர்கள் அதே கருத்தை வைத்து ஒருவர் உணர்ச்சி ததும்பப் பேசும்போது அதைக் கண்டு ரசித்து ஏற்றுக் கொள்கிறார்கள். உலகில் எத்தனையோ பேர் தமது பேச்சுத்திறமையால்மக்களைக்கவளர்ந்துநாட்டின் தலைவர்களாக உயர்ந்துள்ளார்கள்.

ஆரம்பகாலத்தில்பேச்சுகற்றறிந்தவர்களுக்குமட்டும் விளங்கக் கூடியதாக இலக்கண மரபுடன் கூடியதாக இருந்தது. வி.கல்யாணசுந்தரனார், பாரதியார் போன்றோர் எளிய கடையை அறி முகப்படுத்தி வெற்றிகளை ஜெனரஞ்சகமாக எளிய சொற்களையும் சொற்தொடர்க ளையும்கொண்டபேச்சுவழக்குத்தமிழ்நடைமுறையில்வந்தது. அரசியலிலேயே அமெரிக்கஅரசதலைவர் ஆபிரகாம்லிங்கன்நீக்கிரோக்களின்அடிமைத்தனத்தை நீக்கும் சிரமமான பணியில் ஈடுபட்டபோது அவரது பேச்சு வன்மை அவருடைய முயற்சிக்குஉறுதுணையாகஇருந்தது. சீசரின்பால்மக்களுக்குஅனுதாபத்தையும் சீசரின் எதிரிகள் மேல் வெறுப்பையும் ஏற்படுத்தி மார்க் அன்ரனியின் பேச்சு வர லாற்று முக்கியம் பெற்றதாகும்.



இருபதாம்நூற்றாண்டில்இங்கி லாந்தில் வின்சென்ற் சேர்ச்சில் பாரதத்தில் ஜெவகர்லால் நேரு இந்தோனேசியாவில் சுகர்னே ஆகியோர்தமதுபேச்சுவன்மை யால் மக்களிடையே செல்வாக் குப் பெற்று தலைவர்களாக விளங்கினர்.

பொதுவுடமை நாடான ரஷ்யா வில் லெனினின் உரைகளும் கியூபாவின் காஷ்ரோவின் உரைகளும் மக்கள் மத்தியில் பொதுவுடமைச்சித்தாந்தம் வளர வழி செய்தன.

துர் அதிர்ஷ்ட வசமாக நல்ல பேச்சாற்றல் தீய விளைவுகளுக்கு காரணமாகவும் அமைந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின் கொடிய விளைவுகளுக்கும் யூதர் மேல்நடத்தப்பட்டகாட்டுமிராண்டித்தனமான இனஒழிப்புக்கும்ஹிட்லர்ஜேர்மனி யில்அதிகாரத்தைக்கைப்பற்றினான். இன்றுபலநாடுகளில்துவேசகருத்தக்களை தங்கள்பேச்சுவன்மையால் மக்கள் மனதில் புகுத்தி இனவேற்றுமையைத் தூண் டிவிடுகிறார்கள். வர்த்தகத்துறையிலும்சமூகவாழ்விலும்மோசடிசெய்யுமம்தமது சாதுரியமான பேச்சினால் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கின்றனர். இன்றும் போலி வைத்தியர்கள் வளரவும் மந்திரவாதிகள், சோதிடர்கள் ஆகியோரின் உயர் வுக்கும் இந்த மக்களை கவரும் போலியான பேச்சுக்களே காரணமாகும்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கமலர் சிவசுந்தரராசா



காரைநகர், சந்தம்புளியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமலர் சிவசுந்தரராசா நேற்று (23.12.2018) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவசுந்தரராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர், தங்கரத்தினம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும் மதிமலர், அமுதா, சிவசங்கர், பிரமாலினி, ஜெயமாலினி ஆகியோரின் தாயாரும் கலைஈசன், காண்டீபன் ஆகியோரின் மாமியாரும் நஸ்மிதா, பிரசஜந்தி, நர்மிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2018) செவ்வாய்க் கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சிவசுந்தரராசா**

**"ராசா" றைக்கிளீன், ஜெயா ஸ்ரோர்ஸ், புதுறோட், காரைநகர்.**

(CS.22043/15/17)

### திருமதி வினோதினி விஜேந்திரன்

*(முகாமைத்துவ உதவியாளர் - நல்லூர் பிரதேச செயலகம்)*



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வினோதினி விஜேந்திரன் 21.12.2018 வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம் (எழுதுவினைஞர் - ஊர்காவற்றுறை) மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும் மூதுரைப் பிறப்பிடமாக கொண்ட காலஞ்சென்ற விஜேந்திரனின் மனைவியும், சுஜீவன் (யாழ்ப்பாணம் இந்து கல்லூரி உயர்தர கணிதப் பிரிவு 2019 மாணவன்), கோபிராஜ் (புனித சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோ ரின் பாசமிகு தாயும், குகனேசன் (சவூதி), சிவனேசன் (நோர்வே), விக்னேசன் (காரைநகர்), தயாளினி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், திருமகள் (உள்நாட்டு இறைவரி திணைக்களம் - யாழ்ப்பாணம்), சாந்தி (நோர்வே), ரதிமலர், சந்திரராஜனன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதுறோட்,**
**காரைநகர்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(cs 22035) (13.17)

### சபாரத்தினம் செல்வராசா



வட்டு. கிழக்கு, சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வடக்கம்பரை, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் செல்வராசா நேற்று (23.12.2018) காலமானார்.

அன்னார் சபாரத்தினம் - சிந்தாமணிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனும் சீனிவாசகம் - பரமேஸ்வரி தம்பதிகளின் மூத்த மருமகனும் செல்வரதியின் அன்புக் கணவரும் சாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையாரும் கருணேஸ் (இளவாலை பொலிஸ் நிலையம்), அன்பு மாமனாரும் சிவகாமிபிள்ளை (கனடா), ஆனந்தராசா (கனடா), சிறிஸ்கந்தராசா லீலாவதி (கனடா), சிவராசா (கனடா), லிங்கராஜா2 (கனடா),காலஞ்சென்றஜெயராசாமற்றும்மனோகரராசா(கனடா),பத்மாவதி(பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (மலேசியா), சண்முகராசா (மலேசியா), பத்மராசா (மலேரியா), தவராசா (மலேசியா), காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாகேந்திரம் (U.K.), ராசேந்திரம் (டென்மார்க்), புஸ்பரதி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் சுகுணலிங்கம் யோகாம்பிகை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2018) திங்கட்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர். 077 498 7434**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் கணினிப்பிரிவில் பணியாற்றும் திருமதி ஸ்ராலின்போல் ஜெயா அவர்களின் அன்புத்தந்தை


### குமாரவேலு சிதம்பரப்பிள்ளை

நேற்று இறைவனடி சேர்ந்தார் அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் ,அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**உதயன் குழுமம்**

## மரண அறிவித்தல்

**பிறப்பு** 25 . 12 . 1945



**இறப்பு** 21 . 12 . 2018

### நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் கடந்த (21.12.2018) வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் சிவஞானசுந்தரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கிருபாலன், கிருபாலினி, மீராஜி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஜீவின் அன்பு மாமனாரும் சிறிஸ்சின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாரந்தனை வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மடம் ஒழுங்கை,**
**திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி.**

**தகவல்:**
**பா.சிவஞானசுந்தரி**
**(மனைவி)**

# மத்தியின் மணிவிழா நாயகியை
## மனதார வாழ்த்துகின்றோம்

### நானிலத்தில் நல் ஆசானாய்



திருமதி இந்திராணி சிவனடியான் அவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 19 ஆண்டுகள் சேவை யாற்றி ஓய்வு பெறும் இந்நாளில் வாழ்த்துக் கூறுவதில் மட்டற்ற மகிழ்வடை கிறேன்.

இருநூற்றாண்டு கடந்து வெற்றிப் பாதையில் செல்லும் மத்தியத் தாயின் மைந்தர்களின் மனங் களை வென்றவர் என்பதில் ஐயமில்லை.

**பாரினில் தமிழ் வளர்த்தோர் உண்டு – நீர்**
**எம்பள்ளியில் தமிழ் வளர்த்த அம்மை இது மெய்**
**வள்ளுவனும் பாரதியும் சொன்ன சொல்லை**
**உம்போல் சொல்ல எவருமில்லை**
**வாய் மொழியே தமிழ் நடை வெள்ளம்**
**மகிழ்வுடன் நிறையும் கேட்பவர் உள்ளம்**
**தமிழுக்கு நீர் சிறப்புச் செய்தீர், அந்தத்**
**தமிழாலே நீங்கள் சிறப்பும் பெற்றீர்கள்**

கல்லூரி வரலாற்றில் தமிழ் பாட சிரேஷ்ட ஆசிரி யராகவும், பாட இணைப்பாளராகவும் பணி யாற்றி கல்லூரிக்கு சிறந்த பெறுபேற்றை பெற வைத்து பெருமை சேர்த்தார்.

இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக நோய் இன்றி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**அதிபர்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

Congratulations

(CS 21926)(14:17)

## திருமதி இந்திராணி சிவனடியான்



| | | |
|---|---|---|
| தந்தை | : | சண்முகம் கந்தையா |
| தாய் | : | புதஞ்செல்வி கந்தையா |
| பெயர் | : | திருமதி இந்திராணி சிவனடியான் (SLES I) |
| பிறந்ததிகதி | : | 24.12.1958 |
| பிறந்த இடம் | : | வவுனியா |
| ஆரம்பக்கல்வி | : | வ/வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் |
| இடைநிலைக்கல்வி | : | யாழ் இந்து மகளிர் கல்லூரி |
| உயர்கல்வி | : | கலைமாணி (பேராதனைப் பல்கலைக்கழகம்) |
| தொழிற்தகைமை | : | பட்டப்பின் கல்வி டிப்ளோமா (தேசிய கல்வி நிறுவகம்) |

### சேவை விவரம்

அ/கலாவெவ முஸ்லீம் ம.ம.வித்தியாலயம்
24.04.1984 - 25.01.1994
வ/வவுனியா தமிழ் ம.ம.வித்தியாலயம்
26.01.1994 - 21.02.1999
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
22.02.1999 - 24.12.2018

Congratulations Congratulations

**ஆசிரியர் வட்டம் 2018**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

### வாழ்த்துச் செய்தி



நாடுபூராகவும் நன்மாணாக்கர்களை உருவாக் கும் நடமாடும் தெய்வங்களே ஆசிரியர்கள். இப் புனிதமான தொழிலை 1999 ஆம் ஆண்டிலி ருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யில் தமிழ் ஆசிரியையாக பணியாற்றிய திருமதி இந்திராணி சிவனடியான் அவர்களை ஆசிரியர் வட்டம் சார்பில் வாழ்த்து வதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன். எமது கல்லூரியில் இரண்டு தசாப்தங்களாக மாணவர்களுக்கு எமது தாய் மொழியாகிய தமிழை ஒரு தாயாக இருந்து கற்பித்து அவர்க-ளின் பெறுபேற்றை உயர்த்தி அவர்களின் வளர்ச்சியிலும், விருத்தியிலும் வித்திட்டவர் என்பது எவ்வித ஐயமுமில்லை. பல தமிழ் பேச்சாளர்களை உருவாக்கி கல்லூரிக்கு பெருமை சேர்த்தவர் ஆவார். சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோ ருடனும் அன்பாகவும், பண்பாகவும், மென்மையான பேச்-சாலும், ஆலோசனையாலும் அனைவரது உள்ளங்களில் இடம்பிடித்த இவர் "சேவையின் முடிவு ஓய்வு" என்பது உலக நியதி. அந்த வகையில் தனது சேவைக்காலத்தை சிறப்புறப் பணியாற்றி ஓய்வு பெறும் இவரது ஓய்வுக் காலம் மிகவும் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

**சோ.பரணீதரன்**
**தலைவர்**
**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

Congratulations

### வாழ்த்துச் செய்தி



பணிவோய்வு பெறும் மத்திய கல்லூரியின் தமிழ்பாட இணைப்பாளர் திருமதி இந்திராணி சிவனடியான் அவர்களுக்கு வாழ்த்துரைப்ப-தில் பெருமிதமடைகின்றேன்.

திருமதி இந்திராணி சிவனடியான் அவர்கள் தனது 34 வருட கல்விப் பணியில் சுமார் 2 தசாப்தங்களை யாழ்.மத்திய கல்லூரியில் சேவை நல்கியமை வரலாற்றுப்பதிவாகும்.

அர்ப்பணிப்பு, நேரமுகாமைத்துவம், அன்பான அணுகு முறை, நவீன கற்பித்தல் நுட்பப் பயன்பாடு ஆகியவற்றில் ஏனைய ஆசிரியர்களுக்கு நல்லுதாரணமாகத் திகழ்கிறார் நம் மணிவிழா நாயகி. தன் கற்பித்தல் பணிக்கு மேலதி-கமாக நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் தன் பங்களிப்பால் வலுவூட்டியவர். மாணவரின் அறிவு, ஆற்றல், ஆளுமை விருத்தியில் நிகரில்லாப் பணியாற்றிய திருமதி இந்திராணி சிவனடியான் அவர்களின் ஓய்வு காலம் இறையருளோடு நலமே அமைய வாழ்த்துகின்றேன்.

**S.Thevakumaran SLEAS III**
**Dividional Director of Education**
**Jaffna.**

Congratulations

## Invitation for Bids (IFB)- Cleaning Service

**Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council**

**Cleaning Service for Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - NP**
**NP/03/03/CF/F5/CLES/2018/059**

1. The Chairman, Ministry Procurement Committee on behalf of the Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council now invites sealed bids from eligible and qualified bidders for Cleaning Service for Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - NP
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a. Bidders shall have valid business registration
   b. and approval of the Ministry of Defense to provide security service
   c. and shall have its registered office or branch in Northern Province
4. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria if given in Section2 – Bidding Data.
5. Interested bidders may obtain further information from Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council, Chemmany Road, Nallur and inspect the bidding documents at Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs from 9.00hrs to 15.00hrs on working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - NP from 2018.12.24 to 2019.01.13 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs 3,500.00 The method of payment will be cash.
7. Bids shall be delivered to Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council, Chemmany Road, Nallur, Jaffna on or before 14.00 hrs on 2019.01.14 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a Bid-Security of Rs 276,500.00

**Name : S.Sathiyaseelan**
**Designation : Chairman, Ministry Procurement Committee**
**Address : Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - NP Chemmany Road, Nallur, Jaffna**
**Telephone : 021 221 9259**
**Fax : 021 222 0794**

(IN 8822) (14.17)

## Invitation for Bids (IFB)- Security Service

**Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council**

**Security Service for Ministry of Education, C ultural Affairs, Sports & Youth Affairs - NP**
**NP/3/3/F5/CF/SECS/2018/060**


1. The Chairman Ministry Procurement Committee on behalf of the Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council now invites sealed bids from eligible and qualified bidders for Security Service for Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - NP
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;
   a. Bidders shall have valid business registration
   b. and approval of the Ministry of Defense to provide security service
   c. and shall have its registered office or branch in Northern Province
4. To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying criteria if given in Section2 –Bidding Data.
5. Interested bidders may obtain further information from Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council, Chemmany Road, Nallur and inspect the bidding documents at Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs from 9.00hrs to 15.00hrs on working days.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Secretary, Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - NP from 2018.12.24 to 2019.01.13 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non-refundable fee of Rs 3,500.00 The method of payment will be cash.
7. Bids shall be delivered to Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - Northern Provincial Council, Chemmany Road, Nallur, Jaffna on or before 14.00 hrs on 2019.01.14 Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a Bid-Security of Rs 155,300.00

**Name : S.Sathiyaseelan**
**Designation: Chairman, Ministry Procurement Committee**
**Address : Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs - NP Chemmany Road, Nallur, Jaffna**
**Telephone: 021 221 9259**
**Fax : 021 222 0794**

(IN 8822) (14.17)

# ஜனவரியில் வெளியாகும் கொலையுதிர் காலம்!

நடிகை நயன்தாரா நாயகியாக நடித்திருக்கும் 'விஸ்வாசம்' படம் வரும் பொங்கலுக்கு வெளியாகிறது. தவிர 'ஐரா', 'கொலையுதிர் காலம்', 'சைரா நரசிம்ம ரெட்டி', 'லவ் ஆக்‌ஷன் ட்ராமா' உள்ளிட்டப் படங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தமாகியுள்ளார். இதில் கொலையுதிர்காலம் படத்தைசக்ரி டோலேட்டி இயக்குகிறார். இதில்நடிகை பூமிகா முக்கியக் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்தப் படத்துக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். இந்தியில் பிரபு தேவா, தமன்னாவை வைத்து இந்தப் படம் இயக்கப்படு வதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் த்ரில்லர் களத்தில் படமாக்கப்பட்டிருக்கும் 'கொலையுதிர்காலம்' திரைப்படம் வரும் ஜனவரியில் வெளியாகும் என அறி விக்கப்பட்டுள்ளது.









# இன்றைய நாள்

**மேடம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**இடபம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். குடும்பத்தினர் உதவிகரமாகச் செயல்படுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**கடகம்:** சிறிய வேலைக்கும் விடா முயற்சி தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை உருவாகும். இலாபம் ஓரளவுக்கு இருக்கும். விருந்தினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும்.

**கன்னி:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**துலாம்:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில், வியாபா ரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

**விருச்சிகம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உண்டாகும். சேமிக்கும் விதத்தில் பணவரவு கிட்டும்.

**தனுசு:** முக்கிய செயல் நிறைவேற தாமதமாகலாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.

**மகரம்:** இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில்வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கும்பம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் வங்கிநிதியுதவியுடன் விரிவாக்கப்பணியில் ஈடுபடுவீர்கள்.

**மீனம்:** சமூகத்தில் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். நீண்டநாள் .இலட்சியம் நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருக்கும்.







# கடவுளைக் காண்போம்



ஒரு சிறுவன் கடவுளைப் பார்க்க வீட்டில் இருந்து புறப்பட்டான். அதிக தூரம் பயணம் செய்ய வேண்டி இருக்குமே என்று தின்பண்டங்களையும்மதிய உணவையும்பையில்எடுத்து கொண்டான். காலையில் இருந்து நடக்க ஆரம்பித்தவன் சிறிது நேரம் ஓய்வு எடுக்கலாம் என்று அருகில் உள்ள பூங்காவுக்குள் நுழைந்தான். அங்கு வயதான பெண்மணி ஒருவர் புறாக்கள் சாப்பிடுவதை பார்த்து கொண்டே இருந்தார்.

நடந்து வந்த களைப்பில் தாகம் எடுக்கவே தண்ணீர் குவளையைத் திறந்து தண்ணீர் குடிக்க ஆரம்பித்தான். அந்தபாட்டி அவனையேபார்த்து கொண்டிருந்தாள். ஒரு வேளை பாட்டிக்கு தாகமாக இருக்குமோ என்றெண்ணி தண்ணீர் குவளையை நீட்டினான். பாட்டியும் அவனை பார்த்துஅழகாகபுன்னகைத்துவிட்டுதண்ணீரை வாங்கி குடித்தாள்.

அந்தச் சிறுவன் இதுவரை அவ்வளவு அழகான புன்னகையை பார்த்ததில்லை அதனால் திரும்பவும் பாட்டி புன்னகையை பார்க்க தான் கொண்டு வந்து உணவுப் பொட்டலத்தைப் பிரித்து கொடுத்தான்.

அந்தப் பாட்டியும் மீண்டும் அவனை பார்த்து புன்னகைத்துவிட்டு அவன் கொடுத்த உணவைச் சாப்பிட ஆரம்பித்தாள். இரண்டு பேரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை ஆனால் அடிக்கடி ஒருவரை பார்த்து ஒருவர் புன்னகைத்து கொண்டே இருந்தனர்.


நேரம் ஆக ஆக அம்மா ஞாபகம் வந்தது சிறுவனுக்கு...அதனால் எழுந்து வீட்டிற்கு நடக்க ஆரம்பித்தான். சிறிது தூரம் நடந்தவன் சட்டென திரும்பி குடுகுடுவென்று ஓடி சென்று பாட்டியை கட்டி அணைத்தான். பாட்டி அவன் செயலை பார்த்ததும் மிகவும் பிரகாசமாகச் சிரித்தாள்.

சிறுவன் வீட்டிற்குள் நுழைந்ததும் அவன் மிகுந்த சந்தோஷத்தில் இருப்பதைப் பார்த்த அவன் அம்மா, "என்ன நடந்தது?" என்று கேட்டாள். "நான் மதியம் கடவுளுடன் சாப்பிடேன். கடவுளின் புன்னகை மாதிரி நான் இதுவரை எங்கும் பார்த்ததில்லை" என்றான்.


அறிமுகம் இல்லாதவர்களிடம் சிறு புன்னகை, ஆறுதலான வார்த்தைகளைப் பேசி அவர்களுக்கு சிறிய உதவி செய்து பாருங்கள் நீங்களும் கடவுள்தான். கடவுள் வேறெங்கும் இல்லை நம்மிடம் தான் இருக்கிறார்.

## சுடோக்கு

எண் விளையாட்டு



நேற்றைய விடை



## 'அப்பலோ' மருத்துவமனையில்....



## விற்பனைக்கு

தனிப்பாவனையிலுள்ள C -90 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு. விலை அதிகமில்லை.

**077 967 2688**


## ஸ்கொட்லாண்ட்

சேன ஆராய்ந்து வருகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பாக அதிகாரிகளுடன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆலோசித்து வருகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசிய முன்னணியின் குழுவொன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் கடந்தவாரம் சந்தித்திருந்தது. அதில், கூட்டு அரசில் சட்டம் ஒழுக்கு அமைச்சராகக் கடமையாற்றிய ரஞ்சித் மத்தும பண்டார மீது நம்பிக்கையில்லை. தேவை ஏற்பட்டால் சட்டம் ஒழுங்கு அமைச்சராகத் தகுதியான ஒருவரை நான் நியமிப்பேன் என்று அரச தலைவர் குறிப்பிட்டார் என்று கூறப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரத்தை நான் பொறுப்பேற்ற பின்னர் என்னைக் கொல்லும் சதி முயற்சி தொடர்பான விசாரணைகள் சிறப்பாக நடைபெறுகின்றன என்றும் அதில் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.

அப்போது குறிப்பிட்ட அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார, நான் விசாரணைகளை உரிய முறையில் முன்னேடுப்பேன் என்று கூறினார் என்றும் தெரியவருகின்றது.

முன்னைய அரசில் விசாரணைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை. சட்டம்ஒழுக்கு அமைச்சுக்குப் பதில் தலைமை அமைச்சர் அலுவலகமே விசாரணைகளைக் கையாண்டது. முன்னரும் நீங்கள் சட்டம் ஒழுங்கு அமைச்சராகப் பதவி வகித்தீர்கள். அப்போது உங்கள் வேலையை நீங்கள் செய்தீர்களா?. தலைமை அமைச்சர் அலுவலகமே அதைச் செய்தது என்று மைத்திரிபால சிறிசேன சீற்றத்துடன் பதிலளித்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையிலேயே விசாரணைகளை ஸ்கொட்லாண்ட் யார்ட் பொலிஸாரிடம் ஒப்படைப்பது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆலோசித்து வருகின்றார் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

அதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரைக் கொல்ல செய்வதற்கான முயற்சிகள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எவற்றையும் விசாரணையாளர்கள் கண்டுபிடிக்கவில்லை என்று பன்னாட்டு செய்தி நிறுவனமான ரொய்ட்டர்ஸ் கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தது.

கொலைச் சதி முயற்சி குறித்த தகவலை வெளியிட்ட நாமல் குமாரவுக்கும் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்கள் ஆதாரங்கள் உள்ளன என்று பொலிஸ்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்திருந்தார். ஆனால் நாமல் குமாரவின் குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் உறுதியான ஆதாரங்கள் எதனையும் கண்டுபிடிக்கமுடியவில்லை எனவும் அவர் கூறினார் என்றும் ரொய்ட்டர்ஸ் குறிப்பிட்டிருந்தது. (ந)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் மதிமோகன்

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் மதிமோகன் 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - செல்வமணி தம்பதிகளின் அன்பு மகனும் தவயோகத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் கானமூர்த்தி (லண்டன்), ஜெயச்சந்திரன், வனிதாமணி, ராஜேந்திரா(ஜேர்மனி), விஜயசிறி(லண்டன்), ஜெயசிறி(பிரான்ஸ்), கலாவதி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.12.2018)ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**14/1, துரைராசா வீதி, முருகமூர்த்தி கோயிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.** (CS 22036) (14.17)

தகவல் : **ச.ஜெயச்சந்திரன் 077 891 0342**

## மரணஅறிவித்தல்



### திருமதி வள்ளியம்மை துரைஜயா

யாழ். ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை துரைஜயா 22.12.2018 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற துரைஜயாவின் மனைவியும் கணேசானந்தன், கமலாதேவி, நித்தியானந்தன், சற்குணானந்தன், யோகநாதன், சிவயோகமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற முத்துத்தம்பி மற்றும் சாவித்திரி, பூமணி, பிள்ளையம்மா, சிறிகரன் ஆகியோரின் அன்பு மாமியும் யானகி, யமுனா, சமினா, லிங்கேசன், நிசோத், நிரோஸ், நித்தியா, கரன், சுதர்சன், அருணியா, அனோயா, அனோதன், யோகதர்சினி, சத்ஜதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நீர்வேலி.** (CS 21982) (14.17) தகவல்: **குடும்பத்தினர்.**

**077 656 9572**

## மரண அறிவித்தல்

### திருமதி ஈடித் புவனேந்திரசிங்கம் (இந்திரா)

*"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"*



மலர்வு 15.09.1950 உதிர்வு 23.12.2018

ஒடக்கரை வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் வசந்தபுரம் மற்றும் வளன்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈடித் புவனேந்திரசிங்கம் (இந்திரா) நேற்று (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவல் - சிசிலியா தம்பதிகளின் அன்பு மகளும் புவனேந்திரசிங்கத்தின் மனைவியும் கனிஸ்ரெலாவின் பாசமிகு தாயாரும் பார்த்தீபனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.12.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் வழிபாடு நடைபெற்று கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 22042/13/17) தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### நாகேசு புஸ்பநாதன் (நவம்)



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், பழம் றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு புஸ்பநாதன் (நவம்) அகால மரணமானார்.

அன்னார் வசுந்தரா (லதா) வின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகேசு - தங்கம்மா தம்பதிகளின் இளைய புதல்வரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் திலகவதி தம்பதிகளின் மருமகனும் பத்மாவதி, காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் புஸ்பவதி, கமலாவதி, காலஞ்சென்ற கேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் முரளிதரன், கிரிதரன், சிறிதரன், கலாதரா, சுமித்திரா, விக்னராசா, காலஞ்சென்ற தியாகராசா மற்றும் தில்லைநடேசன் (இராசன்), காலஞ்சென்ற வள்ளிநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.12.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**66/2A, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.** (CS 22041/15/17) தகவல்: **குடும்பத்தினர்.**


## வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கையில் மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. மாதாந்த வாடகை 10 000 /= முற்பணம் (150 000/=)

**075 950 0552/ 075 707 0709**

## வீடு வாடகைக்குண்டு

கோண்டாவில் மேற்கு, உப்புமடம் சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் மேல் மாடி வீட்டின் மேல் தளம் வாடகைக்கு உண்டு. **- 077 132 8557/ 077 598 7500**

(CS 22039/15/17)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1989, சதய நட்சத்திரம், Diploma in Hotel • Managment &Tourism பட்டம் பெற்றவர் தற்போது மாலைதீவில் வேலைபுரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. (மூன்று மொழியும் தெரிந்திருப்பது விரும்பத்தக்கது)

**078 632 2108 / 071 846 4442**


## மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 18 |
| 01 | 12 |
| 1942 | 2018 |



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 | 23 |
| 02 | 12 |
| 1936 | 2018 |

கனடாவில் காலமாகிய நயினைக்கவிஞரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபருமாகிய

### நா.க.சண்முகநாதபிள்ளை

மற்றும் அவரது பாரியார்

### பத்மாசனிதேவி சண்முகநாதபிள்ளை

ஆகிய இருவரதும் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2018) திங்கட்கிழமை பிற்பகல் (இலங்கை நேரப்படி) கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நயினாதீவு - 03** **தகவல்: குடும்பத்தினர்.**


## எங்கள் அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களே!

எங்களிடம் அற்லஸ், சீபிறா, ஸ்கூல்மற், ரட்ணா, எல்லாக் கொப்பிகளுக்கும் 25% கழிவு வழங்கப்படுகிறது. அத்துடன் பாடப் புத்தகங்கள் உபகரணங்களுக்கும் 10% கழிவு வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறிய தருகின்றோம்.

**A.C.D**
**No. 212, 214, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(C 8802/15/17)

சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி



# சிறுவர் துன்புறுத்தல்

முன்பள்ளிகள் சிறு பிள்ளைகளின் மகிழ்ச்சிக் களங்களே! அவற்றில் ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனித் திறன்களை வெளிப்படுத்த வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும்.

செ.மகேஷ்

சிறுவர்களைத் தவறாகக் கையாள்கிறார்களே? சிறுவர்களைப் பெரியவர்களாகக் கருதி அவர்களின் தரத்துக்கும் தகுதிக்கும் மேலான செயல்களில் அவர்களை ஈடுபடுத்திப் பாராட்டுகிறார்களே! என்று எதுவும் புரியாதவர்போல வாய்விட்டுப் பிதற்றியவாறு செல்லத்தம்பியரைத் திரும்பிப் பார்த்தார் சிவபாதத்தார்.

சிறுவர் என்றதுமே முன்பள்ளிப் பிள்ளைகள் தொடக்கம் ஆரம்ப வகுப்புகளில் கற்கும் பிள்ளைகள் வரையான சுறுசுறுப்பான வளர்ச்சிப் பருவத்தினர் பலரின் முகங்கள் செல்லத்தம்பியரின் மனத்தில் படமிட்டன. அவர்களை வழிநடத்தும் பெற்றோர் ஆசிரியர் யாவருமே அந்த வயதுடைய சிறுவர்களின் வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டு வழிநடத்தவேண்டியோராவர். ஆனால் இன்று பல சந்தர்ப்பங்களில சிறுவர்களைத் தவறாக் கையாண்டு அவர்களைத் துர்நடத்தைக்கு இட்டுச் செல்பவர்களும் இவர்களேதாம் என்றுதான் பேசப்படுகின்றது.

சிறுவர்கள் தவறாகக் கையாளப்படுவதைச் சட்டம் பலவழிகளிலும் தடைசெய்தாலும் குறித்துரைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்குள் அடங்காத நிலையில் பல கல்வி, கலை கலாசார நிகழ்ச்சிகளில் பெரியோர் பிள்ளைகளை ஈடுபடுத்துகிறார்கள். அவற்றின் மூலம் தமக்கு ஆதரவான வயதுக்கு ஒவ்வாத கருத்துக்களையும் செயற்பாடுகளையும் முன்னெடுக்கிறார்கள்! அவைதாம் செல்லத்தம்பியரின் சிந்தனையைக் குழப்பின.

சிறுவர் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் வளரவும் வாழவும் வாய்ப்புக்கள் அளிக்க வேண்டும் எனக் கூறிக் கொண்டு பலரும் பல கட்டுப்பாடுகளை அவர்கள் மீது அழுத்துவதாகச் செல்லத்தம்பியரின் மனத்தில் எண்ணங்கள் விரிந்தன.


பெற்றோர் தமது பிள்ளைகள் படிப்பில் உயரவேண்டும் என்ற பேராசையால் அவர்களின் இயல்பான சுதந்திரமான விளையாட்டுக்கள் விவேகங்களைத் தடுத்து முன்பள்ளியிலிருந்தே பரீட்சைக்கான கற்றல் கற்பித்தலில் சிறுவர்களை ஈடுபடுத்துகின்றனர். பாடசாலைகளில் சேர்ப்பதற்கும் பரீட்சையை அளவு கோலாக்கிச் சிறுவர்களின் மனஉளைச்சலை அதிகரிக்கிறார்கள். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையும் ஒருசிலரின் தேவைக்காக ஒட்டு மொத்தச் சிறுவர் நலன்களையும் பாதிப்படையச் செய்கின்றனர்.

முன்பள்ளிகளில் இயல்பாகவே அவர்கள் ஆடவேண்டும் பாடவேண்டும் என்பவை வரவேற்கப்படும் நிலையில் உள்ளன. ஆனால் அழகிய இனிமையான கருத்தமைந்த சிறுவர் பாடல்களை விலக்கிப் பெரியவர்கள் தமது முதிர்ச்சிக்கேற்ற குத்துப் பாடல்களுக்கும் சினிமாப் பாடல்களுக்கும் ஏற்பக் குதிக்கச் சிறுவர்களை ஆட்டுகிறார்கள்.

இப்படித்தான் எழுதவேண்டும் என்றும் இப்படித்தான் பாடவேண்டும் என்றும், கூறி அவர்களின் சுயமான ஆக்கத்திறன்களைத் திசைதிருப்பி விடுகிறார்கள். பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்களுக்கேற்றதான முதிர்ச்சியையும் தாண்டி ஏதேதோ கற்பனையில் அவர்களின் ஆளுமையைக் குலைக்கும் செயல்களுக்கு முந்துகிறார்கள்.

முன்பள்ளிகள் சிறு பிள்ளைகளின் மகிழ்ச்சிக் களங்களே! அவற்றில் ஒவ்வொரு பிள்ளையும் தனித்தனித் திறன்களை வெளிப்படுத்த வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். இவற்றை எதிர்பார்த்தே தனது சிந்தனையை முன்னெடுத்த செல்லத்தம்பியர் தனக்கு அயலிலே நின்றிருந்த உயர் அதிகாரியைத் திரும்பிப் பார்த்தார்.

அவரின் பார்வை செல்லத்தம்பியரை ஏதேதோ செய்தது.



அந்த உயரதிகாரியும் பரீட்சையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விடையெழு தியே அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றவர். கேள்விகளுக்கு விடை தெரிந்தவர்களெல்லோருந்தான் படித்தவர்கள் என்று பாராட்டப்படுகிறார்களே தவிர அந்தப் பதவிக்குப் பொருத்தமான சிந்னைத் திறனும் செயற்றிறனும் உள்ள எவரையும் நியமிக்கி றார்கள் இல்லையே. அவ்வாறில்லாதுவிடினும் அந்தப் பதவிக்கு நியமனம் பெற்ற பின்பாவது தெரிந்து உணர்ந்து கற்றுப் பதவியை அலங்கரிப்பவர்களையும் காணமுடியவில்லையே! என்று எண்ணியவருக்கு வேதனையே மிச்சமாகியது. இதற்குள்ளே இந்த அரசியலாரின் உள் நுழைவுகளும் எம்மவர்களின் அனைத்துத் தொழிற்றுறைகளையும் களங்கப்படுத்தி விட்டதாகவே தோன்றியது.

சிறுவர்கள் பெரியவர்களாக வளரும் வளம்பெறும் வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்காமல் சிறுவர்களைப் பெரிவர்களாக வலிந்து ஆக்கும் ஒரு பெரும் துயரச் சுழல் சிறுவர்களின் சுகம் கெடுத்து நிற்பதாகவே செல்லத்தம்பியரின் சிந்தனை பெருகியது. அனைத்தும் பணத்துக்காகவே!

எமது சுழலில் வாள் வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதால் வாள் செய்து விற்றால் அதிக இலாபம் கிடைக்கும் என எண்ணி வாள் வியாபாரம் செய்வதுபோல இன்றைய சிறுவர் கல்வியும் பாழ்பட்டுப் போய்விடுமோ! என்ற கவலை செல்லத்தம்பியரை வருத்தியது. எதனை எவரிடம் சொல்லுவது என்பதைத் தெரியாத நிலையில் அவர் மௌனமாகவே இருந்தார்.

## கடலில்...

ஒருவர் அலையில் இழுபட்டுச் சென்று நேற்று உயிரிழந்துள்ளார்.

தாளையடி, வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த அருளானந்தம் ஜோன்சன் (வயது46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடல் நீரில் நின்றபோது அவர் அலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு மருதங்கேணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைய நாள்களில் சீரற்ற காலநிலை காரணமாக கடற்பிரதேசங்களில் அலைகளின் வேகம் அதிகமாக உள்ளது. அதனால் கடற்கரைக்குச் செல்வோர் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-70,105)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.12.2018 | வெற்றி வாரம் 2422 | வர்ணம் ஊதா
விருச்சிகம் | வெற்றி இலக்கங்கள் 11 36 57 59 | செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,452,332 /=
2018.12.25ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 898
சீட்டிழுப்பு திகதி 2018.12.22 சனிக்கிழமை
G 02 21 61 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 42,227,832/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
ஊதா நிற டிக்கட்டுகள் 2018.12.24ம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 384
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.12.23
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 107,016,148/-
ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
I 29 51 52 64
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 473
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.12.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,599,425/-
வெற்றி இலக்கங்கள் 19 25 40 72 ஆங்கில எழுத்து P
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் கடந்த 22.04.2013 தொடக்கம் கணித பாட ஆசிரியராகக் கடமையாற்றி வித்தியாலயத்தின் கணிதபாட வளர்ச்சியில் உறுதுணையாக இருந்து சமூகத்தின் அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமான நிலையில் 28 வருட ஆசிரிய சேவையிலிருந்து இன்று (24.12.2018) ஓய்வு பெறும்
திருமதி வசந்தா விக்கினேஸ்வரன்
அவர்களின் அர்ப்பணிப்பான சேவையினைப் பாராட்டுவதுடன் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வாழ மனதார வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை சமூகம்.
(N 8823) (4.17)

முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 03 . 07 . 1951
இறப்பு 03 . 01 . 2018
அனுசூயா நடேசலிங்கம்
(சட்டத்தரணி)
திதி : துதியை 24.12.2018
பந்தங்களும் பாசங்களும்
பிரித்தாலும் பிரியாதது.
ஓராண்டென்ன
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
அக்கா உங்கள் நினைவுகள் மறையாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
அன்பு சகோதரிகள்
செல்வி, அம்பி, ராஜி, மலர்
"சுபசதனம்"
சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.
(CS 22044/15/17)

# வினைத்திறனான வகுப்பறை முகாமைத்துவம்

இ.சர்வேஸ்வரா

வகுப்பறையில் கற்றலுக்கான உகந்த சூழலை உருவாக்குவதும், அதைப் பேணுவதும் ஆசிரியர்களின் மிகப் பெரும் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றுவதற்கு ஓர் ஆசிரியர் வகுப்பறையில் பல நடிபங்குகளை, அதாவது வகிபாகங்களைக் கொண்டவராக உள்ளார். அவ்வாறான வகிபாகங்களில் அவர் வகுப்பறையில் ஒரு முகாமையாளராகச் செயற்படுவது முதன்மை பெறுகின்றது.

வகுப்பறையொன்றை முகாமை செய்வது என்பது இலகுவான காரியமல்ல. வகுப்பறைச் சூழலில் ஆசிரியரை முகாமையாளராகவும், மாணவர்களை முகாமைத்துவத்தின் செயற்பாடுகளால் பயன்களை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களாகவும் கருத முடியும். எனவே ஓர் ஆசிரியர், முகாமையாளர் ஒருவர் கொண்டிருக்கவேண்டிய அத்தனை அம்சங்களையும் கொண்டிருக்கும் போதே வகுப்பறையை வினைத்திறனாக முகாமை செய்வது என்பது சாத்தியமாகின்றது.

**ஆசிரியரின் முகாமைத்துவ வகிபாகம்!**

முகாமைத்துவச் சிந்தனைகளின் அடிப்படையில் நிறுவனமொன்றின் இலக்கை வெற்றிகரமாக அடையும் பொருட்டு முகாமைத்துவம் சில முக்கியமான கருமங்களை ஆற்றவேண்டியுள்ளது. 'ஹென்றி பயோல்' (Henry Fayol) என்பவரின் கருத்துப்படி, 'கணித்தல், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், ஆணையிடுதல், இயைபாக்கல், கட்டுப்படுத்தல்' என்பன முக்கியமான முகாமைத்துவக் கடமைகளாக அடையாளம் காணப்படுகின்றன. ஓர் ஆசிரியர் வகுப்பறையில் இந்த முகாமைத்துவக் கடமைகளை ஆற்ற வேண்டிய பல சந்தர்ப்பங்கள் தினமும் ஏற்படுகின்றன.

**ஆசிரியர் முகாமையாளராகச் செயற்படல்!**

ஒரு முகாமையாளருக்குரிய கடமைகளை, அதாவது முகாமைத்துவப் படிநிலைகளை திறம்பட ஆற்றுவதன் மூலமாக ஓர் ஆசிரியர் தன்னை வகுப்பறையின் முகாமையாளராக நிலைநிறுத்த வேண்டும். அந்த வகையில் பின்வரும் கடமைகளை வகுப்பறையில் தினம் தினம் ஆற்றுவதன் மூலமாக ஓர் ஆசிரியர் முகாமையாளராகச் செயற்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**•கணித்தல்**

மாணவர்களின் ஆற்றலையும் இயல்தகமையையும் கணித்தல் என்பது ஓர் ஆசிரியருக்கு மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் ஒவ்வொரு மாணவர்களும் வெவ்வேறான அறிவு மட்டத்தையும் (Knowledge), திறன் எல்லைகளையும் (Skills), இயல்தகமைகளையும் (Capability), நுண்மதிகளையும் (Intelligence) மற்றும் மனப்பாங்கையும் (Attitude) கொண்டவர்களாகவிருப்பர். இதை ஒரு ஆசிரியர் கணிக்கும் பட்சத்தில் அந்த மாணவர்களை முன்னேற்றுவது என்பதும், கையாள்வது என்பதும் இலகுவானதாக அமையும்.

குறிப்பாக ஒரு வகுப்பறையில் மெல்லக் கற்கும் மாணவர்கள், மீதிறன் உள்ள மாணவர்கள் என இரு வகையினர் எப்போதும் இருப்பர். இந்த இரு வகுதியினரையும் ஒன்றாக வைத்து கையாளும் சவாலான சந்தர்ப்பத்தை வெற்றிகரமாக கையாள்வதற்கு கணித்தல் எனும் முகாமைத்துவ ஆற்றல் ஆசிரியருக்கு அவசியமாகின்றது. அது போன்றே இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு விதமான ஆற்றல்கள் காணப்படும். கல்வியின் நோக்கங்களில் ஒன்றாகவிருக்கும் ஆளுமை விருத்தியை அடைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் அவசியமாகின்றன.

மாணவர்களின் ஆற்றலை, அதாவது விளையாட்டுத் திறன், நடித்தல் திறன், பாடும் திறன், பேசும் திறன், விவாதிக்கும் திறன், ஓவியம் வரையும் திறன், கட்டுரை எழுதும் திறன் என பலவகைப்பட்ட திறன்களைக் கொண்ட மாணவர்கள் வகுப்பறையில் இருப்பர். அவர்களைச் சரியாக கணித்து அவர்களுக்குப் பொருத்தமான துறையில் ஆற்றுப்படுத்துவதும் வழிப்படுத்துவதும் ஓர் ஆசிரியரின் தலையாய கடமை. இதை மாணவர்களைக் கணித்தல் எனும் முகாமைத்துவக் கடமையினூடாக ஓர் ஆசிரியர் ஆற்றித் தன்னை வகுப்பறையின் முகாமையாளராக நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும்.

**•திட்டமிடல்**

எந்தச் செயலைச் செய்தாலும் செய்யத் தொடங்குவதற்கு முன்பாகவே அதை எப்படிச் செய்வது, அதற்கான வளங்களை எங்கிருந்து பெறுவது, பணிகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பன பற்றியெல்லாம் முன்பே திட்டமிடுதல் அவசியம். ஆசிரியத்துவத்தைப் பொறுத்தவரையில் திட்டமிடல் மிக அவசியமானதாகும். "வகுப்பறை முகாமைத்துவத்தில் வகுப்பறைச் சூழலை கற்றலுக்கேற்ற விதத்தில் வடிவமைத்தல் (Conducive Learning Environment), கலைத்திட்ட மற்றும் பாடத் திட்டங்களின் நோக்கங்களை எய்தத்தக்க வகையில் கற்பித்தலை மேற்கொள்வதற்கான உத்திகளை வகுத்தல், கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான பொருத்தமான கற்றல் உபகரணங்களை அடையாளம் காணலும் அவற்றை பயன்படுத்தலும் (Identify the appropriate Teaching Learning Aids), பாடசாலையின் இதர செயற்பாடுகளுடன் முரண்பாடாது குறித்த காலப்பகுதிக்குள் பாடவிதானத்தை நிறைவு செய்தல், மாணவர்களுக்கு கற்பிக்கும் தனது முதன்மை நோக்கத்தில் சிதைவு ஏற்படாமல் தனது வாண்மை விருத்திக்கானதும் சுய முன்னேற்றத்துக்குமான திட்டங்களை வகுத்தல்" எனப் பல விடயங்களில் ஓர் ஆசிரியர் முகாமையாளருக்கே உரித்தான திட்டமிடலை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் ஓர் ஆசிரியர் முகாமையாளராக நடந்து கொள்வது மிக அவசியமானதாகும்.

**•ஒழுங்கமைத்தல்**

திட்டமிட்டுள்ள பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் (நிதி, மனித வளம், பொருள்கள், இயந்திரங்கள்) திரட்டுதல் என்பது ஒழுங்கமைத்தல் பணிக்கு உட்பட்டதாக அமையும். பல்வேறு சந்தர்ப்பங்களில் வகுப்பறையில் ஓர் ஆசிரியர் முகாமையாளருக்குரிய இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டியவராகின்றார். உதாரணமாக, "தனது கற்பித்தலுக்கு வேண்டிய பொருள்கள், உபகரணங்கள் என்பவற்றை தர உள்ளீட்டுக்காக (Quality Inputs) ஒதுக்கப்படும் நிதி மூலம் பெற்றுக்கொள்ளும் போதும், குழு நிலை கற்றல் செயற்பாடுகளுக்காக மாணவர்களை குழுக்களாக வகைப்படுத்தும் போதும், கணணி மற்றும் காணொளிச் சாதனங்களை கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைக்கும் போதும், மாணவர்களை குழுக்களுக்கு தலைமை தாங்குவாதற்கு தெரிவு செய்தல் (வகுப்புத் தலைவர்)" போன்ற செயற்பாடுகளை ஆற்றும் போதும் ஓர் ஆசிரியர் முகாமையாளருக்குரிய ஒழுங்கமைத்தல் வகிபாகத்தை திறம்பட ஆற்ற வேண்டும்.

**•ஆணையிடுதல்**

ஓர் ஆசிரியர் வகுப்பறை முகாமை யாளராக வெற்றிகரமாகச் செயற்படுவதில் இந்த முகாமைத்துவக் கடமை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. மாணவர்களை வகுப்பறையில் ஒழுக்கத்துடனும் ஒழுங்குடனும் வைத்திருக்க மாணவர்கள் ஆசிரியரின் சொற்களுக்குக் கட்டுப்படல் என்பது அவசியமானது. குறித்த வகுப்பறையின் தலைவராக அல்லது முகாமையாளராக இருப்பவர் ஆசிரியரே. ஒரு கப்பலின் மாலுமி போன்று குறித்த இலக்கு நோக்கி அந்தக் கப்பலைச் செலுத்தி அதைக் கரை சேர்க்க வேண்டிய மிகக் கனதியான கடமை ஆசிரியருக்குண்டு. இந்தக் கடமையை சிறப்புற ஆற்றும் போது அவர் ஒரு முகாமையாளருக்குரிய ஆணையிடுதல் வகிபாகத்தை திறம்படக் கையாள வேண்டும். ஆசிரியரின் ஆணைக்கு வகுப்பறையின் உயிர்ச் சூழலும் பௌதிகச் சூழலும் கட்டுப்பட மறுக்கும் போது, என்னதான் நேர்த்தியாகப் பணிகளைத் திட்டமிட்டாலும் ஓர் ஆசிரியர் தனது ஆசிரியத்துவத்தில் தோற்கவேண்டியேற்படும். எனவே வெற்றிகரமான ஆசிரியர்கள் வகுப்பறையின் முகாமையாளராக இருந்து ஆணையிட்டு வகுப்பறையை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து ஒரு சிறந்த முகாமையாளராக செயற்பட வேண்டும்.

**•இயைபாக்கல்**

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்! (திருக்குறள் –517)*

எந்த எந்தப் பணிகளை யார் யாரிடம் ஒப்படைக்கலாம் என்பது பற்றி முடிவு செய்தல். இதனால் ஒரே பணியை இருவர் செய்வது அல்லது ஒரு பணியை யாருமே செய்யாமல் விட்டுவிடுவது போன்றவை தவிர்க்கப்படுகின்றன. வகுப்பறையில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் அதிக நேரங்களில் ஏற்படுவதுண்டு. அதைத் தவிர்ப்பதற்கு ஆசிரியர் சிறந்த முகாமையாளராக இருந்து வேலைகளை மாணவர்களிடம் பகிர்ந்தளித்தல் (sharing the Task), வேலைகள் நடைபெறுவதை கண்காணித்து முகாமை செய்து மதிப்பீடு செய்தல் (Monitoring and Evaluation), தேவைப்படும் சந்தர்ப்பங்களில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் (Guidance and Counselling) எனும் முகாமையாளர் ஒருவருக்குரிய கடமைகளை ஆற்றுகின்றார். குறிப்பாக இந்தச் செயற்பாடுகளை மாணவர்களின் வெளிக்களச் செயற்பாடுகள், கல்விச் சுற்றுலாக்கள், கண்காட்சி, மாணவர் சந்தை, மாணவர் பாராளுமன்ற நடவடிக்கைகள் என்பவற்றின் போது ஓர் ஆசிரியர் ஆற்ற வேண்டியிருக்கும்.

**•கட்டுப்படுத்தல்**

திட்டமிட்டப் பணிகளை ஒரு குறிப்பிட்ட பாதையில் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்துகையில் பாதையில் இருந்து யாரேனும் அல்லது ஒரு சில பணிகளோ வழுவுவதாகத் தோன்றினால் அவற்றை மீண்டும் சரியான பாதையில் கொண்டு செலுத்துவது கட்டுப்படுத்துதல் எனப்படும். இது முகா மைத்துவச் செயற்பாட்டில் முக்கியமானதொரு கூறாகும். இதை ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் இணைந்து பயணித்து அவர்கள் கற்றல் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் தவிர்ந்த பொருத்தமற்ற செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் போது அவர்களை கட்டுப்படுத்தி நெறிப்படுத்தி சரியான பாதையில் அவர்கள் பயணிக்க உதவவேண்டும்.

**•ஊக்கப்படுத்தல்**

இவை தவிர ஊக்கப்படுத்தல் (motivation) எனும் ஓர் முகாமையாளர் கொண்டிருக்க வேண்டிய உயர்ந்த செயற்பாட்டை ஆசிரியர் வகுப்பறையில் எப்போதும் காண்பிக்க வேண்டும். மாணவர்கள் பிரதிபலன்களையும் வெகுமதிகளையும் எதிர்பார்க்கும் பராயத்தினர் என்பது கல்வி உளவியலாளர்களின் கருத்தாகும். அதன் பிரகாரம் மாணவர்கள் தமது செயற்பாடுகளில் பாராட்டத்தக்க அடைவுகளை அடையும் போது அவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக சிறு சிறு பரிசுகள் மற்றும் பாராட்டுக்களை வழங்கவேண்டியது ஓர் ஆசிரியரின் கடமையாகும். அதைத் திறம்பட நிறைவேற்றும் ஆசிரியர் குறித்த வகுப்பறையின் சிறந்த முகாமையாளராகத் தன்னை நிலை நிறுத்துகின்றார்.

**•வினைத்திறனான தீர்மானம் எடுத்தல்**

வினைத்திறனான தீர்மானங்களை (Effective Decision Making) எடுப்பது முகாமையாளர் ஒருவருக்குரிய முக்கிய கடமையாகும். பல்வேறு சந்தர்ப்பங்களில் ஓர் ஆசிரியர் தான் கற்பிக்கும் வகுப்பறை சார்பிலும், மாணவர்களை நெறிப்படுத்துவது தொடர்பிலும் முடிவெடுக்கும் அதிகாரத்தை கொண்டவராகவுள்ளார். வெறுமனே அதிகாரத்தை வைத்துக்கொண்டு முடிவெடுக்காது எடுக்கும் முடிவு வினைத்திறனாக இருக்கத் தக்க வகையில் சிறந்த முகாமையாளருக்குரிய இயல்புடன் முடிவெடுக்க வேண்டும்.

**•முரண்பாடுகளை முகாமை செய்தல்**

ஒரு முகாமையாளர் முரண்பாடுகளை முகாமை செய்யவேண்டியிருப்பது என்பது தவிர்க்க முடியாத கடமை என்பதுடன், அடிக்கடி சந்திக்க வேண்டிய சவாலாகவும் இருக்கும். நிறுவன இலக்கு ஒன்றாக இருந்த போதும் தனியன்களின் இலக்குகளில் காணப்படும் வேறுபாட்டுத் தன்மையால் ஒரு நிறுவனத்தில் முரண்பாடுகள் ஏற்பட வாய்ப்புண்டு. வகுப்பறையில் இத்தகைய முரண்பாடுகள் மாணவர்களிடையே அடிக்கடி ஏற்படும். அதைத் தொழில்வாண்மைத்துவத்துடன் (Professional way) அணுகித் தீர்த்து வைப்பது ஓர் ஆசிரியரின் கடமையாகும். குறிப்பாக பதின்ம வயது மாணவர்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்தல், முரண்பாட்டின் வழி கதாநாயகத்தனத்தை வெளிப்படுத்தல் என்பது இயல்பாக காணப்படும் ஓர் உளவியல் பண்பாகும். அதை ஆசிரியர் உணர்ந்து முரண்பாடுகளை உரிய முறையில் முகாமை செய்யவேண்டும்.

**•பொறுப்புதாரராக இருத்தல்**

பொறுப்புக்கூறல் (Accountability) என்பது ஒரு முகாமையாளருக்குரிய அதிமுக்கியத்துவம் வாய்ந்த கடமையாகும். ஆசிரியர் எப்போதும் தான் சார்ந்த வகுப்பறையின் அனைத்து விடயங்களிலும் (பரீட்சை பெறுபேறுகள், மாணவர் வரவு, ஒழுக்கம், சொத்துக்களை பாதுகாத்தல் போன்றன) பொறுப்புக்கூற வேண்டியவராகவுள்ளார். பொறுப்புக்கூறலுக்குத் தயார் நிலையில் உள்ள ஆசிரியர் தனது கடமையின் கனதியை உணர்ந்தவராகவும் இருப்பார். இதுவே ஓர் ஆசிரியரிடம் சமூகம் எதிர்பார்க்கும் முக்கியமான தேவையும் ஆகும்.

**முடிவு**

வகுப்பறை எனும் முகாமைத்துவ அலகில் ஓர் ஆசிரியர் ஒரு முகாமையாளருக்குரிய அத்தனை வகிபாகங்களையும் கொண்டவராக்த் திகழ்கின்றார். அவர் தனது முகாமைத்துவ வகிபாகத்தின் கனதித் தன்மையை உணர்ந்து கோட்பாட்டு ரீதியான சிந்தனைகளை செயற்பாட்டு ரீதியில் நடைமுறைப்படுத்தும் போது, ஒரு நல்லாசிரியராகத் தானும் வெற்றி பெற்று, தனது மாணவர்களையும் கல்வி அடைவுமட்டங்களுக்கு அப்பாலும் நிறைவான வாழ்க்கையிலும் முழுமையாக வெற்றிபெற வைக்கின்றார். இதை ஒவ்வொரு ஆசிரியரும் உணர்ந்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.


***கட்டுரையாளர்:***
***விரிவுரையாளர்,***
***கல்வியியற் துறை,***
***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.***





இது புதுசு

பெண்களுக்கான கைப்பைகள் புதிய வடிவில் அறிமுகமாகியுள்ளன. இவை 2 ஆயிரம் 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.



# இதயத்தைப் பலப்படுத்தும் சீத்தாப்பழம்

இதயத்தைப் பலப்படுத்துவதற்கு முக்கிய பங்கு வகிக்கும் பழமாக சீத்தாப்பழம் உள்ளதாக அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீத்தாப்பழச்சாறுடன் எலுமிச்சம்புழச்சாறு, தேன் கலந்து தயாரித்தும் சாப்பிடலாம். பழத்தின் சதைப் பாகத்தைத் தனியாக எடுத்து சாப்பிடுவதுதான் அதிகமாக வழக்கத்தில் உள்ளது.

பலவகை இனிப்புகளும் செய்து உண்ணலாம். பொதுப் பயன்கள் சீத்தாப்பழச்சாறில் பல வகை பண்டங்கள் பானங்கள் தயாரிக்கப்படுகிறது.

சீத்தாப் பழத்திலுள்ள பல சத்துக்கள் இதயத்தைப் பலப்படுத்தி, சீராக இயங்கச் செய்யும். இதயம் சம்பந்தமான நோய்கள் வராது

ஆரம்ப நிலை காசநோயைக் குணப்படுத்தும் சக்தி சீத்தாப்பழத்திற்கு உண்டு. மத்திமநிலைகாசநோய் உள்ளவர்கள், இப்பழத்தைத்தின்று வர, நோய் கட்டுக்குள் இருக்கச் செய்யும்.

சீத்தாப்பழச்சாறுகுடித்தால், கோடையில்ஏற்படும்கொடும்தாகம்தணியும். உடல் குளிர்ச்சி பெறும். கோடை உபாதைகள் எட்டிப் பார்க்காது. மலச்சிக்கல் உள்ளவர்கள் சீத்தாப்பழத்தைச்சாப்பிட்டால்மலச்சிக்கல் மாய்ந்து விடும். தொடர் வாந்தி, குமட்டல் ஏற்பட்டால், ஒரு சீத்தாப் பழத்தை மென்று தின்றால், உடனே வாந்தி, குமட்டல் நிற்கும்.



# பேரீச்சம்பழத்தின் மருத்துவப் பயன்கள்

மூன்று பேரீச்சம் பழத்தை முதல் நாள் இரவிலேயே ஒரு டம்ளர் நீரில் ஊறவைத்து, காலையில் அதை குடித்துவந்தால், அது செரிமான மண்டலம் மற்றும் குடல் இயக்கத்தை மேம்படுத்தி, வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல் போன்ற பிரச்சனையை தடுக்கிறது.

பேரீச்சை பழத்தில் உள்ள இரும்புச்சத்து, குருதி உற்பத்தியை அதிகரித்து, உடலுக்குத் தேவையான ஆற்றலை வழங்கி, ரத்தச்சோகை போன்ற நோய்களை குணப்படுத்த உதவுகிறது.

பேரீச்சம் பழத்தில் உள்ள பொட்டாசியம், இதயத்தின் ஆரோக்கியத்தை பாதுகாத்து, கெட்ட கொழுப்பைக் குறைத்து, மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் வாய்ப்பைக் குறைக்கிறது.

பேரீச்சையில் உள்ள இனிப்புக் சுவையில் சுக்ரோஸ், ஃப்ரெக்டோஸ் மற்றும் குளுக்கோஸ் போன்றவை அதிகமான நிறைந்துள்ளது. எனவே இது மந்தநிலை போன்ற சோர்வுத்தன்மை பிரச்சனையை தடுக்கிறது.

எலும்பின்வளர்ச்சிக்கு உதவும்கல்சியம்அதிகமாக உள்ளதால், இது ஆஸ்டியோபோரோசிஸ், எலும்பு தேய்மானம் போன்ற எலும்பு நோயில் இருந்து பாதுகாக்க உதவுகிறது.

பேரீச்சம்பழத்தில் உள்ள விட்டமின் மற்றும் பொட்டாசியம்சத்துகள், மூளை மற்றும் நரம்பு மண்டலத்தின் செயல்பாட்டை அதிகரித்து, நினைவாற்றல் இழப்பைத் தடுக்கிறது.

# சத்தான கொள்ளுத் தோசை

**தேவையான பொருள்கள் :**

இட்லி அரிசி : ஒரு கப்,
பச்சரிசி : அரை கப்,
கொள்ளு: ஒன்றரை கப்,
கல் உப்பு, நல்லெண்ணெய்:
தேவையான அளவு

**செய்முறை:**

ஒருபாத்திரத்தில்இட்லிஅரிசி, பச்சரிசி ம்ற்றும் கொள்ளுப்பருப்பு சேர்த்து, தண்ணீரில் நன்கு கழுவிக்கொள்ளவும். தேவையான அளவு தண்ணீர் ஊற்றி 5 மணி நேரம் ஊறவைக்கவும். பின்னர் மீண்டும் ஒருமுறை தண்ணீரில் கழுவிக்கொள்ளவும்.

ஊறவைத்தவற்றை கிரைண்டரில் சேர்த்து, சிறிது தண்ணீர் தெளித்துபொங்கப்பொங்கநன்கு அரைத்துக்கொள்ளவும் (சுமார் 30 நிமிடங்கள்). அரைத்த மாவைப் பாத்திரத்துக்கு மாற்றிக் கொள்ளவும். பிறகு தேவையான அளவுகல் உப்புசேர்த்துகலந்து 8 மணிநேரம் புளிக்கவிடவும்.

தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் தோசை மாவைஊற்றிதோசையைச்சுற்றி 2 டீஸ்பூன் எண்ணெய்விட்டு நன்கு முறுகலானதும் திருப்பிப் போட்டுவேகவைத்து இறக்கவும்.

**சத்து நிறைந்த கொள்ளு தோசை தயார்!**



## கண்களுக்கு குளிர்ச்சி தரும்
# நெல்லிக்காய்



நெல்லிக்காய் புளிப்பு, இனிப்பு மற்றும் துவர்ப்புச் சுவைகளைக் கொண்டது. குளிர்ச்சித் தன்மையானது.

கண்களுக்குக் குளிர்ச்சி தரும். செரிமானத்தைக் தூண்டும். சிறுநீர் பெருக்கும். குடல்வாயுவை அகற்றும். பேதியைத்தூண்டும். உடல்ச்சூடு, எலும்புருக்கி நோய், பெரும்பாடு, வாந்தி, போன்றவற்றைக் குணமாக்கும். நெல்லி வேர், நரம்புகளைச் சுருக்கும். வாந்தி, அருசி, மலச்சிக்கல் ஆகியவற்றைக் குணமாக்கும். நெல்லிக்காய் வற்றல், குளிர்ச்சிதரும். இருமல், சளிபோன்றவற்றைக்குறைக்கும். உடலைப் பலப்படுத்தும்.

நெல்லிக்காய்த் தைலம் நாட்டு மருந்துக் கடைகளில் பரவலாக விற்பனை செய்யப்படுகின்றது. இதனைத் தலையில் தேய்த்துத் தலை முழுகிவர கண்கள் பிரகாசமாக இருக்கும். பொடுகு கட்டுப்படுவதுடன், முடி உதிர்தலும் தடுக்கப்படும்.

நெல்லிக்காய் இலை, காய், வற்றல் ஆகியவை மருத்துவப் பயன் கொண்டவை. வைட்டமின் 'சி' சத்து நிறைந்ததாக உள்ள நெல்லிக்கனிகள் பழ வகைகளுள் மிகவும் முக்கியமானவை. நெல்லிக்காய் வற்றல், நெல்லிக்காய் ஊறுகாய் போன்றவை ஆரோக்கியம் தரும் உணவுப் பொருள்களாகும்.

# கறிவேப்பிலையின் நன்மைகள்

கறிவேப்பிலையை நாம் உணவில் அதிகமாக சேர்த்துக் கொண்டோமேயானால், பித்தக் கோளாறு, வயிற்றுவலி, ஜீரணக்கோளாறு போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படுவதோடு, ரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது.

இளநரையைப் போக்குவதற்கு கறிவேப்பிலையைப் பச்சையாக சாப்பிட வேண்டும்.

பார்வைக்கோளாறுகள் நீங்கி, கண்கள் பிரகாசமாகத் தெரியும். தலைமுடியைக் கருமையாக்கும். வளர்ச்சியைத் தூண்டும். தொடர்ந்து ஒரு மாதம் வரை காலையும் மாலையும் கறிவேப்பிலையைச் சாப்பிட்ட வர, நீரிழிவு நோய் கட்டுப்படுத்தப்படும். வெண்குஷ்டம், மூலம், தோல் வியாதிகளை போக்கக்கூடிய சக்தி கறிவேப்பிலைக்கு உண்டு.






# கைகளின் சுத்தத்தைப் பேணுவோம்!

டெங்குக்காய்ச்சல்பாதிப்பில்இருந்துதற்காத்துக்கொள்ள அன்றாட பழக்க வழக்கங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். உடல் உறுப்புகளில்கிருமிகள், அழுக்குகள் படியாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

முகம், கண், மூக்கு, வாய்போன்றபகுதிகளில்படிந்திருக்கும் வைரஸ் கிருமிகள் சுவாச அமைப்புக்குள் ஊடுருவி செல்லவாய்ப்பிருக்கிறது.

கைகளை வாய்க்குள் வைக்கும்போது அதன் மூலம் எளிதாக வைரஸ் கிருமிகள் உடலுக்குள் பரவிவிடும். அதனால்கைகளைச்சுத்தமாகப்பராமரிக்கவேண்டும். சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் கைகளை நன்றாகக் கழுவ வேண்டும். விரல் நகங்களையும் சுத்தம் செய்ய வேண்டும். வெதுவெதுப்பான நீரில் கைகளைக் கழுவுவது நல்லது. கைகளைக் சவர்க்காரமிட்டு கழுவுதல் அவசியம். அவை வைரஸ் கிருமிகளைச் செயலிழக்க செய்துவிடும்.



# பளுதூக்கல் போட்டியில் நிதுர்சனாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 24
இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட இளநிலைப்பிரிவினருக்கான பளுதூக்கல் போட்டியில் வயாவிளான் மத்திய கல்லூரி மாணவி நிதுர்சனா தங்கப்பதக்கம் வென்றார். கொழும்பு டொறிங்டன் விளை யாட்டரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. பெண்களுக்கான 53 கிலோ எடைப்பிரிவில் 120 கிலோ பளுவைத்தூக்கி தங்கப்பதக்கம் வென்றார் நிதுர்சனா. (ம-23)



# பூநகரி லீக்கின் கால்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், டிசெ. 24
பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

செந்தாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல்; கணக்கில்; வெற்றிபெற்றது.

இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணிக்கும் மெசியா விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மெசியா விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் அன்பு ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)



# கொலின்ஸ் ரைகர்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 24
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணி வெற்றிபெற்றது. கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் இடம்பெற்றது. கொலின்ஸ் ரைகர்ஸ் அணியை எதிர்த்து கொலின்ஸ் எலைட் அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# புதிய போட்டி

2030ஆம் ஆண்டு கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரை நடத்தும் உரிமத்தைக் கோருவதற்கு சேர்பியா, கிரீஸ், பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகள் கூட்டாக முடிவு செய்துள்ளன. உலகக்கிண்ணத்தை நடத்தும் உரிமம் தரப்படாத பட்சத்தில் 2028ஆம் ஆண்டு ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரை நடத்தும் உரிமத்தைக் கோரவும் அவை முடிவு செய்துள்ளன. (ம)


# பிளாஸ் றைடஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ. 24
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பிளாஸ் றைடஸ் அணி வெற்றி பெற்றது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பிளாஸ் றைடஸ் அணியை எதிர்த்து கொலின் ஜக்குவார் அணி மோதியது. ஆட்டநேர முடிவில் 8:2 என்ற கோல் கணக்கில் பிளாஸ் றைடஸ் அணி வெற்றி பெற்றது. (ம-23)

# ஆஸ்திரேலியத் தொடரின் பின்னர் நியூசி. செல்கிறது இந்திய அணி!


ஆஸ்திரேலியத் தொடரை முடித்துக் கொண்டு இந்திய அணி அடுத்ததாக நியூசிலாந்துக்குச் செல்லவுள்ளது. இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான அட்டவணை நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. நியூசிலாந்து இந்திய அணிகளுக்கு இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரும் நடைபெறவுள்ளன. முதலில் ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. ஐந்து ஆட்டங்களும் முறையே ஜனவரி 23, ஜனவரி 26, ஜனவரி 28, ஜனவரி 31, பெப்ரவரி 3 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.
ரி20 தொடரின் மூன்று ஆட்டங்களும் முறையே பெப்ரவரி 6, பெப்ரவரி 8, பெப்ரவரி 10 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. (ம)






இலங்கை, இந்தியா, நேபாளம், தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் செவிப்புலன் அற்ற அணிகளுக்கு இடையில் இந்தியத் தலைநகர் டெல்லியில் அண்மையில் நடைபெற்ற உலகக்கிண்ண ரி-20 தொடரில் இலங்கை அணி சம்பியனானது. இந்த அணியில் கைதடி நவீல்ட் பாடசாலையின் பழைய மாணவனும் யாழ்ப்பாண மாவட்ட செவிப்புலன் அற்றோர் சங்க உறுப்பினருமான அ.காலேப் இடம்பெற்றிருந்தார். அவருக்கு யாழ். செவிப்புலன், வலுவற்றோர் மறுவாழ்வு நிறுவனம் அண்மையில் மதிப்பளித்தது. (ம-23)

# கழகங்களுக்கு இடையிலான தொடர் உலகச் சம்பியனானது ரியல் மட்ரிட்!






கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்றது ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் அணி.

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரைப் போன்று கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரும் மிகவும் பிரபலமானது. இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் அணியும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அல் எய்ன் அணியும் மோதின.

ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் லூகா மோட்ரிச். ரியல் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி. 60ஆவது நிமிடத்தில் அல் எய்னின் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் மார்கொஸ். இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் அனல் பறந்தது. 78ஆவது நிமிடத்தில் ராமோஸ் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். சாந்தோனி 86ஆவது நிமிடத்திலும், யாகியா 90ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல்மட்ரிட் அணி.

**ஹற்றிக் கிண்ணம்**

கழகங்களின் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தை இத்துடன் ரியல்மட்ரிட் அணி தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகக் கைப்பற்றுகின்றது. 2016, 2017ஆம் ஆண்டுகளிலும் அந்த அணி கிண்ணம் வென்றிருந்தது. அத்துடன் ஒட்டுமொத்தமாக 7ஆவது தடவையாக மட்ரிட் இந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. 1960, 1998, 2002, 2014ஆம் ஆண்டுகளிலும் கழகங்களின் உலகக்கிண்ணத்தில் சம்பியன் ரியல் மட்ரிட்டே.

(ம)



இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்கான பயிற்சி முகாமை நேற்று ஆரம்பித்தது இந்திய அணி. (ம)

# இந்திய அணியின் ஆற்றல் கோக்லியில் தங்கியுள்ளது!

## பிராட் ஹாக் புகழாரம்



இந்திய அணியின் ஆற்றல் அந்த அணியின் தலைவர் கோக்லியில் தங்கியுள்ளது. ஆதலால் அவர் வெளிப்படுத்தும் ஆக்ரோசத்தில் தவறுகள் உள்ளன என்று எனக்குத் தெரியவில்லை என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் பிராட் ஹாக்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லி ஆஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் ஆடுகளத்தில் வெளிப்படுத்தும் ஆக்ரோச செயல்கள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில் அவருக்கு ஆதரவாக பிராட் ஹாக் கருத்துத் தெரிவித்துள்ளார். இது குறித்து பிராட் ஹாக், பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள செவ்வியில் கூறியிருப்பதாவது:

தற்போதுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் ஆற்றலே விராட் கோக்லிதான். அவர்தான் இந்திய வீரர்களின் தெளிவான தலைவர். அவர்கள் அப்படித்தான் விராட் கோக்லிக்கு ஊட்டம் அளிக்கிறார்கள். களத்தில் விராட் கோக்லியைப் பார்த்தீர்கள் என்றால், அவரது உடல் வலிமை வித்தியாசமாக இருக்கும். தனது அணியிடமும் அவர் அதையே எதிர்பார்க்கிறார். தனது அணிக்கு முன்னுதாரணமாக இருந்து விராட் கோக்லி வழிநடத்துகிறார். தனது அணியின் வீரர்களும் அதைப் பின்தொடர வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

துடுப்பாட்ட வீரராக கோக்லி ஏனைய வீரர்களிடம் இருந்து வேறுபட்ட மட்டத்தில் உள்ளார். தற்போதைய தொடரில் பேர்த் டெஸ்ட் ஆட்டத்தில் உஸ்மான் கவாஜா சிறப்பான வகையில் இன்னிங்ஸைக் கட்டமைத்ததன் மூலம் விராட் கோக்லிக்கு சற்று நெருக்கமாக வந்தார். ஆனால் விராட் கோலியின் மட்டத்தில் வேறு எவரும் இல்லை. அனைவரை விடவும் அவர் வித்தியாசமான வீரர். பவுண்டரிகள் அடிப்பதற்கான பகுதிகளை கண்டறிந்து கொள்கிறார். ஆட்டத்தின் போக்கை மாற்றக் கூடியவராகவும் உள்ளார். ஆஸ்திரேலிய அணிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா விளையாடும். டெஸ்ட் தொடர் நெருக்கமான வகையில் அமையவே நான் விரும்புகிறேன். முதல் இரு ஆட்டங்களும் அந்த வகையிலேயே முடிவடைந்தன. இதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். சொந்த மண்ணில் ஆஸ்திரேலிய அணி சோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் என்றே விரும்புகிறேன். இதற்கு முன்னர் வந்த இந்திய அணிகளாலும் கூட இருமுறை ஆஸ்திரேலிய அணி சோதிக்கப்பட்டுள்ளது.

இரு டெஸ்ட் போட்டிகளிலும் தங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் செயல்பட்ட விதத்தால் இந்திய அணி பெருமைகொள்ள வேண்டும். முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய வேகப் பந்து வீச்சாளர்கள் ஆக்ரோஷமாகச் செயல்பட்டு வெற்றியை தேடிக்கொடுத்தார்கள். இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் வெற்றியானது அவர்களுக்கு ஆற்றலையும் நம்பிக்கையும் அளித்தது.

ஆஸ்திரேலிய அணி பலவீனமாக உள்ளதால் இம்முறை தொடரை வெல்ல இந்தியாவுக்கு பெரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் இது கூடுதல் அழுத்தத்தை சேர்த்துள்ளது. அது வீரர்களின் மனதில் இருந்து கொண்டு அழுத்துகிறது - என்றார். (ம)





*கட்டாரில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தொடருக்காக 11 கால்பந்தாட்ட அரங்குகளை கட்டார் அமைத்து வருகிறது. மூன்றின் ஒளிப்படங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்த நிலையில் இன்னும் மூன்று அரங்குகளின் ஒளிப்படங்கள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. தலா 60 ஆயிரம் ரசிகர்கள் அமரும் வகையில் இந்த அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டாரில் அதிக வெப்பம் நிலவுவதால் முழுவதும் குளிரூட்டப்பட்ட நிலையில் இந்த மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.* (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
அதிபர் சேவை
தரம் - 3
கிரகித்தல்
பௌநந்தி
செவ்வாய், வியாழன்
பி.ப. 5.00 → 7.30
ஏனைய விடயங்கள்
வெள்ளி, சனி
9.00 → 3.00 மணிவரை
அலுவலக பணியாளர்
வெள்ளி, சனி
9.30 → 2.30
ஏனைய பரீட்சைகளுக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

நத்தார் - புதுவருட
அதிரடி விலை குறைப்பு
அனைத்துத் தளபாடங்களுக்கும் நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு அதிரடி விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது.
தெரிவுக்கு முந்துங்கள்...!
மங்களா காட்சியறை
536, K.K.S வீதி, யாழ்ப்பாணம்
(மனோகரா சந்தி அருகில்) T:P: 021 222 8367

# தொடரை வென்றது மேற்கிந்தியத் தீவு!




பங்களாதேஷுக்கு எதிரான ரி-20 தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முன்னதாக முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு ஆட்டத்தில் வெற்றிபெற்றிருந்தமையால் இறுதியாட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கே கிண்ணம் என்ற நிலை இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லூயிஸ் 36 பந்துகளில் 89 ஓட்டங்களைக் குவித்து ஆச்சரியப்பட வைத்தார். 4 பவுண்டரிகள், 8 சிக்சர்கள் என்பன அவரின் இன்னிங்ஸில் உள்ளடங்கின. அவரைவிட பூரன் 29 ஓட்டங்களையும், ஹோப் 23 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் சகிப் அல் ஹசன், மகமதுல்லா, ரகுமான் மூவரும் தலா மூன்று இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 140 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆரம்ப வீரர் டாஸ் பெற்ற 43 ஓட்டங்களே அதிகபட்சம். ஹெய்டர் 22 ஓட்டங்களையும், மிராஸ் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பவுல் 5 இலக்குகளையும், அலின் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (ம)

Techno World
(வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்)
A/L 2021 தொழில்நுட்பப் பிரிவு
ஆரம்ப விழாவிற்கு (ORIENTATION) வருகைதந்த மாணவர்களுக்கு நன்றி.
வகுப்புகள் ஆரம்பம்
24.12.2018 திங்கட்கிழமை 8.00 மணி
- 077 017 5346

திரு.ஷாம்சன் அவர்களின் மூன்றுமாத
SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர் மற்றும் இளைஞர் யுவதிகள் உயர்கல்வி மாணவர்கள் இணைந்துகொள்ளமுடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 05.01.2019 சனி
1. காலை : 08-10
2. காலை : 10-12
3. மதியம் : 01-03
4. மாலை : 03-05
31.12.2018 இற்குமுன் பதிவுகளை மேற்கொள்வோருக்கு திரு.ஷாம்சன் அவர்களின் 16 பாடப்புத்தகங்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் இலவசம்.
சரளமாக ஆங்கிலம்பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்கப்படும்.
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
021 222 4282
077 621 4567

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.